Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24 ரூபா 30.00
ஜூன் 05 - 11, 2014

# வாரமலர் தினமுரசு

PUBLIC LIBRARY JAFFNA



கோச்சடையான் திரை விமர்சனம்

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL

1069

ஒரு பார்வையாளனின் மதிப்பீடு...

# வடக்கின் நிழல் பாராளுமன்றம்!



## நைஜீரிய பயங்கரவாதமும் அமெரிக்க தலையீடும்



## உள்ளூர் விமானப் போக்குவரத்து வெற்றியளிக்குமா?

## வழிபாடுகள்

செய்வினை பாதிப்புக்கு குலதெய்வக் குற்றமும் காரணமாக இருக்கலாம். செல்வம் வரும்போது குலதெய்வத்தை மறந்துவிடுவதே இதற்குக் காரணம். எனவே குடும்பத்தோடு குலதெய்வத்தை மூன்று பௌணர்மிக்கு நேரில்சென்று வழிபட்டுவந்தால் ஒருவர் செய்த செய்வினை உங்களை பாதிக்காது. ஒரு சனிக்கிழமையில் உங்கள் பகுதியில் அமைந்துள்ள சிவன் கோவிலுக்குச் சென்று அங்குள்ள நவக்கிரகங்களுக்கு தேங்காய்-9, நாட்டு வாழைப்பழம்-18, கொட்டைப்பாக்கு-18, வெற்றிலை -18, கதம்பப்பூ- ஒன்பது முழம். பூஜைப் பொருட்களைக் கொண்டு வழிபாடு செய்தால், உங்களுக்குக் கெடுதல் செய்யவைக்கப்பட்ட செய்வினை நீங்கும்.

செய்வினை தோஷத்தை விரட்டும் மற்றொரு பரிகாரம் வருமாறு:- முதலில் குலதெய்வத்துக்குக் காணிக்கை எடுத்து வைக்கவேண்டும். 27 எலுமிச்சைப் பழம் எடுத்து, அதனைச் சாறு பிழிந்து ஒரு பாத்திரத்தில் எடுக்கவேண்டும். (சாறோடு தேவையான அளவு தண்ணீர் கலந்து வைத்துக்கொள்ளலாம்) பிழியப்பட்ட சாறை, உங்கள் வீட்டைச் சுற்றியும், வியாபார இடத்தைச் சுற்றியும் வெளிப்புறமாக ஊற்றுங்கள் சாறு பிழியப்பட்ட எலுமிச்சைத் தோல் களை உங்கள் வீட்டு முன்புவைத்து, அதனோடு 27 அரசங்குச்சிகளைச் சேர்த்து எரிக்கவேண்டும். அது சாம்பலானபின், அந்த சாம்பலை உங்கள் வியாபார ஸ்தலம், உங்கள் வீடு முதலிய இடங்களில் தூவி விடுங்கள். செய்வினை பறந்தோடிவிடும்.
யோக நரசிம்மரின் படத்தை வீட்டில் வைத்து தினமும் காலையில் நீராடிய பின்பு 12 தடவை வலம்வந்து வணங்கி வாருங்கள்.

## நம்பி வாழ்வோம்

ஆன்மீகம்

இயேசுவின் உயிர்ப்புக்கும் அவரது இரண் டாம் வருகைக்கும் இடைப்பட்ட காலம் மிகக் குறுகிய காலம். இயேசு குறிப்பிடும் "சிறிது காலம்" இதுவே.

இச்சிறிது காலம் துன்பம் நிறைந்த காலம் என இயேசு குறிப்பிடுகிறார். அழுகையும் புலம்பலும் உள்ள காலம். பேறுகால வேதனையோடு அதனை ஒப்பிடுகிறார். ஆயினும் இறைவனோடு உள்ள உறவில் வாழ்வோருக்கு, இச்சிறிது காலம் பேறுகாலம் போல கொடிய வேதனை நிறைந்த ஒன்றாக இருந்தபோதிலும் இறுதியில் அது பெருமகிழ்ச்சி தருகின்ற ஒன்றாகவும் இருக்கும். பிள்ளையைப் பெற்றெடுத்தபின், வேதனையுற்ற தாய் மகிழும் மகிழ்ச்சிக்கு ஈடாகும்.

நம் வாழ்க்கையில் நாம் துன்புறும் காலம் சிறிது காலம் என்று எண்ணுவோம். இச்சிறிது காலம் சீக்கிரமே மாறிவிடும் என்று எதிர்பார்ப்போம். இச்சிறிது காலத்தின் துன்ப துயரவேளை களில் ஒருபோதும் இயேசுவை விட்டுப்பிரியாது, அவரோடு எப்போதும் தங்கி இருக்குமாறு பார்த்துக்கொள்வோம். அப்போது நம் துன்பம் இன்பமாக மாறும். நம் வேதனை பிள்ளையைப் பெற்ற தாயின் மகிழ்ச்சிக்கு ஒப்பாகும். இக்கட்டு காலத்தில் இயேசு வோடு இருந்தால், "கேட்டதையெல்லாம் அவர் உங்களுக்குத் தருவார்" என உறுதியாக நம்பி வாழலாம்.

## 'ஷிர்க்' கில் இருந்து விடுபடுவோம்

'ஷிர்க்' என்றால் என்ன? இணையாக்குதல் என்பதே இதன் கருத்தாகும். அல்லாஹ்வின் தெய்வீகத் தன்மையில் எவருக்கேனும் எச்சக்திக் கேனும் பங்குண்டு என நம்புதல். இத்தகைய எண்ணத்தைப் பிரதிபலிக்கும்வகையில் நடத்தல் இணைவைத்தல் எனப்படும்.

இணை வைத்தல் எல்லாவற்றையும் சிருஷ்டித்து பரிபாலித்துவருகின்ற அல்லாஹ்வுக்கும் உண்மை க்கும் எதிராக மேற்கொள்ளப்படுகின்ற பெரும் அநியாயமாகும்.

ஏனெனில், வணங்குவதற்கும் வழிபடுவதற்கும் உதவி தேடுவதற்கும், பிரார்த்திப்பதற்கும் தகுதி படைத்தவன் அல்லாஹ் ஒருவனே.

இவ்வாறிருக்க, அல்லாஹ்வால் படைக்கப்பட்ட ஏனையவற்றை நேசிப்பது மனிதன்செய்யும் மாபெரும் தவறு. அல்லாஹ்வுக்கு செய்யும் அநியாயமும்கூட. ஆகவே நாம் 'ஷிர்க்'கில் இருந்து விடுபடுவோம்.

**எம்.சீ.கலீல், கல்முனை -05.**

## கவிதைப்போட்டி 1066



### மன்னிப்பு

பாராட்டுக்குரியது

கழுகுப் பார்வை
கடும் கோபமோ
கருணையோ தெரியாதெனக்கு
தலையை உயர்த்தி
தயவாய் கேட்கிறேன்
இருவரும் நாம்
இறைவன் படைப்புக்கள்
இரையாக்கிவிடாதே என்னை
மண்ணில் வாழ மன்னிப்பு
வழுங்கு.

எம்.சி.கலீல்.
கல்முனை - 05.

### மாறாத் தத்துவம்

பரமசிவன் கழுத்துப் பாம்பு
கருடன் கால் பிடியில்
கருடா சுகமா என்றது
பாம்பு அன்று.
பாம்பே சுகமா என்றது கருடன்
இன்று.
மாறும் வாழ்வின்
மாறாத் தத்துவம் இது.

ஏ.எம்.கமால், புத்தளம்.

### வல்லவனுக்கு வல்லவன்...

பாம்பைக் கண்டால்
படையும் நடுங்கும் என்பது மாறி
கழுகின் கால்களுக்குள்
மாட்டியழும் இவ்வரவம்
வல்லவனுக்கு வல்லவன் இந்த
வையகத்தில் உண்டு என்பதற்கு
நல்ல அத்தாட்சி.

K.M.A.அஸீஸ், சாய்ந்தமருது -II.

### பசியும் பலியும்

விண்ணில் உலவும்
கருடனுக்கும்
மண்ணில் வாழும் விஷப்
பாம்பினுக்கும் பகையேதுமில்லை
தன் போசனத்திற்கு
வகை தேட வலம் வந்த
பொல்லா பறவைக்கு
கிடைத்த இரைதானிது
பகுத்தறிவு மனிதர்க்கு
பொருந்துமோயிது.

கிண்ணியா, முத்தாலிப்

### நான் வாழ்ந்திடவே!

கோபுர உச்சியில் இருந்தாலும் - உன்
கொடூரப் பார்வையால்
கொன்று கிடக்கும் மாமிசத்தையும்
மிச்சமின்றி புசிக்கும் கருடனே
கொஞ்சம் பொறுத்திருப்பாயா.
பற்றைக்குள் ஒளிந்து
புற்றுக்குள் பூச்சியைப்
புசித்து வாழும் என் இச்சிறிய மேனியா
உன் பசிதீர்க்கப் போகிறது.

இளம்பிறை யோகன்,
புத்தளம்.

### தப்புமா?

கழுகின் காலில்
சிக்கிய அரவம்
உயிர் தப்பாது
அமெரிக்க கழுகின்
பிடியில் சிக்கிய
நாடுகள் சின்னா பின்னம்
சீனக் கழுகின் பிடியில்
சிக்கிவிட்ட நம் தேசம்
சிக்கலின்றித் தப்புமா?

அ.சந்தியாகோ, கண்டி.

## கவிதைப் போட்டி இல 1069



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 16.06.2014

கவிதைப் போட்டி இல. 1069 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## உங்கள் பக்கம்

### பேரூந்துகளில் அநாகரிகம்

அண்மைக்காலமாக முல்லைத்தீவு பஸ் நிலையத்திலும் அங்கிருந்து வெளிமாவட்டத்திற்கு செல்லும் பஸ்களிலும் சில இளைஞர்கள் அடிக்கடி அவதானிக்கப்படுகின்றனர்.

அவர்கள் குறித்த பேரூந்துகளில் பயணம் செய்கின்ற பெண்கள், பாடசாலை மாணவிகளுக்கு தொல்லைகளை ஏற்படுத்திவருகின்றதோடு அநாகரிகமா முறையில் நடந்துகொண்டு தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டுவருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறானவர்களின் செயற்பாட்டை பொறுத்துக்கொள்ள முடியாத பயணிகள் இவர்களை தட்டிக்கேட்க முயற்சித்தால் தங்களை இராணுவப் புலனாய்வாளர்கள் என்று அடையாளப்படுத்தி தட்டிக் கேட்போரின் வாயை மூடுகின்ற சம்பவங்களும் நடந்தேறியிருக்கின்றன.

இதனால் இளம் பெண்கள், மாணவிகள் ஆகியோர் பேரூந்துகளில் பயணிப்பதற்கு அஞ்சுகின்ற நிலைமை காணப்படுகின்றது. இதுதொடர்பில் பேரூந்து நடத்துனரிடம் முறையிட்டாலும் அவர்கள், நடவடிக்கையெடுக்கத் தயங்குகின்றனர்.

எனவே, இவ்வாறானவர்கள் தொடர்பில் பொலிசாரும், இராணுவப் புலனாய்வாளர்களும் தமது கூடிய கவனத்தைச் செலுத்தி சம்பந்தப்பட்டவர் களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் ஒட்டுமொத்த இராணுவத்திற்கும் அவப்பெயரும் மக்கள் மத்தியில் நம்பிக்கையீனமும் வலுவடைய வழிவகுத்துவிடும்.

**எம்.சாமனி, முல்லைத்தீவு**


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com





## பாராட்டுக்கள்!

முரசுக்கு வணக்கம்.

சென்ற வாரமலரில் மோடியின் பற்றிய இரு கட்டுரைகள் பிரசுரமாயிருந்தது. அதில், இந்திய வெளியுறவுக் கொள்கை ஒரு பார்வை என்ற கட்டுரை அருமையான விளக்கங்களுடன் வெளியாகியிருந்தமை வரவேற்கக் கூடியது. மோடி பற்றிய விரிவாக வழங்கிக் கொண்டிருக்கிறது முரசு. இவ்வாறான கட்டுரைகளை வேணு கிருஷ்ணா தரவேண்டுமென்பதே எனது விருப்பாகும்.

இ.சர்வா, கிளிநொச்சி.

## வாசகர் சாலை

### பொக்கிஷமே!

என் நெஞ்சத்தில் பூத்த
பொக்கிஷமே!
வியாழன்தோறும் உன் வருகைக்காக
காத்திருக்கும் நெஞ்சங்களில்
நானும் ஒருவன்.
உன்னை என்னில்
சிறைப்படுத்திவிட்டேன்.
நிறையானாலும், குறையானாலும்
உன்னை யாசிக்கத் தவறவில்லை நான்.
எப்போதும் உனக்காகவே
காத்திருப்பேன் முரசே!

மு.பாரதி, திருநெல்வேலி.

### மாறுதல் தேவை

பல்சுவை அம்சங்களை சுவைபட. அறிவுபட வழங்குகிறது. முரசை இன்னும் மெருகூட்டவேண்டும். அண்மைய நாட்களாக முரசின் விறுவிறுப்பு குறைந்து காணப்படுகிறது. 24 ஆம் பக்கத்தில் விளம்பரத்தைக் காணக்கூடியதாகவிருக்கின்றது. அப்பக்கத்தில் வரும் தகவல்களை உள் பக்கங்களில் ஒன்றில் பிரசுரிக்கலாமே. அதை முரசு கவனத்தில் எடுக்காது யார்விட்ட பிழை. முரசின் தன்மையில் மாறுதல் தேவை.

எம்.சமீர், வாகரை


### அமைதியின் சொற்கள்

வாழ்க்கை என்பது ஒரு முறை ஏற்படும் சம்பவம் என்று தெரியுமா? அதில் வெற்றி பெறு. ஒவ்வொரு மூச்சும் ஒரு முறை நிகழும் நிகழ்வே.

- பிரேம் ராவத்

அமைச்சர் டக்ளஸின் சிந்தனையில்

# பனைவள ஆராய்ச்சி மாநாடு



பனைவள ஆராய்ச்சி ஊடாக பனைவளம் சார்ந்த கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யும் தொனிப்பொருளில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் வழியாக பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஏற்பாட்டில் மாபெரும் மாநாடு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வெகுவிமர்சையாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பனை அபிவிருத்தி சபையின் கீழான பனை ஆராய்ச்சி நிறுவனத்திற்கூடாக பனைவளத்தை சர்வதேச தரத்திற்கு மேம்படுத்துவதே தமது நோக்கம் என்று தெரிவித்தார்.

மேலும் 2010ஆம் ஆண்டில் இந்தியாவிற்குச் சென்றிருந்த வேளை இந்தியத் தலைவர்களுடன் மேற்கொண்ட பேச்சுக்களின் பலனாகவே பலகோடி ரூபா பெறுமதியான வேலைத் திட்டங்கள் வடமாகாணத்திற்குக் கிடைக்கப் பெற்றதாகப் பெருமையுடன் தெரிவித்த அமைச்சர் மிகவிரைவில் இந்திய அரசின் நிதியுதவியுடன் நவீன வசதிகளைக் கொண்ட கலாசார மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டப்படவுள்ளமையைச் சுட்டிக்காட்டினார். இவை எல்லாம் இணக்க அரசியலுக்கூடாகவும் அரசிற்கும் தமக்கும் உள்ள புரிந்துணர்வுக்கூடாகவும் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திச் செயற்திட்டங்களில் ஒரு பகுதி என்பதைச் சுட்டிக்காட்டினார்.

மேலும் பனை அபிவிருத்தி சபையின் ஊடாக மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக முன்னின்று உழைத்த அமரர் கே.சி.நித்தியானந்தா அவர்களை நினைவுகூரப்பட்டது. இந்நிகழ்வில் ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் சமர்ப்பித்த ஆராய்ச்சியாளர்களுக்கு சான்றிதழ்களும் கேடயங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# குஷாந்தன் மாஸ்டர் கைது

## பின்னணியில் நடந்தது என்ன?



"மலேசியாவில் விடுதலைப் புலிகள் மூவர் கைது செய்யப்பட்டனர்" என்ற செய்தி இந்த வாரம் ஊடகப் பரப்பில் பரபரப்பாக பேசப்பட்ட விடயம். மலேசிய ஊடகங்களின் ஊடாகத்தான் செய்தி வெளியானது. எனினும், அதை கொஞ்சம் அடக்கிவாசிக்க விரும்பியது இலங்கை புலனாய்வுத்துறை.

காரணம், அந்த மூவரில் தாங்கள் ஆசியா, ஐரோப்பா என்று வலை வீசிக்கொண்டிருந்த ஒருவர் சிக்கிக்கிக் கொண்டுள்ளார் என்பதை அறிந்துகொண்டார்கள்.

அந்த முக்கிய புள்ளியை இலங்கைக்கு கொண்டு செல்வதற்குமுன் வேறு இடையூறுகள் ஏதும் வரக்கூடாது என்பதில் இலங்கை தரப்பு கவனமாக இருந்தார்கள். கைது விஷயத்தில் அவர்கள் அடக்கி வாசித்த காரணம் அதுதான்.

ஆனால், கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவரான குசாந்தன் பற்றி பெரிதாக எவரும் அறிந்திருக்கவில்லை. எனவே, அன்பரசன் புலிகளின் உளவுப்பிரிவில் இருந்தவர். என்றபடியால், முக்கியமாக நபராக இருக்கலாம் என்று பலரும் நம்பினர்.

இப்படியான நிலையில், மூவரையும் கொழும்பு கொண்டு வந்துவிட்டனர், இலங்கை அதிகாரிகள். பின்னர்தான், குஷாந்தன் யார் என்பதை சிலர் தெரிந்து கொண்டார்கள். பலருக்கு இன்னமும் விளங்கவில்லை. இந்தக் கட்டுரையை படித்தால், ஓரளவு தெளிவு கிடைக்கும்.

இறுதி யுத்தம் முடிந்தபின்னர் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் குஷாந்தன் பற்றி விபரங்களும் அவரின் முக்கியம் பற்றியும் புலனாய்வுத் துறை அறிந்துகொண்டது. அதனால் சில வலைகளையும் வீசியது. குஷாந்தன் மாஸ்டருக்கு இயக்கத்தில் மற்றொரு பெயர், முல்லைச்செல்வன். நிஜ பெயர், சுந்தரலிங்கராஜா குஷாந்தன். ஜூன் 5, 1969-ல் பிறந்தவர். சொந்த ஊர், தென்மராட்சியில் மீசாலை. 1994இல் புலிகள் அமைப்பில் இணைந்துகொண்டுள்ளார். புலிகள் அமைப்பில் குஷாந்தன் மாஸ்ரர், முல்லைச்செல்வன் உள்ளிட்ட பெயர்களினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளார். சரத்பாபு 6 பயிற்சிமுகாமில் பயிற்சிபெற்று இம்ரான் பாண்டியன் படையணியில் இணைந்தபோதும், சில மாதங்களிலேயே விமானப்படையில் இணைக்கப்பட்டிருந்தார்.

இவர், விமானம் தொடர்பான பயிற்சிபெற முதலில் தாய்லாந்துக்கும், பின் கனடாவுக்கும் அனுப்பப்பட்டவர். இதனால், யுத்தம் முடிந்தபின் இவரால் சுலபமாக ஏதோ ஒரு வெளிநாட்டுக்கு சென்றுவிட முடியும் என்று ஊகித்தது புலனாய்வுத்துறை.

ஐரோப்பாவரை போனால், எங்கே போவார் என ஒரு ஊகம் இருந்தது. அதையடுத்து, பிரிட்டிஷ் உளவுத்துறைமூலம், பிரிட்டனில் இருந்த ஒரு வீடுமீது கண்வைத்திருந்தார்கள். அந்த வீட்டில் இருந்தவர், வான்புலிகள் பிரிவை தோற்றுவித்த கேணல் சங்கரின் மனைவியின், சகோதரி (குஷாந்தனின் மனைவிக்கு சித்தி முறையானவர்). அதற்குமேல் அவருக்கு புலிகள் விவகாரத்தில் வேறு முக்கியத்துவம் கிடையாது.

ஏற்கனவே விமானம் தொடர்பான பயிற்சிகளை தாய்லாந்திலும், கனடாவிலும் பெற்றிருந்த நிலையில், 2004-ம் ஆண்டு இவரை மீண்டும் மேற்படிப்புக்காக மலேசியா அனுப்பினார் பிரபாகரன். அங்கே எலக்ட்ரோனிக்ஸ் இஞ்சினியரிங் படித்துவிட்டு, 2007-ல் இலங்கை திரும்பினார் குஷாந்தன் மாஸ்டர்.

வன்னிக்கு வந்தவர், வான்புலிகளில் இணைந்தவர்களுக்கு பயிற்சியும் கொடுத்தார். புலிகள் வைத்திருந்த இலகுரக பயணிகள் விமானத்தை குண்டுவீசும் விமானமாக மாற்றி அமைத்ததிலும் இவரது பங்களிப்பு முக்கியமாக இருந்தது.

தற்போதுள்ள தகவல்களின்படி, வான்புலிகள் தாக்குதல் நடத்திய எந்த விமானத்தையும் இவர் செலுத்தி செல்லவில்லை என்றுதெரிகிறது. ஆனால், அந்த விமானத் தாக்குதல்களை திட்டமிட்டுக் கொடுத்தவர் இவர்தான்.

இறுதி யுத்தம் முடிவதற்கு முன்பே, வான்புலி விமானங்கள் 2009-ம் ஆண்டு பெப்ரவரி 20-ம் திகதி சுட்டுவீழ்த்தப்பட்டுவிட்டன. அதன்பின் வன்னியில் இருப்பது பயனற்றது என்பதால், மனைவியுடன் நாட்டைவிட்டு வெளியேறி, தமிழகம் சென்றார். அங்கிருந்து லண்டன் சென்றுவிட்டார் குஷாந்தன்.

மனைவியின் தாய் குகா அக்கா(கேணல் சங்கரின் மனைவி), பிரபாகரனின் மனைவி மதிவதனியின் நெருங்கிய தோழி என்பதால், இறுதிவரை அவர்களுடனேயே இருந்து, மதிவதனி போலவே வன்னியில் மரணமடைந்தார்.

லண்டனில் இவர்கள் வந்து சேர்ந்ததை, அங்கே இவரை மோப்பம் பிடித்துக்கொண்டிருந்த பிரிட்டிஷ் உளவுத்துறையின் ஊடாக, இலங்கை புலனாய்வுத்துறை தெரிந்து கொண்டது.

மனைவியை லண்டனில் விட்டுவிட்டு, மலேசியா சென்றார். அங்கிருந்து புலிகளின் வெளிநாட்டு பிரிவுடன் தொடர்பில் இருந்து, சிலவேலைகளை செய்யத் தொடங்கினார்.

அதையடுத்தே 'அவரை தூக்குவது' என இலங்கை உளவுத்துறை முடிவுசெய்தது. இன்டர்போலுக்கும், மலேசிய பயங்கரவாத தடுப்பு பிரிவுக்கும் இவர் பற்றிய தகவல்களை கொடுத்துவிட்டு மோப்பம் பிடித்துக் கொண்டிருந்தது.

இந்நிலையில், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மலேசியாவில் கைதுசெய்யப்பட்டு தற்போது விசாரிக்கப்பட்டு வருகின்ற நந்தகோபன், மலேசியாவில் குறித்த மூவரும் இருப்பது பற்றிய தகவல்களை வழங்கியதாகவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதுஎப்படியோ, தற்போது கைதுசெய்யப்பட்டுள்ள குஷாந்தன் மாஸ்டரிம் நடத்தப்பட்ட விசாரணைகளில் பல விஷயங்கள் தெரியவந்துள்ளதாகவும், வெளிநாடுகளில் உள்ள யார் யாருக்கு என்ன தொடர்புகள் உள்ளன என்ற விபரங்களை இவர் கூறியுள்ளார் எனவும், தெரியவருகிறது.



ரிஷி

வாரமலர்
# தினமுரசு
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## இறுதி வாய்ப்பு

அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தினாலும், பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்கப்போவதில்லை. இவ்வாறு அரசு தற்போது கூறியுள்ளது.

இலங்கையின் கடந்த மூன்று தசாப்த கால அனுபவத்திலிருந்து சில படிப்பினைகளை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கும் எவரும் பொலிஸ் அதிகாரங்கள் மாகாணங்களுக்கு வழங்கப்படமாட்டாது என்பதற்காக பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதையே நிராகரிக்க மாட்டார்கள்.

மாகாண சபைகளுக்கு முழுமையான அதிகாரப்பகிர்வை வழங்கக்கூடியதும், தற்போதைய எமது அரசியல் யாப்பில் முழு இலங்கை மக்களாலும் ஏற்றுக் கொள்ளக்கூடியதுமான அரசியல் சட்டமாகவும் இருக்கும் மாகாண சபை முறையை அதன் முழுமையோடு ஏற்றுக் கொண்டு முன்னோக்கிச் செல்வதே இன முரண்பாட்டை தீர்வுக்குக் கொண்டுவந்து ஐக்கிய இலங்கையை ஒற்றுமையின் அத்திவாரத்தில் கட்டியெழுப்ப போதுமானதாகவுள்ளது.

13ஆவது திருத்தச் சட்டத்தின் முழுமையான அமுலாக்கம் எனும்போது, வடக்கும் கிழக்கும் இணைந்த ஒரு மாகாணம் என்பதே அதில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். ஆனால் அந்த நிலை தற்போது மாற்றமடைந்துள்ளது. வடக்கும், கிழக்கும் தற்போது இரு மாகாணங்களாக உள்ளன.

தமிழ் மக்களின் தாயகப்பகுதியானது இரு மாகாணங்களாக இருப்பதா? இணைந்தேதான் இருக்கவேண்டுமா? என்பதை தற்போது விவாதப் பொருளாக்கத் தேவை இல்லை. கிழக்கு மாகாண மக்கள் தாம் தனியான மாகாணமாக இருப்பதையே விரும்பவும் செய்கின்றனர்.

அதற்குக் காரணம், பெரும்பாலும் தமிழ் இனவாதத்தையும், இன முரண்பாட்டையும் அரசியல் மூலதனமாகக்கொண்டு, மத்திய அரசையும், அதன் இயந்திய அமைப்பையும், மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைப்புகளையும் நிராகரிப்பதோடு, அவற்றை முடக்கிப் போடுவதற்கே அதன் அதிகாரங்களையும் பெறுகின்ற தமிழ்த் தேசிய பயங்கரவாதிகளிடம் கிழக்கு மாகாணமும் சிக்கி சின்னாபின்னமாகிவிடக்கூடாது என்பதே பெரும்பாலான கிழக்கு மக்களின் அபிப்பிராயமாக உள்ளது.

இவ்வாறான நிலையில் மத்திய அரசின் தலையீட்டுக்கும், ஆளுனர்களின் அநாவசிய மூக்குநுழைப்பிற்கும் முற்றுப் புள்ளி வைக்கின்ற விதமான அதிகாரமையமாக மாகாண சபை இருக்க வேண்டியதே அவசியமாகும் என்ற கோரிக்கைகள் நியாயமானது.

பாராளுமன்றத் தெரிவையே கூறிக் கொண்டிருந்த இலங்கை அரசு, தற்போது நேரடியாக பதின்மூன்றாவது திருத்தம்மீது மீண்டும் திரும்பியிருப்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

இந்தியப் பிரதமர் மோடியின் வேண்டுகோளை மறுக்கமுடியாத இலங்கையின் வெளிப்பாடாகவும், பிராந்தியம் குறித்த மோடியின் கவலைகளை மேலும் அதிகரிக்கச் செய்வதன் விளைவுகளை புரிந்து கொள்ளமுற்படுவதன் வெளிப்பாடாகவும் இதைப் பார்க்கலாம்.

இந்தப் பொழுதில் தமிழர் தரப்பும் யதார்த்தத்தைப் புரிந்து மோடி, இலங்கை அரசு என்ற இருதரப்பையும் அணுகவேண்டியது அவசியமாகும். தற்போதைய வாய்ப்பானது இறுதி வாய்ப்பாகவும் இருக்கலாம்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.



ஒருங்கிணைப்புக் கூட்டத்தை அரசியல் மேடையாக யாரும் மாற்ற எத்தனிக்கக்கூடாது. இங்கே அரசியல் பேதங்களுக்கு இடமில்லாமல் மக்களின் வாழ்க்கை மேம்பாடு, மாவட்டத்தின் அபிவிருத்தி என்பவற்றை மனதில் கொண்டே முன்மொழிவுகளையும், விவாதங்களையும் செய்யவேண்டும். அதுவே ஆக்கபூர்வமாக அமையும்.

# வடக்கின் நிழல் பாராளுமன்றம்!

## ஒரு பார்வையாளனின் மதிப்பீடு...

யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்குச் செல்லக்கூடிய வாய்ப்புக்கிடைத்தது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும், வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களும் அக்கூட்டத்தின் இணைத் தலைவர்களாகவும், மாவட்டங்களின் அரச அதிபர்கள் அதன் செயலாளர்களாகவும் இருந்து இக்குழுக் கூட்டங்களை நடத்துகின்றனர்.

இதில் மாவட்டங்களின் பாராளுமன்ற உறுப்பினர்களும், வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களும், பிரதேச செயலாளர்களும், (உதவி அரசாங்க அதிபர்கள்) அலுவலகங்கள், திணைக்களங்கள் மற்றும் அரச பணியகங்களில் பணியாற்றும் அரச அதிகாரிகள், மாவட்டங்களில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், எதிர்க்கட்சித் தலைவர் என அத்தனைபேரும் பங்குகொள்கின்றனர்.

ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதம் இங்கே இல்லை. அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்படுகின்றது. பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் மக்களுக்கு தேவையான நலத் திட்டங்களை செய்த முடிப்பதே இக்கூட்டத்தின் நோக்கமாக உள்ளது.

அரசாங்கம் மாகாண சபைகளை மீறி தனது வேலைத் திட்டங்களை மாவட்டங்களில் செய்வதற்கு எண்ணியிருந்தால் இவ்வாறான கூட்டங்களுக்கு மாவட்டத்தின் தலைமை அமைச்சரையும், அரச அதிபரையும், அதிகாரிகளையும் மட்டும் இவ்வாறான கூட்டங்களை நிச்சயமாக நடத்தமுடியும்.

ஆனால், இங்கே மத்திய அரசாங்கமும் மாகாண அரசும் இணைந்து திட்டங்களை வகுத்து செயற்படுத்துகின்ற பொறிமுறை வகுக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இதற்குரிய நிதி மூலமானது மத்திய அரசினுடையதாகவே இருக்கின்றது.

மாகாண சபைக்கு வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்படுகின்ற நிதி இதில் செலவு செய்யப்படுவதில்லை. அது மட்டுமல்லாமல் திட்டங்களை செயல்வடிவமாக்குகின்றவர்கள் அரச அதிகாரிகள் மட்டும்தான். ஆகவே திட்டங்கள் தொடர்பான கேள்விகளுக்கு பதிலளிக்கவேண்டிய கடமையும் அரச அதிகாரிகளுக்கு உண்டு.

வட மாகாணத்தின் முக்கியமான இன்னொருவராக இருக்கும் மாகாண ஆளுநர் இக்கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை. வடக்கு மாகாண சபைக்கு தேர்தல்கள்மூலம் மக்கள் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டு முதலமைச்சர் ஒருவர் தெரிவு செய்யப்படும் வரை மாகாணசபை நிர்வாகத்தின் பொறுப்புக்குரியவராக ஆளுநரே இருந்த காரணத்தால் முன்னைய ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களில் மாவட்டத்தின் முக்கிய அமைச்சர் என்றவகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும், ஆளுநரும் இணைத் தலைவர்களாக இருந்து இவ்வாறான ஒருங்கிணைப்புக் கூட்டங்களை நடத்தினார்கள்.

இப்போது முதலமைச்சர் ஒருவர் இருக்கின்றபடியால், ஆளுநர் இணைத் தலைவராக இருக்கமுடியாது என்ற சட்டப் பரிந்துரைக்கு அமைவாக அவர் விலகிக்கொள்ள முதலமைச்சர் விக்கினேஸ்வரன் இணைத் தலைவராக இருக்கின்றார்.

ஒருங்கிணைப்புக் குழுவின் நோக்கம் என்ன? என்பதை அக்கூட்டத்தில் கலந்துகொண்டுள்ள அத்தனைபேரும் அறிந்து வைத்திருப்பார்கள் என்றே பெரும்பாலும் நினைக்கின்றேன். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அதிலும் ஆளுங்கட்சி, எதிர்ப்புக்கட்சி எனும் அரசியல் அணுகுமுறைகள் மிக அதிகமாகவே தலைதூக்குகின்றது. அதுவே இக்கூட்டத்தை கேலிக் கூத்தாகவும், நகைச்சுவை மேடையாகவும் அவ்வப்போது மாற்றிவிடுகின்றது.

ஒருங்கிணைப்புக் கூட்டத்தை அரசியல் மேடையாக யாரும் மாற்ற எத்தனிக்கக்கூடாது. இங்கே அரசியல் பேதங்களுக்கு இடமில்லாமல் மக்களின் வாழ்க்கை மேம்பாடு, மாவட்டத்தின் அபிவிருத்தி என்பவற்றை மனதில்கொண்டே முன்மொழிவுகள்ளையும், விவாதங்களையும் செய்யவேண்டும். அதுவே ஆக்கபூர்வமாக அமையும் என்று கூட்ட ஆரம்பத்திலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறி ஆரம்பித்து வைக்கின்றார். ஆனாலும் அமைச்சரின் இந்தக் கோரிக்கையை அநேகமான நேரத்தில் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் மீறிவிடுகின்றார்கள் என்பதை அவதானிக்கமுடிகின்றது.

மாவட்டத்தின் நீண்டகால வேலைத்திட்டம், நிகழ்கால வேலைத் திட்டம், அதனாலான நன்மைகள், தீமைகள் என்பவற்றை அறிவுசார்ந்து ஆராய்ந்து, ஆய்வுசெய்து எதிர் கொள்ளநேரிடும் நடைமுறைச் சிக்கல்கள், காலதாமதங்கள் என்பவற்றை ஆக்கபூர்வமான முன்மொழிவுகளைச் செய்வதே மக்கள் பிரதிநிதிகளின் கடமையாக உள்ளது.

இவ்வாறு முன்மொழியப்படுகின்ற திட்டங்கள், ஆலோசனைகளின் முன்னேற்றங்கள், தாமதங்கள், தடைகள் என்பவை தொடர்பில் மக்களின் பிரதிநிதிகள் கேட்கும் கேள்விகளுக்கு அதிகாரிகள் கட்டாயம் பதிலளிக்கவேண்டும். இதனாலேயே ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்கள் பெரும்பாலும் கேள்வியும், பதிலுமாகவே நடந்தேறுகின்றதையும் அவதானிக்க முடிகின்றது.

கேள்வி கேட்பதற்கான உரிமை மக்கள் பிரதிநிதிகளுக்கு உண்டு என்றபோதும், அக்கேள்விகளில், பெரும்பாலானவை தத்தமது அரசியல் சுயலாப நோக்கங்களை பிரதிபலிப்பதாகவும், அறிவுசார் ஆதாரங்கள் அற்றதாகவும் இருப்பது

அதிகாரிகளை எரிச்சலடைய வைத்திருக்கும். சில பொழுதுகளில் அதிகாரிகளை மிரட்டுகின்ற பாணியிலும் அந்தக் கேள்விகள் அமைந்துவிடுகின்றன.

அரசியல் பிரதிநிதிகளை பகைத்துக்கொள்ளாமல், அதேவேளை அவர்களின் அறியாமையான கேள்விகளுக்கு பதிலளிக்கவுமான நெருக்கடியை அல்லது சங்கடத்தில் சில அதிகாரிகள் எழுந்துநின்று மென்று விழுங்கிக் கொண்டிருப்பதையும் அவதானிக்கமுடிந்தது.

சில அதிகாரிகளோ, தமது செயற்பாட்டு திறனின்மையை பூசிமெழுகவும், பிரச்சினையை இன்னொரு பிரிவுமீது தள்ளிவிடவும் முயற்சித்தனர். சில அதிகாரிகள் கூட்டங்களின் முடிவில் நகைச்சுவையாக கூறிய விடயங்களைக் கேட்டு நானும் சிரித்தேன்.

அதாவது, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அவரது கட்சியினரும் நீண்டகாலமாக இவ்வாறான வேலைத்திட்டங்களுடனும், அதிகாரிகளாகிய எங்களுடனும் தொடர்பில் இருந்து வருபவர்கள். அவர்கள் நேரகாலம் இல்லாமல் தம்முடன் தொடர்புகளை மேற்கொண்டு வேலைத்திட்டங்கள் தொடர்பில் கேள்விகளைக் கேட்பார்கள், வேலைத்தளங்களுக்கு வந்து நின்றுகொண்டு அங்கும் பல கேள்விகளைக் கேட்பார்கள்.

எமது காரியாலயங்களில் இருப்பதைவிடவும் அமைச்சரின் அலுவலகங்களில், வேலைத் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல்கள், ஆலோசனைக் கூட்டங்களிலேயே அதிக நேரத்தை செலவுசெய்தோம். இதனாலேயே பல அரச அதிகாரிகள் தம்மை கேள்வி கேட்போர் அதிகாரத்தில் இருக்கக் கூடாது என்பதை மனதில்கொண்டு அமைச்சரின் கட்சிக்கு எதிராகவே பெரும்பாலும் வாக்களிப்பார்கள்.

கடந்த காலத் தேர்தல்களை அவதானித்தவர்களுக்கு இந்த உண்மையை புரிந்து கொள்ள முடியும்.

ஆனால் இப்போது, பானையிலிருந்து அடுப்பில் விழுந்த கதையாக, கூட்டமைப்பினர் மாகாண சபை அதிகாரத்தை பொறுப்பெடுத்தபின்னர் அவர்களும் எமது வேலைகளில் அடி, நுணி தெரியாமல் மூக்கை நுழைத்து பல அறியாமைக் கேள்விகளை கேட்கின்றனர்.

இதுவரை ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களை புறக்கணித்து வந்த கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தற்போது இவற்றில் கலந்துகொண்டு தமது ஆளுமையை எம்மீது திணிக்க முயற்சிக்கின்றனர். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெறுமனே கூட்டங்களில் கேள்வி கேட்பவராக மட்டும் இருக்கவில்லை. அவர் முடியுமானவரை எல்லா பொழுதுகளிலும் அதிகாரிகளோடு தொடர்பில் இருக்கின்றார்.

இதனால் அவரது கேள்விகளில் அடிப்படை இருக்கின்றது, அவருக்கு நாங்கள் கூறும் பதில்களில் உண்மை உண்டா என்பதையும், பொய் சொல்கின்றோமா? என்பதையும் அவரால் புரிந்துகொள்ள முடிகின்றது. கூட்டமைப்பினரோ இனி அடுத்த ஒருங்கிணைப்புக் கூட்டத்தின்போதே தற்போதைய கூட்டத்தின் முன்னேற்றங்கள் தொடர்பில் கேள்விகளை கேட்பார்கள். இதுதான் இங்கே சிக்கல் எங்களோடு சேர்ந்து பணியாற்றாமல் கேள்வி கேட்பதை மட்டும் செய்வோராக கூட்டமைப்பினர் மாறியிருப்பது தற்போது அதிகாரிகளாகிய எமக்கு எரிச்சலாக உள்ளது, என்றார்.

அதிகாரிகளின் ஆதங்கம் அதுவாக இருந்தாலும், அதிகாரிகள் எந்தத் தரப்பும் தம்மை கேள்வி கேட்பதை சுத்தமாக விரும்பவில்லை என்பதையே என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. அவர்கள் சுற்றுநிரூப கட்டளைகளுக்கேற்ப சுதந்திரமாக பணியாற்றுவதையே விரும்புகின்றனர். இதில் இருக்கும் வசதிகளையே பல அதிகாரிகள் துஷ்பிரயோகம் செய்கின்றனர். சிலர் அசமந்தமாகவும், சோம்பேறிகளைப் போலவும் செயற்படுவதையே தமது பணிச்சுதந்திரம் என்று நம்புகின்றார்கள்.

தனியார் துறையில் துரிதமாக நடைபெறும் பணிகளைப் போலல்லாமல், அரச பணியிடங்களில் மந்தகதியில் பணிகள் இடம் பெறுவதாக மக்களிடையே ஒரு குற்றச்சாட்டு இருந்துவருவதை மறுப்பதற்கில்லை.

மேற்படி ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவே திட்டங்கள் தொடர்பிலும், அதுதொடர்பான கேள்விகளை கேட்பதிலும் முதன்மைவகிப்பதை பார்க்க முடிந்தது. மற்றுமொரு தலைவரான முதலமைச்சர் விக்கினேஸ்வரன் அவர்கள் அமைதியாக நடப்பவற்றை அவதானித்துக் கொண்டிருக்கின்றார்.

(தொடர் 22 ஆம் பக்கம்)

மதியூகி
எக்ஸ்ரே ரிப்போர்ட்

# சாவின் வாசலில் துடிக்கும் உயிர்



**1991** இல் அக்காவோடு களமாடி வரலாற்றுச் சமரொன்றில் காயமடைந்து அவள் உயிர் போய்விட்டதென நம்பினார்கள். ஆனால் அக்கா மட்டுமே அவளுக்கு உயிர் இருப்பதை நம்பித் தன் தோழில் நீண்ட தூரம் காவிச் சென்று பிணமாகிக் கிடந்தவளுக்கு உயிர் கொடுத்திருந்தாள். அந்தத் தோழி பின்னர் குடும்பமாகி போராட்ட வாழ்வை விட்டு விலகியிருந்தாள். நீண்ட காலம் தொடர்புகள் எதுவும் இல்லாது போனது. அப்படியொரு உயிரைக் காத்ததைக் [illegible] அக்கா மறந்து போனாள்.

1991இல் அக்காவால் உயிர் காக்கப் பட்டவள் அக்காவின் நிலைமையைக் கேட்டாள். அன்றைக்கு அக்கா தந்த உயிரே இன்று அவளை அந்த இடத்தில் உயிரோடு நிறுத்தியிருந்ததையும் நினைவுபடுத்தி அக்காவுக்கு உயிரைக் கொடுத்தேனும் உதவுவேன் என முன்வந்தாள்.

அக்காவுக்கு கிடைத்த அந்தத் தோழி தனது உறவினர்கள்மூலம் அக்காவுக்கான சத்திரசிகிச்சையைச் செய்ய ஏற்பாட்டைச் செய்து இரவோடிரவாக கொழும்பு கொண்டு செல்லப்பட்டாள்.

சிகிச்சை முடிந்தால் ஆறுமாதங்கள் வரையில் அக்காவை மிகவும் கவனமாகப் பராமரிக்கவேண்டும். அதற்கான செலவை கட்டாயம் கருணையுள்ளம் படைத்தோர் யாராவது செய்வார்கள் என்ற நம்பிக்கையில் அந்தக் குடும்பம் அக்காவுக்கான சிகிச்சைக்கான பணத்தை தயார் செய்துள்ளார்கள்.

தனது மனைவியின் அருகில் போயிருக்கத் தேவையான பணமில்லாததால் அண்ணை ஊரில் போயிருந்து தனியே அக்காவிற்காக பிரார்த்தித்துக் கொண்டிருந்தார். உலகில் யாருக்கும் வரக்கூடாத துயரம் அண்ணைக்கு.

வீடு சென்ற அண்ணை திடீரென மயங்கி வீழ்ந்தார். காரணம் எதுவும் புரியவில்லை. தனித்தே வாழும் அந்த மனிதனுக்கு சுடுதண்ணீர் கொடுக்கக்கூட ஆளின்றி படுக்கையிலிருந்து எழ முடியாதுபோனது. தனது நிலைமையை அக்கா அறிந்தால் வேதனைப்படுவாள் என யோசித்து தான் சுகமாய் இருப்பதாய் பொய் சொல்லிவிட்டு அக்காவின் வரவிற்காய் காத்திருக்கிறார்.

19ஆம் திகதி காலை 9மணிக்கு சிகிச்சை நடக்குமென்றார்கள். 18.04.2014 மாலை அக்காவை அழைத்தேன். அவள் கதைக்கவே மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறாள். ஒவ்வொரு சொல்லை அவள் சொல்லும் போதும் நிமிடக்கணக்கில் அந்தரிக்கிறாள்.

ஆச்சி என்னால ஏலாதமனை... அண்ணையோடை கதையுங்கோ... அவர் பாவம்... நானில்லாட்டில் அவர் தனிச்சுப் போவர்... உங்கை ஜேர்மனியிலயும் எனக்கு சொந்தக்காரர் ரெண்டு பேர் இருக்கினம். அவைக்கெல்லாம் ரெலிபோன் எடுத்துப் பாத்தனான்... ஒருத்தரும் உதவ மாட்டமெண்டிட்டினம்... அம்மாச்சி என்ரை செல்லம் கடவுள்தான் உங்களையெல்லாம் எனக்குக் காட்டியிருக்கிறான்.

நேற்றைக்கு மட்டும் இனியெனக்கு சாவுதான் தப்பமாட்டனெண்டுதானணை நினைச்சனான்... ஆனால்... அக்காவால் பேசமுடியாது, குரல் மிகவும் சோர்ந்து போய்க்கொண்டிருந்தது. அண்ணையோடை எடுத்துக் கதையணை... அவர் பாவம் என்னோடை ஏலாதத்தோடை அலைஞ்சவர்.... பாவம் இப்ப தனிச்சு கிடக்கிறார்...!

அக்கா நீங்க யோசிக்காமல் படுங்கோ... நாளைக்கு எல்லாம் நல்லா முடிஞ்சு நீங்கள் திரும்பி வருவீங்கள்... உங்களுக்கு உதவிறதுக்கு இங்கை கனபேர் இருக்கினம். எல்லாரிட்டையும் கேட்பம்... உங்களை நாங்க கைவிடமாட்டம்... நிம்மதியா படுங்கோ... சொன்ன போது அக்கா அழுதாள்...

என்ரையம்மா என்னாலை ஏலாதாம் நான் படுக்கட்டே... அக்கா விடைபெற்றபோது இலங்கை நேரம் இரவு 9.40 ஆகியிருந்தது. நீ வருவாய் எங்கள் அக்காவாய் உனக்கான உதவியை புலம்பெயர்ந்து வாழும் கருணையாளர்கள் தருவார்கள், நிம்மதியாய் இரு என்று சொல்லிக் கொண்டு தொடர்பை துண்டிக்கிறேன்.

அவளது குரலும் அவள் மூச்செடுக்க சிரமப்படுவதும் காதுக்குள் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. நேற்றைய இரவு விடியும் வரையும் அக்காவின் சிகிச்சை முடிவு பற்றிய செய்தியையே கைபேசி எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

பொறுமை கடந்து அண்ணைக்கு தொடர்பெடுத்தபோது.... ஓம் பிள்ளை சொல்லணை என்ற தீனக்குரலில் அழைத்தார். அக்காவுக்கு என்ன மாதிரியண்ணை எல்லாம் முடிஞ்சுதே? இல்லையம்மா அவவுக்கு பிறசர் சரியா கூடீட்டுதாம் பிறசர் குறையத்தானாம் செய்வினம்...!

தனது தனிமை , தனது இயலாமை, தனது நோயின் வலி பற்றியெல்லாம் அண்ணை சொல்லிக் கொண்டிருந்தார். 21ஆம் திகதி அண்ணைக்கான அடுத்த மருத்துவ சோதனைக்குப் போகவேணும். ஆனால் போவதற்கு கையில் எதுவும் இல்லாது இருக்கிறார். ஏதாவது வழி செய்வமண்ணை நாளைண்டைக்கு போங்கோ என்றபோது சொன்னார். எனக்கு உதவாட்டில் காரியமில்லை மகள் அக்காவைக் காப்பாற்றுங்கோ... அக்காவுக்கு உதவுங்கோ...!

அண்ணையின் குரல் அழுகையாகி விக்கலெடுத்துத் தேம்பினார். பணமே எல்லாவற்றையும் எல்லாரையும் வாழ வைக்கும் பலமாகிய விதியை நினைக்க கோபம் இயலாமை விரக்தியென ஏதேதோ உணர்வுகள் கண்ணிலிருந்து கண்ணீராய் வழிகிறது.

யோசிக்காதையுங்கோ அண்ணை... அக்கா சுகமாகி கெதியில வருவா... காசுதானே இந்த உலகத்தில எத்தினை பேர் இருக்கினம்... இன்னும் மனிதமும் மனிதர்களும் சாகேல்லயண்ணை திங்கள் விடியக்கிடையில உங்களுக்கு மருந்துக்கு காசு வரும்...! சொன்னபோதும் அண்ணை அக்காவைத்தான் அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

[முற்றும்]

# புலிகளின் வதை முகாமில்



வதை 116

மணியம்

எமது புதிய விருந்தினர் வேலாயுதபிள்ளை சிறந்த தச்சு வேலைகாரர் என்பதைத் தெரிந்துகொண்ட புலிகள் அவரையும் பயன்படுத்த எண்ணினர்.

அவர் கைது செய்யப்பட்டதற்கான காரணம் ஒரு சிறிய விடயம் என்ற போதிலும், பெரிய ஒரு சதிகாரரை விசாரிப்பது போல, அவரது விசாரணையும் ஒரு பக்கம் தொடர்ந்தவண்ணம் இருந்தது. [illegible] விசாரணையின்போது எல்லோருக்கும் வழங்கப்படும் 'தான தருமங்களும்' அவருக்கும் முறைப்படி வழங்கப்பட்டது.

அதேநேரத்தில் புலிகள் புதிதாகக் கட்ட எண்ணிய விசாரணைக் கொட்டில்களை அமைக்கும் பணியையும் அவரைக் கொண்டு செய்வித்து வந்தனர். கடுமையான உடல் உழைப்பாளியாகிய அந்தத் தொழிலாளியும், சிறைச்சாலைக்குள் முடங்கிக் கிடப்பதைவிட வெளியே சென்று அந்த வேலையில் ஈடுபடுவதை ஓரளவு விரும்பிச் செய்துவந்தார்.

வழமைபோல ஒரு நாள் கொட்டில் அமைப்பதற்கான வேலைக்காக அழைத்துச் செல்லப்பட்டவர், சற்றுநேரம் கழித்து தலையிலிருந்து இரத்தம் சொட்டச்சொட்ட திரும்பவும் சிறைக்குள் அழைத்துவரப்பட்டார். உள்ளே இருந்தவர்களுக்கு இந்த மாதிரியான காட்சிகள் எல்லாம் பழக்கப்பட்டவை என்ற போதிலும், வேலாயுதபிள்ளைக்கு திடீரென என்ன நடந்தது என்பது வியப்பாக இருந்தது.

வேலாயுதபிள்ளைக்கு செய்யவேண்டிய முதலுதவிச் சிகிச்சைகளைச் (வேறு என்ன உப்புத் தண்ணீர் போடுவதுதான்) செய்தபின்னர், என்ன நடந்தது எனச் சிலர் இரகசியமாக அவரிடம் விசாரித்தோம். நடந்தது இதுதான்.

வேலாயுதபிள்ளை வழமை போல கொட்டில் அமைக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, அங்கு வந்த புலி உறுப்பினன் ஒருவன் அங்கிருந்த புதிய மரம் அறுக்கும் வாள் ஒன்றை எடுத்து, அங்கிருந்த மரம் ஒன்றை அறுத்துப் பார்த்திருக்கிறான். மரம் அறுக்கும் நுட்பம் அவனுக்குத் தெரியாதபடியால், அந்தப் புத்தம் புதிய வாள் வளைந்துவிட்டது. இதைக்கண்டு பதறிய வேலாயுதபிள்ளை "ஐயோ வாள் நெளிந்து விட்டதே? பொறுப்பாளர் என்னைப் பேசப் போறாரே?" என்று கூறியிருக்கிறார்.

அதற்கு அந்த புலி இளைஞன் சர்வ சாதாரணமாக "அது சவூதியில் எடுத்த வாள்தான்" என்று கூறியிருக்கிறான். வேலாயுதபிள்ளைக்கு அவன் கூறியது விளங்காதபடியால், அவனது கூற்றுக்கு அர்த்தம் கேட்டிருக்கிறார்.

அவன் சவூதி என்று குறிப்பிட்டது, சவூதி அரேபியா என்ற நாட்டையாகும். ஆனால் அவன் வளைத்த வாள் சவூதி அரேபியாவிலிருந்து கொண்டு வரப்பட்டதல்ல. இங்கு அவன் சவூதி என்று அவன் குறிப்பிட்டது, யாழ்ப்பாணத்தில் முஸ்லீம் மக்கள் வாழ்ந்த பகுதியையாகும். புலிகள் 1990ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும், வடக்கின் ஏனைய பகுதிகளிலும் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த முஸ்லீம் மக்களை உடுத்த துணியுடன் விரட்டியடித்து இனச் சுத்திகரிப்புச் செய்தபின்னர், அவர்களது உடைமைகள் அத்தனையையும் ஒன்றுவிடாமல் அபகரித்துத் தமதாக்கிக் கொண்டனர்.

யாழ்ப்பாண நகரின் வர்த்தக நிலையங்களில் கணிசமான ஒரு பகுதி முஸ்லீம் வர்த்தகர்களுக்குச் சொந்தமாக இருந்ததால், அவர்களது நிறுவனங்களில் இருந்த பெருந்தொகையான நானாவிதப் பொருட்கள் புலிகள் வசமாகின. அப்படி ஒரு முஸ்லீம் வர்த்தகரிடமிருந்த எடுத்த அந்த வாளைத்தான், இந்த புலி இளைஞன் 'சவூதியிலிருந்து எடுத்தது' (இலவசமாக) எனக் கூறியிருக்கிறான். அதாவது முஸ்லிம்கள் என்றால், அவர்கள் சவூதி அரேபியாவிலிருந்து வந்தவர்கள் என்பதுதான், புலிகளின் அகராதியிலுள்ள அர்த்தம்.

இதைக் கேட்ட வேலாயுதபிள்ளைக்கு ஆத்திரம் வந்திருக்கிறது. புலிகள் முஸ்லீம் மக்களை வடக்கிலிருந்து பலவந்தமாக வெளியேற்றியதுமல்லாமல், அவர்களது பொருட்களைச் சூறையாடி இப்படிப் பாழாக்குகிறார்களே என வேதனைப் பட்டிருக்கிறார்.

அதாவது எவரிடமிருந்தும் இலவசமாக ஒரு பொருளை எடுக்கக்கூடாது, அப்படி எடுத்தாலும், அதைப் பொறுப்பில்லாமல் பயன்படுத்தி சேதப்படுத்தக்கூடாது என. அந்த இளைஞனுக்கு வேலாயுதபிள்ளை விளக்கிக் கூறியிருக்கிறார். அதற்குத்தான் அறிந்த சில உதாரணங்களையும் வேலாயுதபிள்ளை கூறியிருக்கிறார்.

அத்துடன் வேலாயுதபிள்ளை அந்த இளைஞனிடம், "நீங்கள் உங்களை ஒரு விடுதலை இயக்கம் என்று கூறுகிறீர்கள். அப்படியான நீங்கள் பொது மக்களிடம் இருந்து எதையும் இலவசமாக எடுக்கக் கூடாது. சீனாவில் புரட்சி நடந்த போது, மாஓ சீன மக்கள் இராணுவத்துக்கு விடுத்த 8 கட்டளைகளில் ஒன்று, பொதமக்களிடமிருந்து ஒரு துண்டு நூலையோ ஊசியையோ இலவசமாக எடுக்கக்கூடாது என்பதாகும்.

அதேபோல, வியட்நாம் புரட்சியின்போது, விடுதலைப் போராளிகள் ஒரு கரும்புத்தோட்டத்துக்குள்ளால் செல்லும் போது, சில கரும்புகள் முறிந்ததிற் காக, அந்தத் தோட்ட உரிமையாளரிடம் மன்னிப்புக் கேட்டதுடன், அதற்கு நஸ்ட ஈடும் வழங்கினார்கள் எனக் கூறியிருக்கிறார்.

வேலாயுதபிள்ளை கூறியதைக் கேட்டு ஆத்திரமடைந்த அந்த புலி இளைஞன், அங்கிருந்த சுத்தியல் ஒன்றை எடுத்து வேலாயுதபிள்ளையின் மண்டையில் ஒரு போடு போட்டிருக்கிறான். அதனால் அவரது மண்டை பிளந்து இரத்தம் ஆறாகப் பெருகியிருக்கிறது, அதைத் தொடர்ந்து அங்குவந்த சிரேஷ்ட புலி உறுப்பினன் ஒருவன் நடந்த விடயத்தைக் கேட்டுவிட்டு, தாக்கியவனைக் கண்டிப்பதற்குப் பதிலாக, தாக்குதலுக்குள்ளான வேலாயுதபிள்ளையைக் கண்டித்துவிட்டு, அவரைச் சிறைக்குள் அனுப்பி வைத்திருக்கிறான்.

இதுதான் அன்று நடந்த சம்பவம், ஆனால் இரண்டு நாள் கழித்து வேலாயுதபிள்ளை மீண்டும் புலிகளுக்கு கொட்டில் போடும் வேலைக்காக அழைத்துச் செல்லப்பட்டார்.

இந்த இடத்தில் இன்னுமொரு சம்பவத்தையும் குறிப்பிடுவது பொருத்தம் எனக் கருதுகின்றேன்.

பொதுவாக மனிதர்கள் திருடர்களிடமிருந்து தமது பெறுமதியான பொருட்களைப் பாதுகாப்பதற்காக, அவற்றை நுட்பமான முறைகளில் இரகசியமாக மறைத்து வைப்பது வழமை, இன்றைய நாட்களில் என்றால், வங்கியிலுள்ள பாதுகாப்புப் பெட்டகங்களில் வசதியானவர்கள் தமது நகைகள், காணி உறுதிகள், முக்கியமான பத்திரங்கள் என்பவற்றைப் போட்டு வைப்பார்கள்.

ஆனால் முன்னைய காலங்களில் வீட்டிலுள்ள எங்காவது ஒரு இடத்தில் மறைத்து வைப்பது தான் வழமை, கூடுதலாக சமையல் கட்டிலுள்ள மாவு, சீனி என்பன வைக்கும் பாத்திரங்களில் மறைத்து வைப்பது ஒரு பொது நடைமுறை.

யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லீம் மக்கள் புலிகளால் விரட்டியடிக்கப்பட்ட பின்னர், ஒருமுறை யாழ்.போதனா வைத்தியசாலையில் தமது குடும்ப அங்கத்தவர் ஒருவரை தங்கவைத்து சிகிச்சை அளித்து வந்த ஒரு குடும்பத்தினர், தமது அவசர தேவைகருதி, வைத்தியசாலைக்கு முன்னால் உள்ள மருந்தகம் ஒன்றில் சுடுநீர்ப் போத்தல் ஒன்றை வாங்கியிருக் கின்றனர்.

அதை வைத்தியசாலைக்குக் கொண்டுவந்து கழுவுவதற்காக முன் மூடியையும், பின்பக்கப் பகுதியையும் கழற்றியபோது, பின்பக்கத்திலிருந்து ஒரு தங்கச் சங்கிலியும், ஒருசோடி காப்பும் விழுந்திருக்கின்றது.

(தொடரும்...)

# நிலமெல்லாம் இரத்தம்

**105**

பா.ராகவன்

**சுமார்** ஆயிரத்து எண்ணூறு வருடங்களுக்கு முன்னர் ரோமானியப் படையை எதிர்த்து யூதத் தளபதி பார் கொச்பா நடத்திய யுத்தம்தான், அதற்குமுன் யூதர்கள் தம் தேசத்தைக் காப்பதற்காக நடத்திய யுத்தம், அத்தனை நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் யூதர்கள் தமது தேசம் என்கிற பெருமிதத்துடன், அதைக் காப்பதற்காக ஒரு யுத்தம் செய்யவிருந்தார்கள்!

மே மாதம் 13ஆம் திகதி, 1948ஆம் வருடம் பெரும் பாலான பிரிட்டிஷ் துருப்புகள் பாலஸ்தீனை விட்டுப் போய்விட்டிருந்தன. நகரங்கள் பேயடித்த மாதிரி அமைதியில் இருந்தன. பொழுதுவிடிந்தால் சுதந்திரம்பொழுது விடியும் போது இஸ்ரேலும் பிறக்கும்! அதே பொழுது விடியும்போது அராபியர்கள் தாக்கவும் ஆரம்பித்துவிடுவார்கள்!

இஸ்ரேல் பிறக்கும் சந்தோஷத்தை அனுபவிப்பதா? எதிர்வரும் யுத்தத்தை நினைத்துக் கவலைப்படுவதா? யுத்தத்தில் என்ன ஆகப் போகிறது. இஸ்ரேலிய இராணுவம் நான்கு தேசங் களின் துணையுடன் தாக்கப் போகிற பாலஸ்தீனிய அராபி யர்கள் வெற்றிபெறுவார்களா?

யாருக்கும் தெரியாது. என்னவும் நடக்கலாம். எப்படியும் நடக்கலாம்.

மே 14, 1948 விடிந்து விட்டது அன்றைய தினம்.

முந்தைய நாள் இரவுடன் அத்தனை பிரிட்டிஷ் ராணுவ வீரர்களும் போய்விட்டிருக்க, அன்று காலை கட்டக் கடைசி யாகப் பாலஸ்தீனுக்கான பிரிட்டிஷ் ஹைற கமிஷனர் மட்டும் ஜெருசலேத்தில் இருந்தார். தன் அலுவலகத்தைப் பூட்டிகொண்டு, ஒப்படைக்க வேண்டிய தஸ் தாவேஜ்களை பூட்டிக்கொண்டு, உரியவர் களிடம் ஒப்படைத்துவிட்டு, கடைசிக் கையெழுத்துக்களைப் போட்டுவிட்டு, பெட்டியைத் தூக்கிக் கொண்டு கையாட்டி விட்டு வண்டியேறினார்.

பிரிட்டனின் முப்பது வருட ஆட்சி அந்த விநாடியுடன் ஒரு முடிவுக்கு வந்தது. இனி பாலஸ்தீன் என்று ஒருதேசம் இல்லை. இஸ்ரேல் பாலஸ்தீன் என்று இருதேசங்கள் இந்தியா, பாகிஸ்தான் மாதிரி அவை யும் அண்டை தேசங்களாக இருக்கும்.

உணர்ச்சி உடைந்து பெருக்கெடுக்கத் தருணம் பார்த்துக் கொண்டிருந்த சமயம். ஹைற கமிஷனரை வழியனுப்பிவிட்டு, அவசர அவசரமாக டெல் அவிவ் நகருக்குப் போய்ச் சேர்ந்தார் இஸ்ரேலின் அரசியல் தலைவர் பென் குரியன்.

நேரம் பிற்பகல் ஒன்று ஆகியிருந்தது. அறிவிப்புக்கான சமயம் நெருங்கிக் கொண்டி ருந்தது. இறுதிக்கட்ட நட வடிக்கைகள் வேகமாக நடந்தன.

குரியன் தன் சகாக்களுடன் கலந்துபேசினார். பாதுகாப்பு ஏற்பாடுகள் தயாரா என்று இராணுவத் தளபதிகளைக் கேட்டுக் கொண்டார்.

எல்லாம் தயார் என்று ஆனதும் சர்வதேச மீடியாவுக் கும் பாலஸ்தீனின் யூதர்களுக் கும் அந்த அறிவிப்பை வெளி யிட்டார். இன்றுமுதல் இஸ்ரேல்



பிறக்கிறது “யூதர்களின்தேசம்”

அந்தக் கணத்துக்காக காத்திருந்த யூதர்கள், பரவசத்தில் ஓவென்று அழுது கண்ணீர் விட்டார்கள். குதித்து ஆனந்தக் கூத்தாடினார்கள். ஒருவரை ஒருவர் கட்டித்தழுவி அன்பைப் பரிமாறிக் கொண்டார்கள்.

மறுபுறம் பாலஸ்தீனின் அனைத்து எல்லைகளிலிருந்தும் அரபுப் படைகள் உள்ளே நுழைய இறுதிக்கட்ட ஆயத்தங் களைச் செய்துகொண்டிருந்தன.

இரண்டாம் உலக யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னர் அரபு தேசங்கள் என்று தனித்தனியே நாடுகள் கிடையாது. சுமார் 1,350 வருடங்கள் ஒட்டாமான் துருக்கியப் பேரரசின் அங்கங் களாகவே இன்றைய அரபு தேசங்கள் அனைத்தும் இருந்தன. அதாவது, அகண்ட இஸ்லாமிய சாம்ராஜ்ஜியம் பாலஸ்தீன், ஈராக், ஈரான், லெபனான், சிரியா என்று துண்டுதேசங்கள் உருவான தெல்லாம் இரண்டாம் உலகப் போருக்கும் பிரிட்டன் விடை பெற்றதற்கும் எல்லாம் பிறகு தான். அதற்குமுன் ஒரே பேரரசு. அதன்கீழ் பல சிற்றரசுகள் அவ்வளவுதான்.

முதல் மற்றும் இரண்டாம் உலகப் போர்களை ஒட்டி பல்வேறு அரேபிய தேசங்கள், ஒட்டாமான் சாம்ராஜ்ஜியத் திலிருந்து பிரிந்து; சுதந்திர தேசங்கள் ஆயின. பாலஸ் தீனும் அப்படி ஒரு சுதந்திர தேசமாக ஆயிருக்க வேண்டியது தான். ஆகமுடியாமல் போனதன் காரணம், பிரிட்டன் உதவியுடன் யூதர்கள் அங்கே ஊடுருவி இடத்தை நிரப்பியது தான்.

இந்தக் கோபம்தான் அராபியர்களுக்கு நியாயமான கோபமே என்றாலும் வேறு வழி இல்லை என்பதால் ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு கமிட்டியின் பரிந்துரை யின் பேரில் ஐ.நா அறிவித்த பாலஸ்தீன், இஸ்ரேல் எல்லைப் பிரிவு நடவடிக்கையை மனத் துக்குள் ஒருவாறு ஏற்றுக் கொள்ளத் தயாராகித்தான் இருந்தார்கள். தமது எதிர்ப்பைப் பதிவுசெய்ய யுத்தத்தை தொடங்குவது,

முடிவு எப்படியானாலும் ஐ.நா. பிரித்துக்கொடுத்த நிலம் எப்படியும் இருக்கத்தானே போகிறது என்று அப்பாவி அராபியர்கள் நினைத்தார்கள்.

கவனிக்கவும், இவர்கள் புரட்சிக்காரர்கள் அல்லர். கலகக்காரர்கள் அல்லர். அக்கம்பக்கத்து அரபு தேசங்களின் துணையுடன் யுத்தத்தில் பங்குபெறக் களம் சென்றவர்கள் அல்லர். மாறாக படிப்பறிவோ அரசியல் ஞானமோ, வாழ வழியோகூட இல்லாத அடித்தட்டு வர்க்கத்து அராபியர்கள். இவர்கள்தான் பெரும்பான்மையினர்.

இவர்களுக்கு உண்மை நிலவரத்தைச் எடுத்துச் சொல்லவோ, வழிநடத்தவோ, அறிவுரைகள் கூறவோ அன்றைக்கு யாரும் இருக்கவில்லை.

அரபு இனத்தலைவர்கள் என்று அறியப்பட்ட ஒரு சிலர் யுத்தம் குறித்துச் சிந்திக்கப் போய்விட்டார்கள். இளைஞர் கள் எல்லோரும் கிடைத்த ஆயுதங்களைத் தூக்கிக் கொண்டு யூதர்களை ஒழிக்காமல் வரமாட்டோம் என்று டெல் அவிவை நோக்கி நகரத் தொடங்கிவிட்டார்கள். நோயாளிகள், வயதானோர், பெண்கள், குழந்தைகள் ஆகியோரை உள்ளடக்கிய இந்தப் பெரும்பான்மை அரபுகள், தான் வசித்துவந்த மேற்குக் கரை மற்றும் காஸா பகுதிகளில் வீட்டுக்குள் பதுங்கியபடி தமக்குள் என்னாகுமோ என்று எண்ணி எண்ணிப் பயந்து கொண்டிருந்தார்கள்.

பாலஸ்தீன் – இஸ்ரேல் பிரச்சினையின் நவீன கால வரலாறு என்பது இந்த இடத்தில் தான் தொடங்குகிறது.


ஒரு பக்கம் அரபுகள் என்னாகுமோ என்று அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்க, இன்னொரு பக்கம், இதே அடித்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த இஸ்ரேல் யூதர்களும் இதே போலத்தான் அஞ்சிக் கொண்டிருந்தார்கள்.

என்னாகுமோ? பெரும்பான்மை மக்களின் இந்த அச்சத்துக்கும் சிறுபான்மை வீரர்கள் மற்றும் புரட்சிக்காரர்களின் கோபம் மற்றும் துவேஷத்துக்கும் நிறைய இடைவெளி இருந்தது.

எப்படி அரேபியர் புரட்சிக் கார்கள், தமது பெரும்பான்மை மக்களின் மனநிலை என்ன என்பதைக் கேட்டறிந்து கொள்ள விரும்பவில்லையோ அதே போலத்தான் பெரும் பான்மை யூத மக்களின் கருத்தையும் இஸ்ரேலிய அரசோ, இஸ்ரேல் இராணு வமோ அந்தத் தருணத்தில் பொருட்படுத்தவில்லை.

(தொடரும்...)

A.பாரிஸ், மிகிந்தலை.



# சிதைந்த நிலவுகள்

**22**

அவ்வளவுதான் ஒரு வெள்ளை வேன் வந்தது. பாதையாலே போய்க் கொண்டிருந்த என்னை தூக்கிப் போட்டாங்கள். அவ்வளவுதான் அதற்குப் பிறகு இங்கு வரும் போதுதான் தெரியும் வன்னியில் தான் இருந்தேன் என்று!

“அப்ப எப்படி கொழும்பிலே இருந்துகொண்டு போனாங்கள்?” தெரியாது சேர். படகிலே ஏத்தி கடலாலையும் போனாங்கள் என்பது மட்டும் தெரியும்”

“சரி... அப்ப என்னை மாதிரி தவறாத்தான் உங்க தங்கச்சியும் நினைச்சிட்டு இருக்காள்.

அதால விபரமாக ஒரு கடிதம் எழுதி நாளைக்கு தாங்கோ. நாளை



மறுநாள் குமாரசாமி முகாமிற்கு போவன் அப்ப கொடுத்துவிடுறன்!”

“சரி சேர்” “வாறன்” கிளம்பினான் சிவா!

சிவாவின் வேண்டுகோளின்படி விபரமாக கடிதத்தை எழுதினாள். மறுநாள் குடும்பத் தபால்காரனிடம் ஒப்படைத்தாள்!

சீதாதேவியின் கையில் கடிதம் கிடைத்தபின் அக்காவைப் பற்றிய உண்மை புரிந்தது! சிலமாதங்களில் குடும்பங்கள் இணைக்கப்பட்டு வெளி மாவட்ட மக்கள் அனுப்பப்பட்டார்கள்.

அந்த இணைப்பில் அக்காவும் தங்கையும் இணைந்தனர், சொந்த இடத்துக்கு மீண்டும் சென்றனர்!

அவர்களுடன் கந்த சாமியையும் கண்ணம்மாவை யும் தங்களின் பெற்றோராக அடையாளப்படுத்தினர்! அதற்கு சிவாவின் பங்கு மிக அதிகம்!

வீட்டுத்திட்டத்தின்கீழ் அவர் களுக்கும் வீடு கிடைத்துள்ளது! கீதாஞ்சலி மீண்டும் சட்டப் படிப்பை தொடர்கிறாள். அதற்கிடையில் சிவாவுக்கு கீதாஞ்சலிக்கும் திருமணம் முடிந்துவிட்டது! ஒரு காலத்தில் மதம் மனதுக்கு தடைவிதித்து இருந்தது. மொழி குரோதத்தை உருவாக்கியது! தப்பு, அவைகளைப் பயன்படுத்தி மனிதத்தைப் புதைத்து ஒற்றுமையைச் சிதைத்தனர்!

இன்று அந்தக் குரோதங்களை யும் அழித்து மனிதத்தை நேசித்து மணக்கும் திருமணங்கள் பல நடந்துள்ளது. அதில் ஒன்றுதான் கீதாஞ்சலி, சிவா திருமணம்.

அதைவிடுங்கள்!

அடுத்து கீதாஞ்சலியின் நகர்வு என்ன என்பதுதான் எவருக்கும் தெரியாத விடயம்!

சட்டப்படிப்பை ஆரம்பிக்கும் போது குற்றவாளியாக கணிக்கப் பட்டவர்கள் சுற்றவாளியாகவும் சுற்றவாளியாக நடித்தவர்கள் குற்றவாளியாகவும் இருப்பதால் யாருக்கு எதிராக வழக்கு தொடுப் பாளோ...?

ஆனால் ஒன்றை மட்டும் உறுதி யாகக் கூறுகிறேன். அன்றைய அவலம் இன்று இல்லை! சிவா இராணுவத்தில் இருப்பதால் எவ்வித பிளவும் அவர்களுக் குள் இல்லை... சிவாவின் உண்மை யான பெயர் பியந்த. அவன் சிங்களம் என்றுகூட சச்சரவு எதுவுமில்லை! ஒற்றுமையாகவே அவர்கள் வாழ்வு நகர்கிறது.

“அன்பான தினமுரசு வாசகர்களே... இந்தக் கதையில் வரும் அனைத்து சம்பவங்களும் நிஜம். உண்மைச் சம்பவங்கள் சில ஒருங்கிணைக்கப்பட்டு ஒரு குடும்பத்தின் சம்பவமாக மாற்றப்பட்டுள்ளது. பெயர்கள் மட்டும் மாற்றப்பட்டுள்ளது...”

(நிலவுகள் முற்றும்...)

# பொதுபல சேனாவுக்கு அதிகாரம் அனுசரணையா?

**ஏ.எச்.ஏ. ஹுஸைன்**

**தொடர் 08**

**தற்போது இந்த சுற்று நிருபத்தின் சூழ்ச்சி முஸ்லிம் மக்களை குறிவைத்து சுற்றி வந்தாலும், அதன் தாக்கம் எதிர்காலத்தில் நாட்டில் உள்ள ஏனைய சிறுபான்மையிரையும் மெல்ல இறுக நசுக்கும் என்பதில் சந்தேகம் கிடையாது.**

**எனவே, இச்சுற்றுநிரூபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தற்போது இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் அல்லது பள்ளிவாசல்களைப் புதிதாக நிர்மாணிக்கவேண்டுமாக இருந்தால், அருகிலுள்ள விகாரையிலிருந்து அல்லது பிற வணக்கஸ்தலங்களில் இருந்து புதிதாக அமைக்கப்படப்போகும் வணக்கஸ்தலத்திற்கு எதிராக எதுவித ஆட்சேபனையும் தெரிவிக்கப்படக்கூடாது.**

### மது பாவனையை நாட்டில் தடை செய்ய முடியாது

பௌத்த தர்மத்துக்கு ஏற்ப இலங்கையில் மதுபாவனை தடை செய்யப்படவேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா சபை அமர்வொன்றின்போது கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்குப் பதிலளித்த பௌத்த சாசன மற்றும் மத விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் எம்.கே.டி.எஸ். குணவர்த்தன மதுப்பாவனையை நாட்டில் தடை செய்யமுடியாது எனினும் போதைக்கு முற்றுப்புள்ளி எனும் வேலைத்திட்டத்தின் ஊடாக கட்டுப்படுத்த முடியும் என்று தெரிவித்திருந்தார்.

### 'இராவணாபலய'வின் ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது

மதவிவகாரங்களுக்கான பொலிஸ் பிரிவு வேண்டாம் எனக்கோரி 'இராவணாபலய'வைச் சேர்ந்த தேரர்கள் மே 28ஆம் திகதி மத விவகாரங்களுக்கான அமைச்சகத்திற்குள் அமர்ந்திருந்து நடத்திய ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

இது சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பொலிஸ் மா அதிபரிடம் நேரத்தை ஒதுக்கித்தருவதாக அமைச்சின் செயலாளர் எழுத்து மூலமாக வழங்கிய உறுதிமொழியை அடுத்தே 'இராவணாபலய'வைச் சேர்ந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து அகன்று சென்றனர்.

### வட இலங்கையில் சிங்கள மக்களின் குடிப்பரம்பலை அதிகரிக்கும் எண்ணம்!

வட இலங்கையில் சிங்கள மக்களின் குடிப்பரம்பலை அதிகரிக்கும் நோக்கில் மன்னாரில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிங்களக் குடும்பங்களைப் புதிதாகக் குடியேற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில், மன்னார் மாவட்டம் முசலி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கொண்டச்சி பாசித்தென்றல் பகுதிகளில் கடற்கரையோரமாக சிங்களக் குடும்பங்களுக்கென வீடுகள் அமைக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்டிருக்கின்றார்.

நடைமுறைக்கு மாறாக, இந்தப் பிரதேசத்தில் சிங்கள குடும்பங்களைப் புதிதாகக் குடியேற்றுவதற்கான முயற்சிகள் ஒரு வருடத்திற்கு முன்பே மேற்கொள்ளப்பட்டிருந்ததாக தமக்கு முறையிடப்பட்டிருந்ததாகவும், அண்மையில் இந்த நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக பல முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

### பள்ளிவாசல்கள், கத்தோலிக்க தேவாலயங்கள் எங்கே உடைக்கப்பட்டிருக்கின்றது? ஜனாதிபதி கேள்வி

பள்ளிவாசல்கள், கத்தோலிக்க ஆலயங்கள் உடைக்கப்படுவதாக சில எதிர்க்கட்சிகளும் மற்றும் சமய இன ரீதியான கட்சிகளும் பாரியளவில் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றன. பள்ளிவாசல்களும், கத்தோலிக்க தேவாலயங்களும் எங்கே எவ்வாறு உடைக்கப்பட்டுள்ளன?

அரசாங்கத்தை எதிர்ப்பதற்காகவும் நாட்டின் நற்பெயருக்கு களங்கம் விளைவிப்பதற்கும் மேற்கொள்ளப்படும் இவ்வாறான செயற்பாடுகள் குறித்து மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்தார்.




கம்பஹா மாவட்டத்தில் ஹேரகல பத்மாவதி பிரிவெனாவின் சமய கலை கலாசார கண்காட்சியின் இறுதி நாள் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பெருந்திரளான பௌத்த குருமார் கலந்துகொண்டிருந்த நிகழ்வில் ஜனாதிபதி தொடர்ந்தும் உரையாற்றுகையில், "சமயத்தின் பெயராலும் இனத்தின் பெயராலும் இயங்கிவரும் சில அரசியல் கட்சிகள் எமது நாட்டைப் பற்றி சர்வதேசத்துக்கு தவறான கருத்துக்களை பிரசாரம்செய்து வருகின்றன.

பள்ளிவாசல்களை உடைக்கிறார்கள், கத்தோலிக்க தேவாலயங்களை உடைக்கிறார்கள் என்கிறார்கள், எங்கே உடைக்கப்பட்டிருக்கின்றது? அவ்வாறு எங்கும் உடைக்கப்படவில்லை. எல்லாம் பொய்ப்பிரசாரம் நாட்டில் எங்காவது பள்ளிவாசல்களோ, கத்தோலிக்க ஆலயங்களோ உடைக்கப்பட்டிருந்தால் நிரூபிக்கட்டும்.

பள்ளிவாசலுக்கென சொந்தமாக இல்லாத காணியில் பள்ளிவாசல் நிர்மாணிக்க முடியாது என்றும் வீடுகளில் பள்ளிவாசல்கள் இயங்கமுடியாது என்று குர்ஆனில் கூறப்பட்டுள்ளது.

அப்படியென்றால் பள்ளிவாசல்களை உடைத்தார்கள். மதஸ்தலங்களை உடைத்தார்கள் என்று உலகத்துக்கு ஏன் பொய் சொல்லுகிறார்கள்?

அது ஏனென நினைத்துப்பாருங்கள்; அனைத்து மதங்களையும் மதிப்பதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

பௌத்த தர்மத்தைப் பாதுகாப்பதற்கு நாம் அரசியலமைப்புக்கிணங்க கடமைப் பட்டுள்ளதுடன் ஏனைய மதங்களையும் பாதுகாப்பதற்கு அரசு கடமைப்பட்டுள்ளது.

பௌத்த குருமாரும் நாட்டு மக்களும் நாட்டுக்கு எதிரான சோதனைகள் வந்த போதெல்லாம் நாட்டைப் பாது காத்துள்ளார்கள். நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளை எதிர்த்து பௌத்த குருமார் உதவியிருக்கின்றார்கள்.

இன்று தகவல் தொழில்நுட்பத்துறை வளர்ச்சிகண்டுள்ளது. பேஸ்புக் மூலம் இடம்பெறும் சில சம்பவங்கள் வருத்தத்துக்குரியன.

அதனைத் தடை செய்யவேண்டும் என்றநிலை ஏற்பட்டுள்ளது. என்றாலும் பேஸ்புக்கை தடை செய்யும்படி உத்தரவு பிறப்பிக்கமுடியாது.

பிள்ளைகளுக்கு நன்மை எது?, தீமை எது? என்பதை எடுத்து விளக்க வேண்டும். பெற்றோர் இதுதொடர்பில் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டும். பிள்ளைகளின் நடவடிக்கைகளை கண்காணிக்கவேண்டும். தவறு, தகவல் தொழில்நுட்பத்தில் இல்லை. அவற்றை நேரான வழியில் பயன்படுத்தாமையே தவறாகும்.

இன்று பாடசாலைகளில் மாத்திரமல்ல, பிரிவெனாக்களுக்குள்ளும் கம்பியூட்டர் வந்துவிட்டது. படிக்கும் எமது பௌத்த குருமார் கணினி அறிவினைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும்" என்றார் ஜனாதிபதி.

ஜனாதிபதி பேரினவாதத்தைச் சாந்தப்படுத்த பௌத்தர்கள் கூடியிருந்த கூட்டத்தில் இப்படிக் கூறினாலும் அனுராதபுரத்தில் ஆரம்பித்து நாடளாவிய ரீதியில் தற்போது வரை சுமார் 30 பள்ளிவாசல்கள் சிங்கள பௌத்த இனவாதிகளின் தாக்குதல்களுக்கு இரையாகியுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பள்ளிவாசல்கள் மட்டுமல்ல இந்து மற்றும் கிறிஸ்தவ வழிபாட்டிடங்களும் தாக்கப்பட்டிருக்கின்றன.

தெகிவளை பிரதேசத்தில் அமைந்துள்ள மூன்று பள்ளிவாசல்களில் தொழுகை மற்றும் இதர மார்க்க நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ளுமாறு பொலிசாரின் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

கொஹுவெல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பள்ளிவாசலில் தொழுகை நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறும், அவ்வாறு நிறுத்தாத பட்சத்தில் ஏற்படும் விளைவுகளுக்கு நாம் பொறுப்பல்ல எனவும் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

பள்ளிவாசல்களில் சிங்கள பௌத்த இனவாதிகளினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இவ்வாறான பிரச்சினைகளுக்கு எல்லாம் பின்புலமாக காணப்படுவது 2008 ஆம் ஆண்டில் புத்தசாசன அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபமாகும்.

அதன் ஏற்பாடுகளின் பிரகாரம் 2008.10.16 ஆம் திகதிக்குப் பின்பு பதிவுசெய்யப்பட்டு இயங்குகின்ற நாடுபூராகவும் உள்ள சுமார் 389 பள்ளிவாசல்கள் இத்தகைய அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகும் நிலைமைகள் காணப்படுகின்றன.

தற்போது இந்த சுற்றுநிரூபத்தின் சூழ்ச்சி முஸ்லிம் மக்களை குறிவைத்து சுற்றிவந்தாலும், அதன் தாக்கம் எதிர்காலத்தில் நாட்டில் உள்ள ஏனைய சிறுபான்மையிரையும் மெல்ல இறுக நசுக்கும் என்பதில் சந்தேகம் கிடையாது.

எனவே, இச்சுற்று நிரூபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தற்போது இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் அல்லது பள்ளிவாசல்களைப் புதிதாக நிர்மாணிக்கவேண்டுமாக இருந்தால், அருகிலுள்ள விகாரையிலிருந்து அல்லது பிற வணக்கஸ்தலங்களில் இருந்து புதிதாக அமைக்கப்படப் போகும் வணக்கஸ்தலத்திற்கு எதிராக எதுவித ஆட்சேபனையும் தெரிவிக்கப்படக்கூடாது.

சுருங்கக் கூறுவதானால், நீங்கள் உங்களுக்கென வணக்கஸ்தலம் ஒன்றினை நிர்மாணிப்பதாக இருந்தால் அதனை தீர்மானிக்க வேண்டியது நீங்கள் அல்ல. மாறாக உங்கள் பிரதேசத்தில் அமைந்திருக்கும் விகாரையும் அதன் தலைமைப் பிக்குவும்தான்.

(தொடரும்)



# நைஜீரிய பயங்கரவாதமும் அமெரிக்க தலையீடும்...

**அமெரிக்கா பிச்சையாக அளித்த ஆயுதங்களுடனும், அமெரிக்கா வகுத்துக் கொடுத்த திட்டத்துடனும் அல்ஜீரியாவில் ஷரியா சட்டத்தை அமுல்படுத்தவும், அமெரிக்க 'ஜிகாத்'தை வழிநடத்தும் இசுலாமிய மக்ரீபிற்கான அல்-குவைதா அமைப்புத்தான் போகோ ஹராமின் ஆயுதப் புரவலர் அல்ஜசீரா தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்துள்ள அவ்வமைப்பின் தலைவர் அபூ மௌஸப் அப்தல் வாதௌத் என்பவர், நைஜீரியாவில் உள்ள கிருத்துவ சிறுபான்மையினரை எதிர்த்துப் போராட போகோ ஹராம் அமைப்பிற்கு தாம் ஆயுதங்களை வழங்கிவருவதாக வெளிப்படையாகவே குறிப்பிடுகிறார்.**

தொகுப்பு: வேணு கி[illegible]ஷ்ணா

### 250 இனங்களை கொண்ட நைஜீரியா

நைஜீரியா மேற்கு ஆபிரிக்காவிலுள்ள ஒரு சமஷ்டி குடியரசு நாடாகும். இது ஆபிரிக்க நாடுகளின் மத்தியில் பிராந்திய செல்வாக்கு மிக்கதாக பார்க்கப்படுகின்றது. ஆபிரிக்க கண்டத்தில் உள்ள மக்கள் தொகை மிகுந்த நாடுகளில் முக்கியமானது. இதன் மக்கள்தொகை 15 கோடியை விடவும் அதிகம். இங்கு 36 மாநிலங்கள் உண்டு. நைஜீரியாவினுள் 36 மாநிலங்களிலும் 250 க்கும் அதிகமான இனங்கள் வாழ்கின்றன என்பது முக்கியமானது. இவர்கள் பல மொழிகளைப் பேசும் இனங்கள். இந்த நாட்டின் மக்கள்தொகையின் 52வீதத்தினர் முஸ்லிம்கள். முஸ்லிம்கள் பெரும்பான்மை யாக நைஜீரியாவின் வடபகுதியில் வாழ்கின்றார்கள். இங்கு 40வீதம் கிறிஸ்தவர்கள். இவர்கள் பெரும்பான்மை யாக நைஜீரியாவின் தென்பகுதியில் வாழ்கிறார்கள். இவர்கள் அல்லாமல் மிகவும் சிறுபான்மை இனங்களும் உண்டு.

நைஜீரியா தனது வரலாற்றில் தொடர்ந்தும் மேற்கின் ஆக்கிரமிப்புக் களையும் இராணுவ புரட்சிகளையும் சந்தித்துள்ளது, கடைசியாக பிரித்தானியா வின் காலனித்துவ நாடாகவும் இருந்துள்ளது. இவர்களின் ஆட்சிமுறை இனங்களை பிரித்தாளும் அரசியல் வழிமுறைகளை கொண்டு காணப்பட்டது. பிரித்தானியாவின் பிடியில் இருந்து 1960 விடுபட்டது. எனினும் 1960 தொடக்கம் 1999வரை தொடர்ந்து இராணுவ ஆட்சியின் பிடியில் தவித்தது.

ஐரோப்பியர்கள் ஆட்சியில் நைஜீரியா ஆபிரிக்காவின் மிகப்பெரிய அடிமை விற்பனைச் சந்தையாக மாற்றம் பெற்றது. நைஜீரியாவின் ஆண்களையும், பெண் களையும் ஐரோப்பியர்கள் அடிமை களாக பிடித்து விற்பனை செய்தனர். நைஜீரியாவிலிருந்து கோடிக்கணக்கான மக்கள் இவ்வாறு அடிமைகளாக அமெரிக்கா அனுப்பப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. இங்கு அடிமையாக பிடிக்கப் பட்டவர்களில் உறுதியான உடல் கட்டமைப்பைக் கொண்ட ஆண்களும் பெண்களும் தெரிவுசெய்யப்பட்டு அடிமைப் பண்ணைக்கு அனுப்பப்பட்டு அடிமை உற்பத்தி முறை நடைமுறையில் இருந்த தாக சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஐரோப்பியர்களின் வருகைக்கு முன்னர் நைஜீரியா பரந்த இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத்தின் ஒரு பகுதியாக இருந்ததுடன் நைஜீரியா மக்கள் பல அபி விருத்திகளையும் கண்டிருந்தனர். கல்வித் துறையில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி கண்டிருந்தனர். இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத்தின் வீழ்ச்சியுடன் இவர்களின் வீழ்ச்சியும் தொடங்கியதாக வரலாறு கூறுகின்றது.

### போகோ ஹராம் கடத்திய மாணவியர்

2014, ஏப்ரல், மாதம் 14ஆம் திகதி முன்னிரவு. நைஜீரிய நாட்டின் வடகிழக்கு பிராந்தியமான போர்னோ மாநிலத்திற்கு (Borno), உட்பட்ட சிபோக் (Chibók ) பகுதியினுள் டொயோட்டா ஜீப்புகளில் ஆயுதம் ஏந்திய ஜிஹாதி தீவிரவாதிகள் நுழைகிறார்கள். சிபோக் ஒரு ஒதுக்குப் புறமான கிராமப் பகுதி. அங்கே இருந்த உறைவிடப் பள்ளி ஒன்றில் இறுதித் தேர்வுகளை எழுத நூற்றுக்கணக்கான மாணவிகள் குழுமியிருக்கிறார்கள். பள்ளிக் கட்டடத்தை சுற்றிவளைக்கும் 'ஜிகாதி'கள், அங்கே பரீட்சைக்காக கூடியிருந்த மாணவி களில் சுமார் 300 பேரை துப்பாக்கி முனையில் கடத்திக்கொண்டு நைஜீரியா, கமரூன் எல்லைப் பகுதியை ஒட்டிய சம்பீசிய வனப் பகுதிக்குள் புகுந்துவிடுகிறார்கள்.

கடத்தப்பட்ட மாணவிகளில் சுமார் 50 பேர்வரை செல்லும் வழியில் தப்பி விட்டார்கள் என்று செய்திகள் வந்துள்ளன. எனினும், தப்பிய மாணவிகளின் எண்ணிக் கையையோ தீவிரவாதிகள் பிடியிலிருக்கும் மாணவிகளின் எண்ணிக்கையையோ இது வரை உறுதியாகச் சொல்லமுடியவில்லை. சுமார் 267 மாணவிகள் தீவிரவாதிகள் கட்டுப்பாட்டில் இருப்பதாக செய்திகள் கூறுகின்றன. கடத்தப்பட்ட மாணவிகளின் எண்ணிக்கை தொடர்பாக மாறுபட்ட செய்திகள் சர்வதேச ஊடகங்களில் வந்துள்ளன. சில செய்திகள் 300 என்றும், வேறு சில செய்திகள் 276 என்றும், சில செய்திகள் 267 என்றும் வெவ்வேறு எண்ணிக்கைகள் சொல்லப்படுகின்றது.

மாணவிகள் கடத்தப்பட்ட அதே நாளில் அருகில் இருந்த இன்னொரு நகரத்துக்குள் நுழைந்த தீவிரவாதக் குழுவினர் 300-க்கும் மேற்பட்ட அப்பாவிகளைச் சுட்டுக் கொன்றிருக்கின்றனர். மாணவிகள் கடத்தப்பட்ட சில நாட்களுக்குள் 'ஜிகாதி' தீவிரவாத குழுவின் சார்பாக காணொளிக் காட்சி ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அதில் பேசியிருக்கும் அக்குழுவின் தலைவன் அபூபக்கர் ஷெகா, கடத்தப்பட்ட மாணவிகளை அடிமைகளாக விற்க தனக்கு அல்லா கட்டளையிட்டிருப்பதாகவும், அவ்வாறு விற்பதை இஸ்லாம் அனுமதிப்பதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், கடத்தப்பட்ட மாணவிகளில் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்களை கட்டாயமாக இசுலாத்திற்கு மதம் மாற்றியிருப்பதாகவும் செய்திகள் வந்துள்ளன.

### சர்வதேச சமூகங்களின் நீலிக் கண்ணீர்

தங்கள் அமைப்பை போகோ ஹராம் என்று அழைத்துக்கொள்ளும் இந்த இயக் கத்தின் பின்னணி குறித்தும் இந்தக் கடத்தல் சம்பவம் குறித்தும் நாம் அறிந்து கொள்ளும்முன் வேறு சில அடிப்படைத் தகவல்களைப் பார்த்துவிடுவது நல்லது. அதற்கும்முன், இந்த சம்பவம் சர்வதேச அளவில் எழுப்பியிருக்கும் அதிர்வலைகளின் பரிமாணத்தையும் பார்த்துவிடுவோம்.

மாணவிகள் கடத்தப்பட்டு ஒருவாரம் கழித்து நைஜீரியாவின் முன்னாள் கல்வி அமைச்சர் ஒபியாகிலி ஆற்றிய உரையில், "எங்கள் பெண்களைத் திரும்பக் கொண்டு வாருங்கள்" என்று குறிப்பிட்டுள்ளார். இதை இப்ராஹிம் அப்துல்லாஹி என்பவர் தனது ட்விட்டர் கணக்கில் தனிச்செய்தித் தலைப் பாக (ஹேஷ்டேக்) குறிப்பிடுகிறார். (Bring back our girls) அடுத்த சில நாட்களுக்கு இந்த தலைப்பு மில்லியன் முறைகளுக்கும் மேல் சமூக வலைத்தளங்களில் குறிப்பிடப்படுகிறது.

மே மாத தொடக்கத்தில் மிஷேல் ஒபாமா, ஹிலாரி கிளிண்டன், பிரிட்டன் பிரதமர் ஜேம்ஸ் கேமரூன் போன்ற பிரபலங்கள் இதே தலைப்பில் கீச்சுகள் அனுப்பியதைத் தொடர்ந்து இந்த விவகாரம் சூடுபிடித்தது. மே 11-ம் திகதி வரை சுமார் 30 இலட்சம் பேரால் இந்தச் செய்தியோடைத் தலைப்பு குறிப்பிடப்பட்டுள்ளது. உலகளவில் பல்வேறு அரசியல் தலைவர்கள் நைஜீரிய பெண்களின் நிலைமை குறித்து தங்கள் கவலையை வெளியிட்டுள்ளனர்.

இதைத் தொடர்ந்து மேற்கத்திய உலகின் பல்வேறு நகரங்களில் 'ஆம் ஆத்மி வகைப்பட்ட' மெழுகுவர்த்தி ஊர்வலங்களும், கூட்டுப் பிரார்த்தனைகளும் நடக்கத் தொடங்கியுள்ளன. அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மன் உள்ளிட்ட பல்வேறு மேற்கத்திய நாடுகள் கடத்தப்பட்ட பெண் களை மீட்க எந்தவகையான உதவிகளை யும் செய்வதாக உத்திரவாதம் அளித்துள்ளன. நைஜீரியாவுக்கு உதவிசெய்யும் பொருட்டு தனது போர் விமானங்களையும், உளவுத் துறை அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகளையும் நைஜீரியாவில் இறக்கியிருக்கிறது அமெரிக்கா.

### போகோ ஹராம் (Boko Haram) : நதிமூலம்


'மேற்கத்திய கல்வி தீங்கானது' என்பதே போகோ ஹராம் என்கிற நாமத்தின் பொருள். இந்த அமைப்பின் அதிகாரபூர்வமான பெயர் 'ஜாமாத்துல் அஹ்லிஸ் சுன்னா லித்தாவுதி வல்-ஜிகாத்' (இறைத் தூதரின் போதனை களையும் ஜிஹாதையும் முன்னெடுத்துச் செல்லும் கடப்பாடு கொண்டவர்கள்). 1995-ம் ஆண்டு இசுலாமிய இளைஞர்களுக்கான 'ஷபாப்' என்கிற இயக்கம் தொடங்கப்படுகிறது. அதன் தலைவராக இருந்த மல்லாம் லாவல் மேற்படிப்புக்காக வெளிநாடு சென்றதை அடுத்து 2002-ம் ஆண்டு ஷபாப் இயக்கத்தை முகம்மது யூசூப் என்கிற அடிப்படைவாதி கைப்பற்றுகிறார். அதிலிருந்து இந்த அமைப்பு சுன்னி இசுலாத்தின் கடுங்கோட்பாட்டுவாத அடிப்படைகளைக் கொண்ட சலா.்.பி (வஹாபி) பிரிவோடு தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறது.

தலிபான்களைப் போலவே, "பெண்கள் படிக்கக்கூடாது, வெளியிடங்களுக்குச் செல்லக் கூடாது, குரானைத் தவிர்த்து எ[illegible] கற்க கூடாது" போன்ற பல 'கூடாததுகளின் பட்டியல் ஒன்றை வைத்திருக்கும் போகோ ஹராம், அதை அமுல்படுத்துவதற்குத் தோதாக ஷரியா சட்டத்தின் அடிப்படையிலான ஆட்சியை நைஜீரியாவில் அமைப்பது ஒன்றே தமது குறிக்கோள் என்று அறிவித்துக்கொண்டது. சில்லறைத் தாக்குதல்களையும், ஆட்கடத்தல் களையும் செய்துவந்த போகோ ஹராமின் மேல் இரண்டாயிரங்களின் இறுதியில் எடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் விளைவாக 2009-ம் ஆண்டு யூசூப் கொல்லப் படுகிறார். அதிலிருந்து அமைப்பின் இரண்டாம் இடத்தில் இருந்த அபூபக்கர் ஷெகா தலைமைப் பொறுப்பை ஏற்கிறார்.

அபூபக்கர் தலைமைக்கு வந்த கால கட்டத்தின் சர்வதேச அரசியல் நிலைமை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதற்கு சுமார் இரண்டாண்டுகளுக்கு முன்பதாக அமெரிக்காவின் வால் வீதியில் தொடங்கும் பொருளாதார பெருமந்தம் உலகு தழுவிய அளவுக்கு முதலாளித்துவ கட்டமைப்பு நெருக்கடியாக முற்றி வளர்ந்திருந்தது. அமெரிக்க பொருளாதாரத்தை தூக்கி நிறுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை கள் ஒவ்வொன்றும் மண்ணைக் கவ்விக் கொண்டிருந்த சமயம் அது. அதேநேரத்தில் கிழக்கு ஐரோப்பிய, மத்திய கிழக்கு மற்றும் வடக்கு ஆப்பிரிக்க நாடுகளில் 'வண்ணப் புரட்சிகள்' நடப்பதற்கான சமூக பொருளாதார சூழல் 'கனிந்து' வந்தது.

தனது சூதாட்டப் பொருளாதாரத்தை மீட்க வேண்டுமென்றால் இதுவரை, தான் கால் பதித்திராத பிரதேசங்களில் நுழைந்தாக வேண்டும் என்கிற கட்டாயம் அமெரிக்காவுக்கு ஏற்பட்டிருந்தது. மூன்றாம் உலக நாடுகளின் உள்விவகாரங்கள்வரை தலையிட்ட

→



# பரபரப்பு நிறைந்த எகிப்திய விமான விபத்து!

-விறுவிறுப்புக்காக தருவது ரிஷி

**வா**னில் பறந்துகொண்டிருந்த விமானத்தின் இயந்திரம் நிறுத்தப்பட்டதாக கடந்த அத்தியாயத்தில் பார்த்தோம்.

ஆம், விமானத்தின் கப்டன் அலறுகிறார். "என்ன இது.. என்ன இது... நீங்கள் விமானத்தின் இஞ்சினை நிறுத்தினீர்களா?" இந்தக் கேள்வியை கப்டன், கோ-பைலட்டை பார்த்து கேட்டார் என்று ஊகிக்கலாம். ஆனால் கோ-பைலட் பதில் சொல்லவில்லை.

கேப்டன் பதட்டமான குரலில், "Pull with me" என திரும்ப திரும்ப கூறிக் கொண்டு இருந்தார். அதன் அர்த்தம், விமானத்தினை மேல்நோக்கி திருப்ப முயன்றுகொண்டிருந்தார்.

இதையடுத்து விமானத்தின் இடது பக்கம் மேல்நோக்கி திரும்பியது. வலது பக்கம் கீழ்நோக்கி திரும்பியது. அதன் அர்த்தம், ஹொக்பிட்டின் இடதுபுற சீட்டில் இருந்த கப்டன் விமானத்தை உயர்த்த முயல, வலதுபுற சீட்டில் இருந்த கோ-பைலட், கடலை நோக்கி செலுத்தினார்.

இப்படி ஹொக்பிட்டில் இழுபறிப்பட்டுக் கொண்டிருக்கையில், விமானத்தின் கறுப்புப்பெட்டி இயங்குவது நின்றது. இதற்கு காரணம், விமானத்தின்கீழ் நோக்கிய வேகம், அதன் அனுமதிக்கப்பட்ட வேகமாத்தைவிட அதிகமாகி விட்டது.

அந்த கணத்தில் விமானத்தின் உடலில் பாதிப்பு ஏற்படும். அதாவது, விமானத்தின் பாகங்கள் பிய்ந்து போகத் தொடங்கும். கறுப்புப்பெட்டி விமானத்தில் இருந்து சிதறி விழுந்திருக்கும். விமானத்துக்குள் இருந்த பயணிகள், வெளியே எறியப்பட்டு, விமானத்தின் வேகத்துடன் போய் கடல் பரப்பில் மோதுவார்கள். விமானம் கடலில் மோதி, மூழ்கியது!

விமானம் தரையுடன் இருந்து தொடர்புகளை இழந்த நிலையில் ராடரில் இருந்து மறைந்தவுடன், அமெரிக்க விமான கட்டுப்பாட்டு நிலையம், விமானத்தின் கடைசியாக அறியப்பட்ட வான்பரப்பை அமெரிக்க வான்பாதுகாப்பு கழகத்துக்கு அறிவித்தது.

அது பொசிஷன் அட்லாண்டிக் கடலுக்கு மேல், அமெரிக்காவுக்கு அருகே (ஆனால், அமெரிக்க கடல் எல்லைக்குள் இல்லை) இருந்த காரணத்தால், தகவல் USCG எனப்படும் அமெரிக்க கரையோர காவல் படைக்கு தெரிவிக்கப்பட்டது.

இந்த நேரத்தில், எகிப்து விமானம் கடைசியாக (ராடரில்) பறந்த இடத்துக்கு மேலாக பறந்துசென்று நோட்டமிட்ட ஏர்-பிரான்ஸ் விமானம் (மெக்சிக்கோ சிட்டியில் இருந்து பாரிஸ் சென்றுகொண்டிருந்தது), அந்த பகுதியில் நெருப்போ அல்லது வேறு அசாதாரண அடையாளங்களோ இல்லை எனக் கூறியது. விமானம் விபத்துக்கு உள்ளாகியிருக்கலாம் என்ற சாத்தியம் முதலில் கருத்தில் கொள்ளப்படவில்லை.

விமானம் ஏதோ காரணத்துக்காக திசைமாறி போயிருக்கலாம் என்பது ஒரு சாத்தியம். விமானம், தொழில்நுட்ப கோளாறு காரணமாக ஏதாவது சிறிய விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டு இருக்கலாம் என்பது மற்றொரு சாத்தியம் என சுமார் 1 மணிநேரத்துக்கு தேடிக்கொண்டு இருந்தார்கள்.

அந்த விமானப் பாதையில் இருந்து விமானம் திருப்பப்பட வேண்டுமானால், அருகில் உள்ள எந்த தரைப்பகுதி ஓடு-பாதையை நாடி சென்றிருக்கலாம் என்பதை சில நிமிடங்களில் கணித்துக்கொண்டு, அந்த விமான நிலையங்களை தொடர்பு கொண்டார்கள்.

தரைக் கட்டுப்பாட்டு மையத்துக்கு தெரியாமல் இப்படி லேண்ட் பண்ணுவது பெரிதாக சாத்தியமில்லை என்றபோதிலும், விமானம் காணாமல் போனால் நடைமுறை இதுதான். இந்த தகவல் பெறப்படாமல், அடுத்த கட்டத்துக்கு போனால், நாளைக்கே விசாரணை என்று வந்துவிட்டால், வறுத்தெடுத்துவிடுவார்கள். விசாரித்ததில், எங்கும் தரையிறக்கப்படவில்லை என்பது தெரிந்தது.

அடுத்தாக, திசைமாறி போயிருக்கலாம் என்பது. இதற்காக இந்த வான் பகுதிக்கு அருகில் உள்ள அமெரிக்க வான் எல்லையை பங்குபோடும் பக்கத்து நாட்டுடன் தொடர்பு கொள்ளவேண்டும். வடஅமெரிக்காவில், அட்லாண்டிக் கடலுக்கு மேலுள்ள வான் எல்லையை அமெரிக்காவுடன் பங்குபோடும் நாடு கனடா. இந்த விமானம், கனடாவுக்கு மேலாக பறக்கவில்லை என உறுதிசெய்து கொண்டார்கள்.

இதுவும் உறுதி செய்யப்பட்ட பின்னர் தான், தேடுதல் நடவடிக்கைக்காக அமெரிக்க கரையோர காவல்படைக்கு தகவல் போனது. இவர்கள் இவ்வளவு வேலையும் செய்து முடித்து, தேடுதல் கோரிக்கை விடுத்தபோது, விமானம் விபத்துக்குள்ளாகி, சுமார் 2 மணிநேரம் ஆகிவிட்டது. முதலாவது தேடுதல் விமானம், அமெரிக்க கரையோர காவல்படைக்கு சொந்தமான விமானத்தளம் கேப் காட்டில் இருந்து புறப்பட்டு சென்ற போது, நேரம் அதிகாலை 3 மணி.

அந்த பகுதியில் அப்போது கடலில் இருந்த அமெரிக்க கரையோர காவல் படையின் அனைத்து ரோந்து படகுகளுக்கும் பொது ரேடியோ மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டு, குறிப்பிட்ட இடத்துக்கு அருகே உள்ளவர்கள் அங்கு செல்லுமாறு கூறப்பட்டது. இதுதவிர, கடல் பகுதி அவசரகால தகவல் அப்பகுதி யில் உள்ள அனைத்து கப்பல்களுக்கும் (தனியார் கப்பல்கள் உட்பட) அனுப்பப்பட்டது.

இதையடுத்து சிறிதும் பெரிதுமாக பல ரோந்துப் படகுகள், கப்பல்கள், மீன்பிடி மற்றும் சரக்கு கப்பல்கள் அந்த கடல் பகுதியை நோக்கி செல்லத் தொடங்கின.

சூரியன் உதிக்கும் நேரத்தில், அமெரிக்காவின் மரைன் அகாடமி பயிற்சிக் கப்பல்களில் ஒன்றான கிங்க்ஸ் பொயின்டர் அட்லாண்டிக் கடலின்மேல் பகுதியில் எண்ணெய் படிவுகளை முதலில் கண்டது. அதையடுத்து சிறிது நேரத்தில் சிறிய பொருட்கள் கடலில் மிதப்பது தெரிந்தது.

தேடுதல் வேட்டை தொடங்கியது. விமானத்தை தேடவேண்டிய கடல் பகுதியின் அளவு, சுமார் 25,000 சதுர கி.மீ. உடனடியாக விமானத்தின் பெரிய பாகங்கள் எதுவும் மிதந்த நிலையில் கிடைக்கவில்லை. காரணம், விமானம் அதிவேகத்துடன் வந்து கடலில் மோதிய காரணத்தால், கடலின் அடியே சென்றுவிட்டிருந்தது.

அமெரிக்க கடற்படையின் ஆழ்கடல் ரோபோ மூலம், கடலின் அடியே கறுப்புப்பெட்டி கண்டெடுக்கப்பட்டது. அந்த நேரத்தில், விமானத்தின் பாகங்கள் முழுமையாக கிடைக்கவில்லை. கறுப்புப்பெட்டி கிடைத்தவுடன், அதில் கவனம் செலுத்த தொடங்கி விட்டார்கள். கறுப்புப்பெட்டியில் என்ன விபரங்கள் கிடைத்தன. அவை எப்பிடி விசாரணைக்கு கை கொடுத்தன என்பது பற்றி அடுத்த வாரம் பார்ப்போம்.

**(தொடரும்...)**



# மே 18 நடந்தது என்ன?

**நந்திக்கடல்** கரையில், சுமார் 120 புலிகளின் உடல்கள் கிடந்தன. வந்த அனைவருமே, வாட்டசாட்டமான ஆட்கள். நன்கு ஆயுதம் தரித்திருந்தனர். ஒவ்வொருவரிடமும் இரவில் பார்க்கும் உபகரணங்கள், ஒவ்வொரு லைட் மெஷின் துப்பாக்கி, ஒவ்வொரு ஜெனரல் பேர்ப்பஸ் மெஷின் துப்பாக்கி இருந்தன. ஒவ்வொருவரின் உடலிலும், தற்கொலை அங்கிகள் காணப்பட்டன.

அவர்களின் அடையாள பட்டிகளில் (dog tags) உள்ள இலக்கங்களை பார்த்தபோது, அவர்கள் புலிகளின் மிகவும் சீனியர் படையணி என்று தெரிந்தது. இந்த தாக்குதலில் இருந்து இராணுவம் ஒரு விஷயத்தை புரிந்துகொண்டது. புலிகளின் மிக முக்கிய அணி ஒன்றை, அதுவும் நூற்றுக்கு மேற்பட்டவர்களை, நன்கு ஆயுதம் தரித்து, அனைவருக்கும் தற்கொலை அங்கிகொடுத்து அனுப்புகிறார்கள் என்றால், அந்த வழியாக மிகமிக முக்கியமான ஒருவர் தப்பித்துச் செல்ல திட்டமிட்டு இருந்திருக்கின்றனர். அது அநேகமாக பிரபாகரனாக இருக்கலாம்.

ஆனால், தாக்குதல் தோல்வியில் முடிந்தது. 59ஆவது படைப்பிரிவின் பாதுகாப்பு லைனை உடைத்து ஊடுருவிச் செல்ல முடிந்திருக்கவில்லை.

இவர்களுக்கு பின்னால் வந்திருந்த பிரபாகரன், திரும்பிசென்றிருக்க முடியாது, அதேநேரத்தில் 12.7mm எந்திர துப்பாக்கி குண்டு மழையை கடந்துசென்றிருக்கவும் முடியாது என்பதை புரிந்துகொண்ட இராணுவம், மற்றொரு விஷயத்தையும் ஊகித்துக்கொண்டது.

அது என்னவென்றால், பிரபாகரனும், நந்திக்கடலை அண்மித்த பகுதியில் எங்கோதான் இருக்கவேண்டும்.

பெரும்பாலும் நந்திக்கடல் கரை யில் மாங்குரோவ் புதர்கள் அடர்ந்த பகுதிகளில் மறைந்திருக்கலாம். அந்தப் பகுதியை அதுவரை இராணுவம் கிளியர் செய்திருக்கவில்லை.

இந்த முடிவுக்கு இராணுவம் வந்து, நந்திக்கடல் கரையோரமாக சில பகுதிகளில் தேடியதில் யாருமில்லை. இதற்குள் இருள் சூழ்ந்துவிட்டது.

இந்தக் கட்டத்தில், அவர்களது தேடுதல் வேட்டை நடைபெறாத பகுதி, சுமார் 800 மீற்றர் நீளமும், 20 மீற்றர் அகலமும் உள்ள மாங்குரோவ் புதர்கள் இருந்த பகுதிதான்.

மறுநாள் காலையில், அதிரடிப்படை-8ன் பிரிவாக இருந்த 4-வது விஜயபா படையினர், அந்த புதர்களில் தேடுதலை தொடங்கினார்கள். இவர்கள் புதர்களை நோக்கி சுட்டபடி நகர்ந்து செல்ல, ஒரு இடத்தில் புதர்களுக்கு உள்ளேயிருந்து எந்திரத் துப்பாக்கிகள் வெடிக்கத் தொடங்கின.

இந்த தகவல், அதிரடிப்படை-8 தளபதி கர்னல் ஜி.வி.ரவிப்பிரியவுக்கு உடனே தெரிவிக்கப்பட்டது.

"கேட்கும் ஓசைகளை வைத்து கணிப்பிட்டால், சுமார் 20 துப்பாக்கிகள் அங்கிருந்து சுடுகின்றன" என்ற விபரமும் கூறப்பட்டது.

அந்த புதர்களுக்குள் சிலர் மறைந்திருப்பது, உறுதியானவுடன், மேலும் இரு தேடுதல் அணிகளை அனுப்பினார், ரவிப்பிரிய.

மூன்று அணிகளும் சுட்டபடி நகர, நந்திக்கடல் கரை தண்ணீரில் உள்ள அந்த புதர்களில் இருந்த மூவர் இவர்களிடம் உயிருடன் பிடிபட்டனர்.

அவர்களை விசாரித்ததில், அவர்கள் பிரபாகரனின் பொடி-கார்டுகள் எனவும், பிரபாகரனும் மேலும் 30 பேரும் நந்திக் கடல் கரை தண்ணீரில் உள்ள அந்த மாங்குரோவ் புதர்களில் மறைந்திருக்கும் விஷயம் தெரியவந்தது.

இதையடுத்து, மூன்று தேடுதல் அணியை சேர்ந்தவர்கள் அனைவரும் அந்த புதர்களை நோக்கி சரமாரியாக சுட்டுத்தள்ள தொடங்கினார்கள்.

சிறிதுநேரத்தில், புதர்களுக்கு உள்ளேயிருந்து ஒலித்த துப்பாக்கி ஓசைகள் நின்றுபோயின. அதன் பின்னரே, இராணுவம் புதர்களை நோக்கி சுடுவதை நிறுத்தியது.

சிறிது நேரத்தின்பின், தண்ணீரில் இறங்கி புதர்களில் உடல்களை தேடும் நடவடிக்கை தொடங்கியது. உடல்கள் ஒவ்வொன்றாக வெளியே வந்தன.

அதிரடிப்படை-8ஐ சேர்ந்த சேர்ஜென்ட் முத்து பண்டா என்பவர், "இங்குள்ள உடல் ஒன்று பிரபாகரனின் போல உள்ளது" என தெரிவித்தார்.

கேர்ணல் ஜி.வி.ரவிப்பிரிய, அந்த உடல், பிரபாகரனின் உடல்தான் என்பதை உறுதிசெய்தார்.


இவர்கள் உடலை கண்டெடுத்த போது, உடல்சூடு மீதமிருந்தது. அதிலிருந்து, சில நிமிடங்களுக்கு முன்புதான் அவர் இறந்திருப்பார் என ஊகித்தார்கள்.

நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல, இதுதான் இலங்கை இராணுவத் தரப்பில் சொல்லப்பட்ட விபரங்கள். அவர்களது கூற்றுப்படி பிரபாகரன் இறந்தது, 5 ஆண்டுகளுக்கு முன், சரியாக 19ஆம் திகதி, மே 2009, காலையில்!!




# கழுதையால் கிடைத்த பாடம்....

ஒரு நாள் முல்லாவின் நண்பர் ஒருவர் முல்லாவிடம் வந்தார். முல்லா அவர்களே! உங்களுடைய கழுதையை எனக்கு இரண்டு நாட்களுக்கு தயவுசெய்து இரவலாகத் தாருங்கள் இரண்டு நாட்கள் கழிந்ததும் திருப்பி தந்துவிடுகிறேன் என்றார் நண்பர்.



அந்த நண்பர் முன்பும் இரண்டொரு தடவை கழுதையை இரவல் வாங்கிச் சென்றதுண்டு. அப்பொழுதெல்லாம் சொன்ன நாட்களில் அவர் கழுதையைத் தரவில்லை. தவிரவும் கழதைக்கு சரியான உணவளிக்காமலும் விட்டிருந்தார். அதனால் அவருக்குக் கழுதையை இரவல் தரக்கூடாது என்று முல்லா தீர்மானித்து விட்டார்.

நண்பரே! என் கழுதை இப்போது வீட்டில் இல்லை. அதை வேறு ஒருவர் இரவலாகக் கொண்டு சென்றிருக்கிறார் என்று முல்லா கூறி-னார். நண்பர் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்ட சமயம் முல்லாவின் வீட்டுக் கொல்லைப்புறத்தில் கழுதை கத்தும் குரல் கேட்டது. முல்லா அவர்களே கழுதை வீட்டில்தான் இருக்கிறது போலிருக்கிறதே! யாரோ இரவலாகக்கொண்டு சென்றதாகக் கூறினீர்களே என்ற நண்பர் வியப்புடன். கேட்டார்.

முல்லாவுக்குக் கோபம் வந்த விட்டது. நான் சொன்ன சொல்லை நீர் நம்பவில்லை. ஒரு கழுதையின் சொல்லைத்தான் நம்புகிறீர். என்மீது நம்பிக்கை இல்லாத ஒருவருக்குக் கழுதையை இரவல் தரக்கூடாது என்பதற்காகத்தான் வேறு ஒருவர் அதைக் கொண்டு சென்றார் எனச் சொன்னேன் என்றார். நண்பர் அவமானமடைந்து அந்த இடத்தை விட்டுக் கிளம்பினார்.

குண்டு குண்டு தவளையாம்
குளத்தில் வாழும் தவளையாம்
உண்டு கொழுத்த தவளையை
ஓடி வந்து பாருங்கள்!

முட்டை போன்ற கண்களும்
முதுகு வளைந்த தோற்றமும்
கிட்ட வந்து பார்த்திட
கிடைக்கும் மகிழ்ச்சி கோடியே!

புழுக்கள் பூச்சி தின்றிடும்
புயலைப் போலப் பாய்ந்திடும்
அழுக்குமிக்க நீரிலும்
அமைதியாக நீந்திடும்.

வம்பு செய்யும் வாயினால்
வலியச் சென்று பாம்பிடம்
துன்பப் பட்டுச் செத்திடும்
துடுக்குத் தவளை பாவமே!








நாம் பணத்தைப் பெருக்க எடுக்கும் முயற்சியில் காலம், இடம், தொழில் ஆகியவை சரியாக இருந்தாலும், தீய விதி குறுக்கிட்டால் நட்டம் உண்டாகும். அவை சரியாக இல்லை என்றாலும் நல்ல விதி வருமானால் இலாபம் உண்டாகும்.

## சிந்திக்க....



மகா அலெக்ஸாண்டர் இளம் வயதில் இருந்தே வீரமும் அறிவாற்றலும் மிக்கவராக இருந்தார்.

அவரது ஏழாவது வயதில் ஒருநாள், தனது ஒட்டகம் ஓடும் வேகத்தை அறிந்துகொள்ள விரும்பி, அதன்பின்னே வேகமாக ஓடிக்கொண்டிருந்தார்.

இதைப் பார்த்த அவரது தந்தையார். "நீ ஒட்டப்பந்தயத்தில் சேர்ந்து ஓடினால் வெற்றியடைந்து விடுவாய்" என்றார்.

இதைக் கேட்ட அலெக்ஸாண்டர். "என் மீது நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையைப் பார்த்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். ஓட்டப்பந்தயத்தில் நான் ஓடினால் வெற்றியடைவேன் என்பது நிச்சயம்தான். ஆனால், என்னுடன் போட்டியில் ஓடுகிறவர்கள் அரசர்களாக இருக்க வேண்டும்" என்றார்.

இளம் வயதில் இவ்வாறு அலெக்ஸாண்டர் கூறியது பிற்காலத்தில் உண்மையாக ஆனது.

அவர் பட்டத்துக்கு வந்து பதின்மூன்றே ஆண்டுகளுக்குள் இந்தியா வரையிலுள்ள ஆசிய நாடுகளின் பெரும்பகுதியை வென்றார். பல நாட்டு அரசர்கள் அவரை எதிர்த்து நிற்கமுடியாமல், தங்கள் நாடுகளை இழந்தார்கள்.

## பரிகாசம்!

புகழ்பெற்ற பிரெஞ்சு நாவலாசிரியர் அலெக்ஸாண்டர் டூமாஸ், தனது நண்பர்களுடன் மேடை நாடகங்களைப் பற்றி விமர்சித்து மகிழ்வது வழக்கம்.

ஒருநாள் நண்பர் ஒருவரின் நாடகம் ஒன்று நடந்தபோது, சபையில் தூங்கிக் கொண்டிருந்த ஒருவனைக் காண்பித்து, "பார்த்தீர்களா? உங்கள் நாடகம் செய்யும் வேலையை..." என்று கிண்டலடித்தார்.


அப்போது சும்மா இருந்த அந்த நண்பர், மறுநாளே டூமா்ஸின் நாடகம் ஒன்று நடந்தபோது சபையில் தூங்கிக்கொண்டிருந்த ஒருவரைக் காண்பித்தார்.

அதைக் கவனித்த டூமாஸ், சமயோசிதமாக, "ஓ... அதுவா! நேற்று உங்கள் நாடகத்தின்போது தூங்கியவன்தான் அவன். இன்னும் எழுந்திருக்கவே யில்லை" என்றுகூற நண்பர் அசந்துபோனார்.



## கிரீஸ் நாட்டு ஞானி

### தேல்ஸ் (மிலட்டூஸ்) பதில்கள்



**எல்லாவற்றிலும் தொன்மையானது எது?**

கடவுள். (ஏனெனில் அவர் என்றும் உள்ளவர்)

**எல்லாப் பொருட்களிலும் அழகு மிக்கது எது?**

உலகம். (ஏனெனில் அது கடவுளின் படைப்பு)

**எல்லாவற்றிலும் பெரியது எது?**

ஆகாயம். (ஏனெனில் படைக்கப் பட்டவை அனைத்தும் அதில் அடங்கும்)

**எல்லாவற்றிலும் நிலையானது எது?**

நம்பிக்கை. (ஏனெனில் மனிதன் எல்லாப் பொருட்களையும் இழந்தாலும் மீதமுள்ளது அது ஒன்றே)

**எல்லாப் பொருட்களிலும் நன்மையானது எது?**

அறம். (ஏனெனில் அதைத் தவிர வேறு ஒன்றும் நன்மை பயப்பதில்லை)

**மிக விரைவாக செயல்படுவது எது?**

மனம். (ஏனெனில் ஒரு நொடிக்குள் இவ்வுலகின் கடைக்கோடிக்கு அதனால் பறக்கமுடியும்)

**எளிமையானது எது?**

பிறருக்கு ஆலோசனை பகர்வது.

**மிகக் கடினமானது எது?**

உன்னை நீ உணர்வது.

**ஞானம் மிக்கது எது?**

காலம். (ஏனெனில் அது எல்லாப் பொருட்களையும் விளங்க வைப்பது)

## தப்பிக்க வழி!


முதல் அணுகுண்டு படைப்பை மேற்பார்த்து வந்த விஞ்ஞானி ரோபர்ட் ஓப்பன்ஹீமர் என்பவர், அமெரிக்க காங்கிரஸ் குழு முன்பு, குண்டு குறித்த விவரங் களை விளக்குவதாக இருந்தார். அவரது விளக்கத் தைக் கேட்க விஞ்ஞானிகள் திரண்டிருந்தனர்.


ஹீமர், அணுகுண்டால் ஏற்படும் அழிவுகள் குறித்து விளக்கிக்கொண்டிருந்த போது, "இதிலிருந்து தப்பிக்க ஏதாவது வழி இருக்கிறதா?" என்ற கேள்வி எழுப்பப்பட்டது.

"இல்லாமல் இருக்குமா? நிச்சயமாக இருக்கிறது!" என்றார் ஹீமர்.

"என்ன வழி என்று கூறுங்கள்" என்று அனை-வரும் ஆவலுடன் கேட்டனர்.

ஹீமர் தனக்கு முன்பிருந்து ஒலிபெருக்கியை சரிசெய்து கொண்டு, "அதுதான் சமாதானம்!" என்று மெல்லக் கூறிவிட்டு அருகிலிருந்த ஆசனத்தில் அமர்ந்துகொண்டார்.





சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்

**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.

சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 16.06.2014

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 1047**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல:167,**
**யாழ்ப்பாணம்.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1045**

**எஸ்.சாமந்தி, மாசார், பளை**

பரிசுக்குரியவர்: 1045

01. B.நேத்தன், பேராதெனிய வீதி, கண்டி.
02. ம.அபிசாலினி, அன்புவழிபுரம், திருகோணமலை.
03. கு.ஆஷா, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
04. த.சாரங்கன், பிரதான வீதி, பதுளை.
05. எம்.பிரிந்தா, அளம்பில், முல்லைத்தீவு.
07. இ.பவித்திரா, கரவெட்டி மேற்கு, கரவெட்டி.
08. மு.டிலானி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

பாராட்டுக்குரியவர்கள்

**இனி...**

ஆசியர்கள் எதனையும் கொண்டு செல்லாதவாறு அவர்களது வீடுகள், தொழில் நிலையங்களைக் கண் காணிக்குமாறு இராணுவத் தினருக்கு உத்தரவிட்டான்.

கண்காணிப்பு என்று சென்ற இராணுவம், ஆசியர்களின் வீடுகள், தொழில் நிறுவனங்கள் என்பவற்றுக்குள் புகுந்து பெறுமதி யான பொருட்களைச் சூரட்டிக் கொண்டது, சூறையாடியது.

இவர்களது வசதியும், வாழ்க்கை முறைகளும் திறமைகளும் உகண்டா மக்களில் கணிசமானோருக்கு பொறாமையை ஏற்படுத்தி இருந்தது.

ஆசிய நாட்டவர்களை 'கிழக்கு ஆபிரிக்காவின் யூதர்கள்' என்று உகண்டா மக்கள் வர்ணித்தனர்.

1970ஆம் ஆண்டு உகண்டாவில் முப்பதாயிரம் ஆசியர்கள் பிரிட்டிஷ் கடவுச் சீட்டுடன் தங்கியிருந்தனர். மேலும் இருபதாயிரம் பேர் சட்ட விரோதமாகக் குடியேறி இருந்தனர்.

உகண்டாவின் காவலனாக தன்னை உயர்த்திக் காண்பிக்க, உகண்டா மக்களுக்கு ஆசிய நாட்டவர்கள்மீது இருந்த வெறுப்பைப் பயன்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டான் அமீன்.

அதேசமயம், இஸ்ரேலின் பரமவிரோதியாக தன்னைக் காட்டிக்கொண்டு அரபு நாடுகளிடம் பெரும் நிதியுதவி பெறவும் திட்டம் தீட்டினர்.

இந்த இரு காரணங்களையும் தவிர இன்னொரு காரணமும் இருந்தது.

அந்தக் காரணத்தை தன் காதலிகளில் ஒருத்தியான இல்மாவிடம் கூறினான் அமீன். கூறும்போது இல்மா அவன் மடியில் இருந்தாள். அமீன் கைகள் இல்மாவின் மேல் இருந்தன, அலைந்தன.

"ஆசியர்களைத் துரத்திவிட்டு என்ன செய்யப் போகிறீர்கள்" என்றுகேட்ட இல்மா ஏராளமாகச் சேர்த்து வைத்திருக்கும் உடைமைகளை அவர்கள் எப்படிக் கொண்டு போகப் போகிறார்கள்? யம்மாடி அதற்கே நாளாகுமே! என்றாள் கண்களை அகலவிரித்து.

அகலவிரித்த கண்களில் அந்த உடைமைகள் மீதான அவளது ஆசை கொப்பளித்தது.

அவளது கழுத்துக்கு கீழே கைகளை அலையவிட்டபடி அவளது உதடுகளுடன் தன் உதட்டை ஒற்றி எடுத்துவிட்டு உரத்து நகைத்தான். நகைத்த படியே சொன்னான், அந்த உடைமைகளை எங்கள் சொந்த உடைமைகளாக்கத்தானே அவர்கள் 'கெட் அவுட்' சொல்லி இருக்கிறேன் என்றான்.

இடைக்கிடையே தனக்கு தெரிந்த ஆங்கிலச் சொற்களைக் கலந்து கிண்டலாகப் பேசும் புதிய முயற்சியிலும் இறங்கி இருந்தான் அமீன்.

அமீனின் பதிலால் இல்மாவின் கண்கள் மேலும் அகல விரிந்தன. ஆனந்தமிகுதியால் அவன் கழுத்தைச் சுற்றி தன் கைகளை வீசி அவன் முகத்தை தன் கழுத்துக்குக் கீழே அழுத்திக்கொண்டாள்.

கிடைத்த சந்தர்ப்பத்தை அமீன் நன்கு உபயோகித்துக் கொண்டதால், இல்மா அதிக மாகச் சிணுங்க வேண்டியிருந்தது. அதிகமாக உடலை அசைத்து நெளிய வேண்டியிருந்தது.

இல்மாவிடம் அமீன் சொன்னது பொய்யல்ல, என்பது மறுநாளே உறுதியானது.



"உகண்டாவை சுரண்டிச் சுரண்டி இதுவரை சாப்பிட்டபோதும் எங்கள் உடம்பில் ஓடுவது உகண்டாவைச் சுரண்டி எடுத்த இரத்தம். அதற்கு நன்றிசொல்ல உங்களுக்கு ஓர் அரியவாய்ப்பு. இப்போது உங்கள் கைவசம் உள்ள சொத்துப்பத்துக்களை யெல்லாம் அப்படியே வைத்துவிட்டுப் புறப்படுங்கள். கைச் செலவுக்கு மட்டும் நூறு டொலர் எடுத்துச்செல்ல இரக்கமுள்ள உகண்டா உங்களை அனுமதிக் கிறது! என்று அறிவித்தது உகண்டா வானொலி.

அமீன் கூறியதைத்தான் அரசின் ஆணையாக வானொலியில் வாசித்தனர்.

1972ஆம் ஆண்டு நவம்பர் 8ஆம் திகதிதான் ஆசிய நாட்டவர் உகண்டாவைவிட்டு வெளியேறு வதற்கான இறுதி நாள் என்றும் அறிவித்தது வானொலி.

அந்த அறிவித்தல் அடிக்கடி வானொலியில் ஒலிபரப்பானது.

திடீரென்று ஒருநாள் அமீன் கூறினான், "நாட்டைவிட்டு வெளி யேறுமாறு கூறப்பட்ட ஆசிய நாட்டவர்கள் இங்கேயே இருக்க சில தந்திரங்களைச் செய்கிறார் கள். தங்கள் முகங்களுக்கு சப்பாத்துப் பொலிஷ் பூசிக் கொண்டு உகண்டா வாசிகள் போல நடமாடுகிறார்கள். அப்படியாவது கைதுசெய்யப்பட்டால் அரசு கருணை காட்டாது!"

இவ்வாறு கூறிய அமீனிடம் சப்பாத்துப் பொலிஷ் பூசிக்கொண்டு நடமாடுவது சாத்தியம்தானா என்று அப்பாவித்தனமாகக் கேட்டார் சியம்பா.

அவரைநோக்கி அமர்த்தலான சிரிப்பொன்றை உதித்த அமீன் உமக்கு ஒபேடேயுடன் இருந்து மூளை மங்கி விட்டது. அமீன் ஆட்சியில் அப்படி யெல்லாம் துணிவதற்கு யார் இருக்கிறார்கள். எல்லாம் ஒரு கற்பனைதான். மக்களுக்கு பரபரப்பான செய்திகள் வேண்டாமோ? இப்படி புதிது புதிதாகப் புரளி கிளப்பிக் கொண்டிருந்தால் தான் மக்கள் நம் பக்கம் திரும்ப மாட்டார்கள். இதெல்லாம் இரகசியமான இராஜதந்திரம். வெளியே சொல்லி விடாதேயும் என்றுவிட்டு வழக்கமான இடிச்சிரிப்பை உதிர்த்தான்.

அமீன் மக்களை ஏமாற்றும் கலையில் தேர்ந்துவருகிறான் என்பது மட்டும் சியம்பாவுக்கு தெளிவாகப் புரிந்தது.

உகண்டா இராணுவத்தினரை குஷிப்படுத்தும் காரியம் ஒன்றையும் அமீன் செய்தான்.

ஆசியர்கள் எதனையும் கொண்டு செல்லாதவாறு அவர்களது வீடுகள், தொழில் நிலையங்களைக் கண் காணிக்குமாறு இராணுவத்தினருக்கு உத்தரவிட்டான்.

கண்காணிப்பு என்று சென்ற இராணுவம். ஆசியர்களின் வீடுகள், தொழில் நிறுவனங்கள் என்ப வற்றுக்குள் புகுந்து பெறுமதி யான பொருட்களைச் சுரட்டிக் கொண்டது. சூறையாடியது.

இத்தகவல் சியம்பாவுக்கு கிடைத்தது. அவர் அமீனிடம் ஓடோடிச் சென்று முறையிட்டார். அமீன் கோபப்படுவான் என்று எதிர்பார்த்து நின்றார் சியம்பா. அவனோ உரத்துச் சிரித்துவிட்டு சியம்பா! நீர் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் இன்னும் நிறைய இருக்கிறது. அமீன் மட்டும் ஆடம்பரமாக வாழ்கிறான். நாட்டைக் காக்கும் நாம் மட்டும் நாயாக வாழ்கிறோம் என்று இராணுவம் நினைத்துவிடக்கூடாது. அதனால் அவர்கள் இஷ்டத்திற்கும் இடைக்கிடையே ஆடவிடவேண்டும், அனுபவிக்கவிட வேண்டும். ஆசைப்படுவதை அடையவிட வேண்டும். பெண், பொன், பொருள் மூன்றிலும் எது தேவையோ அதனை எடுத்துக் கொள்ளட்டும் என்று கண் சிமிட்டினான்.

எப்படி என் மூளை என்பதுபோல் இருந்தது அந்தக் கண் சிமிட்டல்.

மறுநாள் அமீன்போட்ட உத்தரவு முதல் நாள் கூறியதற்கு முரணாக இருந்தது. ஆசியர்கள்கூட அமீனின் மனம் இரங்கிவிட்டதா? என்று வியந்தனர்.

வியப்பையும், ஆச்சரியத்தையும் முதலில் கொடுத்துவிட்டு பின்னர் அதிர்ச்சியைக் கொடுக்கப்போகிறான் அமீன் என்பதை அப்போது யாரும் அறிந்திருக்கவில்லை.

(தொடரும்)

அற்புதன் எழுதிய

# இடி அமீன்

உண்மைத் தொடர்...

அதிர் இடி 41



# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும்
வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே
ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும்,
பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 576

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | ■ | 11 | 12 |
| 13 | ■ | ■ | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | ■ | ■ | 24 |
| 25 | 26 | 27 | 28 | ■ | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **16.06.2014** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 576
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 574 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கோ | 2 ச | 3 ரி | 4 த் | 5 த | 6 ல் |
| 7 ச் | 8 க | 9 சா | ■ | 11 சா | 12 மி |
| 13 ச | 14 ம் | ■ | 16 வ | 17 னை | ■ |
| 19 டை | 20 பா | 21 ட் | ■ | ■ | 24 க |
| 25 யா | ■ | 27 டி | 28 னி | 29 ட் | 30 ப |
| 31 ன் | 32 ன | 33 பு | 34 கை | ■ | 36 ம் |

**இடமிருந்து வலம்**

01. ஒவ்வொருவரும் ஒவ்வொருவருக்கும் பிடித்தமாதிரி வாழப் பழகிக் கொண்டால் இந்தச் சொல் அழிந்து விடும்.
07. மொழிவழிக் கலை வெளிப்பாடுகளில் தலைமையான கலை.
11. துன்பம், நோய். (திரும்பியுள்ளது)
16. தடவை, வரிசை. (குழம்பியுள்ளது)
19. தஞ்சம், இருப்பிடம்.
25. தவசி. (குழம்பியுள்ளது)
31. தைரியவான், பலவான்.

**மேலிருந்து கீழ்**

01. சபலபுத்தி.
02. நீர் நிலை.
03. பேச்சுவிதம்; காரணச் சொல்.
05. கிளி, கிளிமொழியாள். (குழம்பியுள்ளது)
06. விஷ்ணு.
20. அப்படியாக. (குழம்பியுள்ளது)
21. பூடு, பற்றை. (திரும்பியுள்ளது)
28. காந்தி, மங்கலமொழியில் ஒன்று.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 574 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி.**

யோ.காந்திமதி, அநுராபுர வீதி, புத்தளம்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. எம்.கபிலன், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
02. எஸ்.சபீனா, மத்திய வீதி, காத்தான்குடி -03.
03. டொ.மணிமலர், தியேட்டர் வீதி, தம்பிலுவில் -02.
04. ச.நடராஜா, அன்புவழிபுரம், திருகோணமலை.
05. து.சாந்தினி, பரந்தன், கிளிநொச்சி.
06. கு.பிரியதர்சினி, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
07. கா.ஜீவினி, அச்சுவேலி மேற்கு, அச்சுவேலி.
08. டி.நஷார், ஜின்னாநகர், திருகோணமலை.
09. சை.யசோதா, பிரதான வீதி, கண்டி.

## போட்டோ எடுக்க பயப்படும் கிராமம்

வான்வெளியிலிருந்து எரிகல் விழும் என்ற பீதியால் மக்கள் மத்தியில் ஏற்படும் மனமாற்றங்களை மையமாக வைத்து உருவாகிறது அப்புச்சி கிராமம். அதேபோல் கிராமத்தில் எரிகல் விழும் சம்பவத்தை அடிப்படையாக கொண்டு உருவாகிறது முண்டாசுப்பட்டி. இப்பட இயக்குநர் ராம்குமாரிடம் கேட்டபோது, எரிகல் விழுவதை மையமாக வைத்து அப்புச்சி கிராமம் கதை பின்னப்பட்டுள்ளது.

ஆனால், நான் இயக்கும் முண்டாசுப்பட்டியில் எரிகல் விழுவதால் ஏற்படும் மூடநம்பிக்கையும், கிராமத்தில் யாரையாவது போட்டோ எடுத்தால் அவர்கள் சீக்கிரம் இறந்துவிடுவார்கள் என்ற பழங்கால மூட நம்பிக்கையையும் மையமாக வைத்து உருவாக்கப்பட்டு இருக்கிறது. இதில் விஷ்ணு, நந்திதா, ஆனந்தராஜ், காளி, ஷங்கர் உள்ளிட்ட பலர் நடித்து இருக்கின்றனர்.







## இளம் வயது நட்பு படமாகிறது

ரஜினியின் இளம்வயது நட்பு படமாகிறது. இதில் ரஜினியின் உயிர் நண்பர் ராஜ் பகதூர் முக்கிய வேடத்தில் நடிக்கிறார். நடிகராவதற்கு முன் பெங்களூரில் பஸ் கண்டெக்டராக ரஜினி பணிபுரிந்தபோது அதே பஸ்சில் டிரைவராக இருந்தவர் ராஜ் பகதூர். ரஜினியின் நடிப்பு ஆர்வம்கண்டு அவரை நடிப்பு கல்லூரியில் சேர்ந்து படிக்க உதவியவர். சூப்பர் ஸ்டார் ஆனபிறகும் ராஜ் பகதூருடன் ரஜினி நெருக்கமான நட்புடன் இருக்கிறார். இவர்களின் நட்பு தற்போது ஒரு வழி சாலை என்ற பெயரில் தமிழ், கன்னடத்தில் படமாக உருவாகிறது. இதில் முக்கிய வேடத்தில் ராஜ் பகதூர் நடிக்கிறார். ருஷி டைரக்டு செய்கிறார். இதுபற்றி ராஜ்பகதூர் கூறியது: இக்கதை ரஜினியுடன் எனக்கிருந்த நட்பை மையமாக வைத்து உருவாகிறது.

நாடகங்களில் நாங்கள் நடித்திருக்கிறோம். எங்கள் நட்பு எப்படி உருவானது. இன்றைக்கும் அது எப்படி குறையாமல் இருக்கிறது. இதில் ரஜினி வேடத்தில் நடிக்கப்போவது யார் என்பது இரகசியம். தியேட்டரில் படம் வெளியாகும்போதுதான் அது ரசிகர்களுக்கு தெரியும். ரஜினியின் புகழை வைத்து சம்பாதிப்பதற்காக இப்படத்தை எடுக்கவில்லை. மாறாக சமூகத்துக்கு இதன்மூலம் ஒரு செய்தியை சொல்ல முற்படுகிறோம். இதுபற்றி கூறி ரஜினியிடம் அனுமதி கேட்டபோது, உடனடியாக சம்மதம் தந்தார். படம் உருவாகி முடிந்ததும் என்னுடன் அமர்ந்து படம் பார்ப்பதாக தெரிவித்தார். இவ்வாறு ராஜ் பகதூர் கூறினார்.

## பச்சையை அ

நடிகை நயன்தாரா மாஜி காதலன் பிரபுதேவா பெயரை குறிக்கும் வகையில் தனது கையில் பச்சை குத்திக் கொண்டார். ஜோடிகள் பிரிந்தபோதும், அதை அழிக்க முடியாதபடி கையில் பச்சை குத்திவிட்டதால் அவர் இப்போது தவிக்கிறார். சில வருடங்களுக்கு முன் ரன்பீர் கபூர், தீபிகா படுகோன் காதல் ஜோடிகளாக வலம் வந்தனர். ரன்பீர் பெயரை கழுத்துப்பகுதியில் தீபிகா பச்சை குத்திக்கொண்டார். இந்நிலையில் ரன்பீருக்கும், கத்ரினா கைப்புக்கும் நெருக்கம் ஏற்பட்டது. இதில் மனம் உடைந்தார் தீபிகா.

ஆனாலும் பச்சை குத்திக்கொண்ட



## ஜி.வி.க்கு நயன் போட்டார் கண்டிஷன்

தனது பெயரை பயன்படுத்திக்கொள்ள இசை அமைப்பாளருக்கு பச்சைக்கொடி காட்டினார் நயன்தாரா. வெயில், ஆடுகளம் தலைவா உள்ளிட்ட பல்வேறு படங்களுக்கு இசை அமைத்திருப்பவர் ஜி.வி.பிரகாஷ். பென்சில் என்ற படம் மூலம் நடிகராக அறிமுகமாகிறார். இதன் ஷூட்டிங் முடிந்தது. இதையடுத்து த்ரிஷா இல்லன்னா நயன்தாரா என்ற படத்தில் நடிப்பதுடன் அவரே இசை அமைக்கிறார். புதுமுக இயக்குனர் அதிக் ரவிச்சந்திரன் இயக்குகிறார். படத்தின் பெயரை தயாரிப்பாளர் சங்கத்தில் பதிவுசெய்ய சென்றபோது பிரபல நடிகைகளின் பெயர்களை தலைப்பாக பதிவு செய்யவேண்டுமென்றால் அந்த நடிகைகளின் அனுமதி பெற்று வரவேண்டும் என்று கூறினர்.


இதையடுத்து நயன்தாராவிடம் இதுபற்றி தெரிவித்தார் பிரகாஷ். கதை கேட்டுவிட்டு சொல்வதாக நயன்தாரா கண்டிஷன் போட்டார். பிறகு இயக்குனர் நேரில் சென்று நயன்தாராவிடம் ஸ்கிரிப்ட் சொன்னார். அதை கேட்டுவிட்டு தன்பெயரை வைப்பதில் ஆட்சேபனை இல்லை என்று பச்சைக்கொடி காட்டியதுடன் மறுப்பில்லா கடிதமும் கொடுத்தார். விரைவில் த்ரிஷா பெயரை டைட்டிலில் சேர்க்கவும் த்ரிஷாவை சந்தித்து அனுமதி கேட்க பேச உள்ளாராம் ஜி.வி.பிரகாஷ்.

## பாரம் தாங்காமல் மேடை சரிந்தது

நடிகை நமீதா ஒரு விழாவில் கலந்துகொண்ட பொழுது மேடை சரிந்து விழுந்ததால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. நமீதாவுக்கு சிறிய அளவில் காயம் ஏற்பட்டுள்ளது.

சேலம் அருகே உள்ள நாமக்கல் என்ற நகரில் ரெட்டிபட்டி இளைஞர் நாடக நற்பணி மன்றத்தினர் நடத்தும் 50ஆவது நாடக விழாவில் கலந்துகொண்டு நாடக நடிகர்களுக்கு பரிசளிக்கும் நிகழ்ச்சிக்காக நமீதா நாமக்கல் சென்றார்.

நமீதாவிடம் ஆட்டோகிராப் வாங்குவதற்கு இளைஞர்கள் பலர் முண்டியடித்து மேடையில் ஏறினர். இதனால் மேடை ஆட்டம் கண்டு திடீரென சரிந்தது.




## சூதாட்டக்

ரஜினியின் மூத்த மக
திரைப்படம் 'வை ராஜா
காரியாக நடிக்கிறார். இ
தெரியாமல் இருந்த என்
மாற்றிவிட்டதாக நடிகை
கௌதம் கார்த்திக்,
படத்தில் டாப்ஸி வில்ல
உள்ள சூதாட்ட கிளப் ஒ
பிடிப்பு நடந்தது. வில்லனு
சூதாட்டக் காட்சிகள் படம
நயவஞ்சமாக உதவிசெய்
நிஜ வாழ்க்கையில் இ
பார்த்ததே இல்லை என்றும்
யான சூதாட்ட கிளப் எப்படி இ
டாப்ஸி, அங்கு நடந்த உண்மைய
இன்னும் கொஞ்சம்நேரம் அங்கே
மாறிப்போயிருப்பேன். நல்லவேளை அந்த
என்று கூறுகிறார் நடிகை டாப்ஸி.



# ... அழித்தார் தீபிகா

ரன்பீர் பெயரை அழிக்காமல் படங்கள் மற்றும் விளம்பரங்களில் நடித்துவந்தார். சமீபத்தில் குளிர்பான விளம்பர படமொன்றில் நடிக்க வந்தார் தீபிகா. அவரது கழுத்தை அங்கிருந்தவர்கள் உற்று பார்த்துக்கொண்டிருந்தனர். என்னவென்று விசாரித்தபோது, கழுத்தில் பச்சை குத்தியிருந்த ரன்பீர் பெயர் காணவில்லை அதனால் பார்க்கிறோம் என்றனர். இதனால் சலசலப்பு ஏற்பட்டது. ரன்பீர் பெயரை நயன்தாரா போலவே அழிக்கமுடியாத பச்சையாக வடிவமைத்திருந்தார் தீபிகா. ...திரசிகி...சை மூலம் மட்டுமே அதை அழிக்க முடியும் ...க் கூற...டதாம். இதனால் அவர் சத்திர சிகிச்சை செய்து கொண்டதாக கிசுகிசுக்கப்படுகிறது.





# கோச்சடையான் திரைவிமர்சனம்

தந்தையை கொன்றவர்களை பழிவாங்கும் கதை. கோட்டையபட்டினம் தேசத்து மன்னன் நாசர். இந்நாட்டில் தலைமை படைத்தளபதியாக இருப்பவர் கோச்சடையான். இவருக்கு ராணா, சேனா என இரு மகன்கள். கோர்ச்சடையான் சிவபக்தர். சிறந்த வீரரும்கூட. அதனால் நாட்டு மக்கள் அவர் மேல் அளவு கடந்த அன்பு வைக்கின்றனர். இது நாசருக்கு பிடிக்கவில்லை. ஆகையால் கோச்சடையானை எப்படியாவது அழிக்கவேண்டுமென்று முயற்சிக்கிறார்.

இந்நிலையில் ஒருநாள் கோச்சடையான், தனது போர் வீரர்களை அழைத்துக்கொண்டு வேறு நாடுகளுக்கு சென்று போருக்கு தேவையான குதிரைகளை வாங்கி கப்பலில் கொண்டுவருகிறார். அப்போது கோட்டையபட்டினத்தின் எதிரி நாடான கலிங்கபுரியை ஆட்சி புரியும் ஜாக்கி ஷெராப்பின் படை வீரர்கள் மறைந்திருந்து கோச்சடையான் கப்பல்கள்மீது பாய்ந்து சண்டையிடுகிறார்கள். அப்போது நடக்கும் சண்டையில் அனைவரையும் விரட்டியடிக்கிறார் கோச்சடையான்.

கலிங்கபுரி வீரர்கள் தப்பித்து செல்லும் செல்லும்போது கோச்சடையானின் கப்பல்களில் இருக்கும் உணவுகளில் விஷத்தை கலந்துவிட்டு செல்கிறார்கள். அதை உண்ணும் கோச்சடையானின் வீரர்கள் உயிருக்கு போராடுகிறார்கள்.

இவர்களை காப்பாற்றுவதற்காக கோச்சடையான் அருகிலிருக்கும் கலிங்கபுரிக்கு சென்று அரசர் ஜாக்கி ஷெராப்பை சந்தித்து, தன் போர் வீரர்களை காப்பாற்றும்படி கேட்கிறார். அதற்கு, ஜாக்கி ஷெராப் அவர்களை காப்பாற்றுவதென்றால், நீ கொண்டு வந்த வீரர்களையும், குதிரைகளையும் என்னிடமே கொடுத்துவிட்டு செல்லவேண்டும் என்று கூறுகிறார்.

அதற்கு கோச்சடையானும் சம்மதித்து அவரிடமே அனைத்தையும் விட்டுவிட்டு தனது சொந்த நாட்டுக்கு திரும்புகிறார். கோட்டையபட்டின அரசர் நாசரோ கோச்சடையானை பழிவாங்க இதுதான் சரியான தருணம் என்று அவர்மீது தேசத்துரோக குற்றம் சுமத்தி அவரை கொல்ல உத்தரவிடுகிறார்.

இவை அனைத்தையும் அறியும் கோச்சடையானின் இளைய மகனான ராணா தனது அப்பாவின் கனவை நிறைவேற்ற முடிவெடுக்கிறார். அதன்படி, கலிங்கபுரிக்கு செல்கிறார். அங்குள்ள படையில் சேர்ந்து வீரதீர சாகசங்கள் செய்து மன்னன் மனதில் இடம் பிடிக்கிறார். அந்நாட்டுக்கு படைத்தளதியாகவும் உயர்கிறார்.

கோட்டையபட்டினம் நாட்டு வீரர்கள் அங்கு அடிமைகளாக நடத்தப்படுவதை அறியும் ராணா, அவர்களை காப்பாற்றுவதற்காக திட்டம் போடுகிறார் ராணா. களத்தில் சண்டை போடுவதற்கு பதில் ராணாவும் சரத்குமாரும் கட்டிப் பிடிக்கின்றனர். இருவரும் சிறு வயது நண்பர்கள் என்கிறார்கள். இதற்கிடையில், ராணாவின் தங்கை ருக்மணியை சரத்குமார் விரும்புகிறார். சரத்குமாரின் தங்கை இளவரசி தீபிகா படுகோனேவுக்கும் ராணாவுக்கும் காதல் மலர்கிறது. இந்த காதல் விவகாரம் மன்னர் நாசரை கோபப்பட வைக்கிறது.

ஒரு கட்டத்தில் முகமூடி அணிந்த ஒருவன் அரண்மனைக்குள் புகுந்து நாசரை கொல்ல முயற்சிக்கிறான். அவனை வீரர்கள் பிடித்து முகமூடியை கழற்றும்போது அது ராணா என்பதை கண்டு அதிர்கின்றனர். தந்தையை கொன்றதற்காக பழி வாங்க வந்ததாக ராணா சொல்கிறான். அவனை சிறையில் அடைக்கின்றனர். அங்கிருந்து ராணா தப்பிக்கிறான்.

இதற்கிடையே, தீபிகா படுகோனேவுக்கும் ஜாக்கி ஷெராப் மகன் ஆதிக்கும் அவசர அவசரமாக நாசர் திருமண ஏற்பாடுகள் செய்கிறார். இறுதியில் தனது தந்தையை நயவஞ்சகத்துடன் கொன்ற நாசரை ராணா பழிவாங்கினாரா? தீபிகா படுகோனேவை கரம்பிடித்தாரா? என்பதே மீதிக்கதை.

மோஷன் கேப்சர் தொழில் நுட்பத்தில் அபாரமாக வந்துள்ள அனிமேஷன் படம். போர்க்கள காட்சிகளில் கிராபிக்ஸ் மிரட்டலாக உள்ளது.

கே.எஸ்.ரவிக்குமாரின் திரைக்கதையும், வசனமும், ஏ.ஆர்.ரகுமானின் இசையும் அதை மறக்கடிக்க செய்துவிடுகின்றன.

'கோச்சடையான' புதிய தொழில்நுட்ப அதிசயம்.





# ...ட்டக்காரியாக டாப்ஸி!

...மூத்த மகள் ஐஸ்வர்யா தனுஷ் இயக்கும் இரண்டாவது ...வை ராஜா 'வை'. இந்த படத்தில் டாப்ஸி சூதாட்டக் ...கிறார். இதுவரை சூதாட்டம் என்றால் என்னவென்றே ...ருந்த என்னை ரஜினியின் மகள் சூதாட்டக்காரியாக ...க நடிகை டாப்ஸி கூறியுள்ளார்.

...கார்த்திக், ப்ரியா ஆனந்த் நடிக்கும் 'வை ராஜா வை' ...ஸி வில்லனின் தோழியாக நடிக்கிறார். தாய்லாந்தில் ... கிளப் ஒன்றில் சமீபத்தில் இந்த படத்தின் படப் ... வில்லனுக்கும், கவுதம் கார்த்திக்கும் இடையேயான ...கள் படமாக்கப்பட்டன. இந்த சூதாட்டத்தில் வில்லனுக்கு ...தவிசெய்வது போன்ற காட்சியில் டாப்ஸி நடித்தார். ...கையில் இதுவரை தான் சூதாட்ட கிளப்பை நேரில் ...என்றும் வை ராஜா வை படப்பிடிப்பில்தான் உண்மை ...எப்படி இருக்கும் என்பதை பார்த்ததாகவும் கூறிய ...உண்மையான சூதாட்டத்தையும் வேடிக்கை பார்த்தாராம். ... அங்கேயே இருந்தால் நானும் ஒரு சூதாட்டக்காரியாக ...ா அந்த இடத்தை காலி செய்துவிட்டு வந்துவிட்டேன் ...ஸி.



# அலறடிக்கும் சமந்தாவின் உணவு!

தோல் அலர்ஜியால் அவதிப்பட்டு வந்த நடிகை சமந்தாவுக்கு கோடைக்காலம் வந்துவிட்டாலே பயம்தான். மீண்டும் தோல் அலர்ஜி தாக்கிவிடும் என்பதற்காக மிகவும் ஜாக்கிரதையாக இருக்கின்றாராம்.

மருத்துவர்களின் ஆலோசனைப்படி சூரிய ஒளி தோல் மீது படாமலும், அதிக வெளிச்சம் இல்லாத இடத்திலும் இருந்து தன்னை தோல் நோயில் இருந்து காத்து வருகிறார். மேலும் டாக்டர்கள் அவருடைய உணவு முறையையும் மாற்றியமைக்க ஆலோசனை தெரிவித்துள்ளனர். அவருக்காக ஸ்பெஷலாக சமையல் செய்ய இரண்டு சமையல் கலைஞர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் பெங்களூரில் உள்ள ஸ்டார் ஓட்டலில் தலைமை சமையல்காரர்களாக பணிபுரிந்தவர்கள். அவர்கள் இருவருக்கு சேர்த்து நாள் ஒன்றுக்கு ரூ.35000 சம்பளமாம்.

சமந்தாவின் உணவு வகைக்கு நாள் ஒன்றுக்கு ரூ.5000 மளிகை பொருட்களும், ரூ.35,000 சம்பளமும் சேர்த்து ரூ.40,000 மொத்தம் செலவாகிறது. இந்த செலவுமுழுவதும் தயாரிப்பாளர் தலையில்தான் விழுவதாக கூறப்படுகிறது. தற்போது அஞ்சான், கத்தி படங்களில் நடித்துக்கொண்டிருக்கும் சமந்தாவுக்கு அந்த படங்களின் தயாரிப்பாளர்கள் தினசரி நாற்பதாயிரம் அவருக்கு உணவுக்காக மட்டும் செலவழித்து வருகின்றனர்.

# தேன் கிண்ணம்

# காதலித்துப் பாரு

கற்பனையில் மிதக்க வேண்டுமானால்
காதலித்துப் பாரு.
கனவில் தேவதையைக் காண முனைந்தால்
காதலித்துப் பாரு.
கவிதை படைக்க நினைத்தால்
காதலித்துப் பாரு.
கடையில் அன்பளிப்பு வாங்க நினைத்தால்
காதலித்துப் பாரு.
கன்னியவள் மனதை அறிய
காதலித்துப் பாரு.
காளை நீ தாடி வைக்க விரும்பினால்
காதலித்துப் பாரு.
கானல் நீரைக் காணவேண்டுமானால்
காதலித்துப் பாரு.
கடிதம் எழுதக் கற்றுக்கொள்ள
நினைத்தால் காதலித்துப் பாரு.
கண்ணிவெடியை விட கன்னியர் அபாயம்
என்றால் காதலித்துப் பாரு.
களவைக் கற்றுக் கொள்ள விரும்பினால்
காதலித்துப் பாரு.
கருணையற்ற பேயைக் காணவேண்டுமானால்
காதலித்துப் பாரு.
கழுதையாய் பொதி சுமக்க விரும்பினால்
காதலித்துப் பாரு.
இத்தனையும் உந்தனிடம் அரும்பினால்
நீ விரும்பிப் பாரு....
காதலித்துப் பாரு
காதலித்துப் பாரு
கவிஞன் சொல்ல வந்தது புரியும்.

ஜெயம் ஜெகன்,
பதுக்குடியிருப்பு.



# இதயங்களின் முனகல்கள்....

தொலைந்து போன
இதயங்களின்
முனகல்கள்...
உங்களுக்கு கேட்கிறதா?

தோண்டி தோண்டி
எடுக்க எடுக்க
மன்னாரில்...
மண்டை ஓடுகளின்
எச்சங்களும்
எலும்புகளின் மிச்சங்களும்...

மிதந்துவருவதாக
தகவல்கள்...!
குழந்தைகளின்
விசும்பல்களும்
புதைந்து போய்
உள்ளனவாம்...

ஈனப்பிறவிகளாம்
இதயமில்லா
மனிதர்களின்
பாவச் செயலால்
மாண்டவர்கள் யார்?
அவர் செய்த
பாவம்தான் என்ன?
யார் பொறுப்பு கூறுவர்...

யாரால் இந்தக் கோரம்
நிகழ்ந்ததென தெரியமுன்
ஊகங்களும்...
அதனடிப்படையிலான
ஒப்படைகளும்..!
ஆய்வுகள் இன்றி
அந்தரத்தில்...
கனவுகளாய்
அலைகின்றன.
அலைய
விடப்பட்டுள்ளன!
எதற்காக...?

மண்டைதீவு,
மகிழ்நன்.



# நட்பின் வேதனை

பள்ளியிலே வந்த நட்பு
பாதியிலே முடிந்து விட்டால்
சேர்ந்து வாழ்ந்த காலமெல்லாம்
கனவுகளாய் போய் விடுமோ?
என் உயிரும் உனைத் தேடி
குற்றுயிராய் துடிக்குதடி
நண்பி நீயும் வந்துசேர்ந்தால்
என் மனசு ஆறுமடி.


ஆர்.நிஷா,
மண்கும்பான்.

# நிலா வழுக்கி கடலில் விழுமா..?

நம்
திருட்டுச் சந்திப்பு
ஒவ்வொன்றுக்கும்
மறைப்புத்தந்த
தென்னை மரம்
நேற்றுத்தான்
குருத்தழுகி பழுத்து
செத்துப் போனது...!

உன் வருகையின்
தாமதங்களால்
நான் காத்து நின்று
கால் வலித்து
நிலத்தில் குத்தி
விரல் தடவியும்
கிள்ளியும் நோண்டியும்
விடுவேனே பூவரசமரம்
அதுவும் நேற்றுத்தான்
வேரோடு கருகி
செத்துப் போனது...

எல்லா இரவுகளுக்கும்
சாட்சியாக விருந்த
கொய்யா மரம் - உன்
வீட்டு வாசலில்
பூவோடும் காயோடும்
அசைந்து அசைந்து
சிரிக்குமே கொய்யா மரம்
நேற்றுத்தான்
கிளை முறிந்து
சரிந்து போனது...



இவைகளை காணும் போது
நெஞ்சில் ஒரு முள்
தைத்துக் கொள்கிறது...

நிலாவாய்
தரிசிக்கிறேன்
தென்றலாய்
நீ தந்த அபிநயங்களும்
கொத்து கொத்தாய்
நட்சத்திரங்களை விடவும்
அழகானவைதான்.

நேற்றைய கவலையில்
என் உயிரின் ஆணிவேரில் கூட
ஒரு துளி நீரில்லை
கண்ணீர் முடிந்தால்
இனி என்னதான் மிஞ்சும்
யாரும் பாவத்தையும்
பழியையும்...
சுமந்து வாழ்வது
கொஞ்சக் காலம்தான்....

இனியாச்சும் உனக்கு
சுபமான செய்திகளை
நாளைய காற்று
கொண்டுவரலாம்
எப்போதும் சந்தோசித்தவனாய்
இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்

எப்போதோ...
நீ கேட்ட கேள்விக்கு
விடை யோடு முடிக்கின்றேன்
நிலா வழுக்கி கடலில் விழுமா?
ஆம்...
நீதான் விடை!

கே.வாலேந்திரன்,
கொள்ளுப்பிட்டி.

## ஈழத்து எழுத்தாளர்கள்



## கலைமகள் ஹிதாயா

கலைமகள் ஹிதாயா (பிறப்பு: ஏப்ரல் 1, 1966) ஹிதாயா ரிஸ்வி, ஹிதாயா மஜீத், மருதூர்நிஸா ஆகிய பெயர்களில் இலக்கியம் படைத்துவரும் எழுத்தாளரும், கவிஞரும் ஆவார்.

சாய்ந்தமருது, கல்முனையை பிறப்பிடமாகக் கொண்டவர் கலைமகள் ஹிதாயா அவர்கள். யூ. எல்.ஏ. மஜீத், ஸைனப் தம்பதிகளின் புதல்வியாக பிறந்த இவர் கல்முனை மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டிய முஸ்லிம் மகளிர் கல்லூரி, கல்எளிய அரபுக்கலாபீடம் ஆகியவற்றில் கல்வி பெற்றவர்.

தான் கற்கும் காலத்திலிருந்தே இலக்கியத் துறையில் ஈடுபாடு கொண்டிருந்த இவரின் கன்னிக் கவிதை ஏப்ரல் 1, 1982ஆம் திகதி 'மீண்டும்' எனும் தலைப்பிலும், அதே தினம் சிந்தாமணி பத்திரிகையில் அன்னை எனும் தலைப்பில் மரபுக் கவிதையும் பிரசுரமானது. அன்றிலிருந்து மூன்று தசாப்த காலமாக மரபுக்கவிதை, புதுக்கவிதை, சிறுகதை, கட்டுரை, நெடுங்கதை, மெல்லிசைப்பாடல், விமர்சனம் என எழுதிவரும் இவர் 1000க்கு மேற்பட்ட புதுக்கவிதைகளையும், மரபுக் கவிதைகளையும் எழுதியுள்ளார். அத்துடன் 30 சிறுகதைகளையும், 100 இற்கும் மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதி உள்ளார்.

இவரின் ஆக்கங்கள் ஊடகங்கள் வற்றிலும் மற்றும் இந்தியாவில் வெளிவரும் 'சமரசம்', அவுஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் 'தூண்டில்' ஆகிய இதழ்களிலும் இடம்பெற்றுள்ளன. இலங்கை வானொலியில் பல நிகழ்ச்சிகளில் குரல்கொடுத்துள்ள இவர் ரூபவாகினிக் கவியரங்குகளிலும் பங்கு கொண்டுள்ளார். அத்துடன் இலங்கை வானொலி மாதர் மஜ்லிஸ் பிரதித் தயாரிப்பாளராகவும் செயற்பட்டுள்ளார்.

**வெளிவந்த நூல்கள்**

நாளையும் வரும் (புதுக்கவிதை தொகுதி).

தேன் மலர்கள் - மரபுக் கவிதைத் தொகுதி. (இது இலங்கை முஸ்லிம் பெண் கவிஞரின் முதலாவது தொகுதி)

இரட்டை தாயின் ஒற்றைக் குழந்தை - புதுக்கவிதைத் தொகுதி (கவிஞர் மஸீதா புண்ணியாமினுடன் இணைந்து 2000ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார்)

இவற்றுடன் கண்டி சிந்தனைவட்டத்தின் கவிதைத் தொகுதிகளான புதிய மொட்டுகள், அரும்புகள் ஆகியவற்றிலும், காத்தான்குடி கலை இலக்கிய வட்ட வெளியீடான மணிமலர்கள் மரபுக்கவிதை தொகுதியிலும், சாய்ந்தமருது நூல் வெளியீட்டுப் பணியகத்தின் வெளியீடான 'எழுவான் கதிர்களிலும்' இன்னும் பல தொகுதிகளிலும் இவரது கவிதைகள் இடம்பெற்றன.

**தடாகம் (சிற்றிதழ்)**

இவரது இலக்கியப் பணியின் முக்கிய கட்டமாக தடாகம் கலை இலக்கியச் சஞ்சிகையைக் குறிப்பிடலாம். தடாகம் 12 இதழ்கள் வெளிவந்தன.

**பெற்ற கௌரவங்கள்**

கலைமகள் விருது 1985, சாய்ந்தமருது இஸ்லாமிய கலை இலக்கிய ஒன்றியம் 1988ல் இளைஞர் சேவைகள் மன்றமும், இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து நடத்திய கவிதைப் போட்டியில் அகில இலங்கை ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் முதலாம் இடத்தைப் பெற்றமைக்காக ஜனாதிபதி விருது.

1999ஆம் ஆண்டு 'ரத்ன தீப' சிறப்பு விருது பெற்ற முதலாவது பெண் கவிஞர்.

2002 இல் முஸ்லிம் கலாசார அமைச்சின் அனுசரணையோடு நடாத்தப்பட்ட உலக இஸ்லாமிய மாநாட்டில் வைத்து இளம் படைப்பாளிக்கான விருது.

2007ஆம் ஆண்டு உயன்வத்தையில் நடைபெற்ற இலக்கிய விழாவில் 'கலையரசு' விருது.

2009இல் பிரதியமைச்சர் எஸ்.நிஜாமுதீனால் நிந்தவூர், ஆர்.கே.மீடியா பணிப்பாளர் ராஜகவி ராஹில் (இலங்கை வானொலி அறிவிப்பாளர்) சார்பில் 'கவித் தாரகை' பட்டம் பெற்று கௌரவிக்கப்பட்டார்.







## பிரேசில் துளிகள்

- இறுதிப் போட்டிக்கான அனுமதிச்சீட்டின் விலை 990 அமெரிக்க டொலர் (ஏறத்தாள 14000 ரூபா)
- கிறிஸ்ரியானோ றொனால்டோவின் வருட உழைப்பு 43 மில்லியன் அமெரிக்க டொலர் (645 கோடி ரூபா அளவில்)
- எதிர்பார்க்கப்படும் ரசிகர்கள் நேரடியாக 350,000 பேர்.
- வொலன்ரியர் உதவியாளர்கள் 1500 பேர்.
- இது இருபதாவது உலகக் கிண்ணம்.
- பிரேசில் இதுவரை 5 உலகக் கிண்ணங்களை வென்றுள்ளது.
- இதற்கு முன்னதாக இறுதிப்போட்டியில் தென்னாமெரிக்க நாடுகள் சந்தித்தது. 1950 இல் உருகுவே - பிரேசில் - உருகுவே 2-1 என்று வென்றிருந்தது.
- இதுவரை நடைபெற்ற 19 இறுதிப் போட்டிகளில் 8 நாடுகள் கிண்ணம் வென்றுள்ளன.
- 2014 உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு ஸ்கன்டிநேவிய நாடுகள் (டென்மார்க் - நோர்வே - சுவீடன் - பின்லாந்து - அய்ஸ்லண்ட்) எதுவும் தகுதி பெறவில்லை. இப்படி ஒரு சந்தர்ப்பம் 1982இலும் ஏற்பட்டது.
- உலகக் கிண்ணப் போட்டிகளில் இம்முறை ஜேர்மனி போர்த்துக்கல் அணியைச் சந்திக்கும்போது அது ஜேர்மனியின் 100ஆவது போட்டியாக அமையும். உலகக் கிண்ண வரலாற்றில் நூறாவது போட்டியில் விளையாடும் முதல் அணியும் ஜேர்மனியாகும்.



# சிறகுகள் விரிகின்றன

**உலகக்** கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ள இவ்வேளையில் போர்த்துக்கல் மற்றும் றியல் மெட்ரிட் அணிவீரர் கிறிஸ்ரியானோ றொனால்டோவிற்கு உற்சாகம் அளிக்கும்வகையில் செய்திகள் வெளியாகின்றன.

ஒரு கருத்துக்கணிப்பின்படி உலகின் மிகக் கூடுதலான சந்தைப் பெறுமதிவாய்ந்த வீரராக றொனால்டோ இனங்காணப்பட்டுள்ளார்.

இந்தக் கருத்துகணிப்பு பிரிட்டன், ஐக்கிய அமெரிக்க நாடுகள், பிரேசில், சீனா, இந்தியா உள்ளிட்ட 13 நாடுகளில் 6500 பேரிடம் வினவப்பட்டு பெறப்பட்ட பெறப்பட்ட முடிவாகும் இந்த முடிவு நூறு கோடியே ஐம்பது இலட்சம் ரசிகர்களின் பிரதிபலிப்பை வெளிக் காட்டுகிறது என்று கணிக்கப்பட்டுள்ளது. அதேவேளை 2013இன் பலூன் டீ ஓர் விருது பெற்றவரும், கடந்த வாரம் றியல் மெட்ரிட் பத்தாவது சம்பியன் கிண்ணம் பெறக்காரணமாக இருந்த இவர் புவிப்பந்தில் அதிகளவானவர்களால் அறியப்பட்ட வீரராயும் பதிவினை ஏற்படுத்தியுள்ளார்.

83.0 வீதமானவர்கள் கிறிஸ்ரியானோ றொனால்டோ என்பவர் யார் என்பதை அறிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்பற்றி குறிப்பிடும் வர்த்தகத்துறை விற்பன்னர்கள், இவரால் ...ப்படி இவர் விளையாடும் அணி பிரபல்யப்படுகிறதோ, அதேவகையில் இவர் விளம்பரங்களை ஏற்றுக் கொள்ளும் நிறுவனங்களும் வருமானமும் பெருமையும் பெறுகின்றன என்று கூறியுள்ளனர். இன்னொரு வகையில் இவருக்கு 82 மில்லியன் பேர் Facebook Likes இருக்கிறார்கள். அதேவேளை 26 மில்லியன Twitter Followers-ம் இருக்கிறார்கள்.



# இந்தியா சாதிக்குமா?

**பங்களாதேஷ்** அணியுடனான மூன்று ஒருநாள் போட்டித் தொடருக்கு இந்திய அணியின் பல பிரபல்யங்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. காரணங்கள் இரண்டு. ஒன்று அவர்களுக்கு சிறிய ஓய்வொன்றை கொடுப்பது. மற்றது, புதிய வீரர்களைக் களமிறக்கிப் பரிசோதிப்பது. அணித்தலைவர் டோனி, விராட் கோஹ்லி, றோகித் சர்மா, அஸ்வின், ரவீந்திர ஜடேஜா, மொஹமட் சமி, சிக்கர் தவான் ஆகியோரே அணியில் இருந்து தவிர்க்கப்பட்டவர்கள்.

சுரேஸ் ரெய்னாவின் அணித் தலைமையில் செல்லவுள்ள அணி வீரர்கள் றொபின் உதப்பா - அஜின்சியா றானே - புஜாரா - அம்பாத்தி ராயுடு - மனோஜ் திவாரி - கேதர்யாதவ் - விருதுமான் சாஹா - பெர்வேஸ் ரசூல் - அக்சார் பட்டேல் - வினய்குமார் - உமேஸ் யாதவ் - ஸ்ரூவட்பின்னி மோகித் சர்மா - அமித் மிஸ்ரா. இந்த வீரர்கள் அனைவருமே திறமை மிகுந்த ஐ.பி.எல். போட்டிகளின்மூலம் அறியப்பட்ட வீரர்கள். மொத்தத்தில் விடுபட்டவர்கள், சேர்க்கப்பட்டவர் எல்லோருமே திறமை மிகுந்தவர்கள். ஆகவே இரண்டாம் நிலை அணியொன்றைச் சந்திக்கவேண்டி வந்துவிட்டதே என்று பங்களாதேஷ் கவலைப்பட வேண்டியதில்லை. மாறாக புதிய இந்திய அணியை வெற்றிகரமாகச் சந்திக்கவேண்டிய வியூகங்களைத் தான் வகுக்கவேண்டும்.

இன்னொருபுறம் இங்கிலாந்து செல்லும் இந்திய அணியில் சிலகாலம் சேர்த்துக் கொள்ளப்படாமல் இருந்த கௌதம் கம்பீர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இவர் 54 டெஸ்ட் போட்டியில் விளையாடி 9 சதங்களுடன் 4000 ஓட்டங்களுக்கு மேல் எடுத்திருப்பவர். ஒரு வருட காலம் ஒதுக்கப்பட்ட இவர் திடீரெனச் சேர்த்துக்கொள்ளப்பட்டது ஆச்சரியமானதுதான். ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக உள்ள முரளி விஜய், சிக்கர் தவானுடன் இவருக்கு ஆரம்பத்துடுப்பாட்ட வீரருக்கான போட்டி இருக்கும். குறிப்பிட்ட கால இடைவெளியின்பின் காணவில்லையே பேசப்பட்ட இருவரில் ஒருவர் மீண்டும் அணிக்குத் திரும்புகிறார்.

ஆனால் வீரேந்திர ஷேவாக் இந்தப் பட்டியலில் இல்லை. நடந்துமுடிந்த ஐ.பி.எல் போட்டிகளில் ஷேவாக் அதீத திறமைகாட்டியிருந்தால், அவர் பற்றியும் யோசித்திருப்பார்களோ, என்னவோ தெரியவில்லை. டெஸ்ட் போட்டி அனுபவம் எதுவும் இல்லாத பந்துவீச்சாளர்கள் பங்கஜ் சிங், ஈஸ்வர் பாண்டே, மற்றும் ஸ்ரூவட் பின்னி மூவரும் இங்கிலாந்துக்கான டெஸ்ட் சுற்றுப்போட்டியில் இந்திய அணிசார்பாக இடம்பிடித்த மூவராவர்.



# சந்தர்ப்பம் வாய்க்குமா?

**பாகிஸ்தான்** அணியில் அண்மைக் காலத்தில் காணமுடியாமற்போன முகங்களில் ஒன்று யூனுஸ்கான். இவர் திறன்நிலை குறைவுகாரணமாக அணியில் இடம்பிடிக்க முடியாமற்போனமையே காரணம் என்று கூறப்பட்டாலும், இதனை அவர் ஏற்கத் தயாராக இல்லை. தனது கிரிக்கெட் வாழ்க்கை இன்னும் முடிந்துவிடவில்லை என்றும், அடுத்த வருடம் நடைபெறவிருக்கும் உலகக் கிண்ண ஒருநாள் போட்டிகளில் விளையாடவேண்டும் என்பதே தன் ஆசையென்றும் கூறியுள்ளார்.

அவர் டெஸ்ட் போட்டிகளில் துடுப்பாட்ட சராசரியாக 54.38-ஐக் கொண்டிருக்கும் இவர் 23 சதங்களுக்கு சொந்தக்காரர். அதோடு 253 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 7014 ஓட்டங்களையும் பெற்றிருப்பவர். அதோடு 2009 உலகக் கிண்ண இருபதுக்கு இருபது பாகிஸ்தான் அணியின் தலைவராகவும் இருந்தவர். தான் இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்ளவேண்டும். எனது கிரிக்கெட் வாழ்க்கையை வித்தியாசமான, கௌரவமான முறையிலேயே முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அணியிலிருந்து நீக்கப்பட்டு அதன்தொடர்ச்சியாக கிரிக்கெட் வாழ்க்கையில் இருந்து விலகிவிட்டேன் என்றபெயருடன் விடைபெற நான் விரும்பவில்லை. ஒரு சந்தர்ப்பதில் நானாக விரும்பி ஓய்வை அறிவிப்பவனாக இருக்கவே விரும்புகிறேன் என்று கூறியுள்ளார்.

மேலும் உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு முன்நிறையவே பயிற்சி ஆட்டங்களுக்கான சந்தர்ப்பம் இருப்பதாகவும் அவற்றைத் தான் பயன்படுத்தப் போவதாகவும் கூறியுள்ளார். 36 வயதாகும் யூனுஸ்கானின் திறமை பற்றிச் சந்தேகம் இல்லை.

ஆனால் பாகிஸ்தான் அணியில் நிறைய இளம் தலைமுறையினர் தம் திறமையை வெளிக்காட்டிக் கொண்டுவரும் இச்சந்தர்ப்பத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் தெரிவுக் குழுவினர் எத்தகைய கண்ணோட்டத்துடன் இவரைப் பார்க்கப்போகிறார்கள் என்பதுதான் தெரியவில்லை.




விளையாட்டு
ஜோசெப் கிருஷ்ணா




# இறுதிமூச்சுவரை ஏழைகளுக்காக பாடுபட்டவர்!

இவா... ஆர்ஜென்டினாவின் புகழ்பெற்ற நடிகை. தொழிலாளர் நலன்களுக்காக உழைத்தவர். பெண்கள் உரிமைகளுக்காகப் போராடியவர். பெண்கள் அரசியல் கட்சியைத் தோற்றுவித்தவர். ஏழைகளுக்காக அறக்கட்டளை உருவாக்கி தன் இறுதிமூச்சு உள்ளவரை பாடுபட்டவர். ஆர்ஜென்டினாவின் ஆன்மீகத் தலைவர் என்று அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டவர்!



1919 மே 7... ஆர்ஜென்டினாவில் உள்ள லோஸ் டோல்டோஸ் என்ற சிறிய கிராமத்தில் பிறந்தார் மரியா இவா துவார்டே. ஓரளவு வசதியான குடும்பம். இவாவின் அம்மா, அவரது அப்பாவுக்கு இரண்டாவது மனைவி. அவருக்குப் பிறந்த 5 குழந்தைகளில் இவர் 4ஆவது குழந்தை. இவாவின் 6 வயதில் அப்பா இறந்துபோனார். சட்டபூர்வ மனைவி இல்லை என்பதால், இவரின் அம்மாவுக்கு சொத்தில் எந்தப் பங்கும் கிடைக்கவில்லை. இறுதிச்சடங்கில் பங்கேற்கக்கூட அனுமதிக்கவில்லை. குடும்பம் லாஸ் பம்பஸுக்குக் குடிபெயர்ந்தது. அது ஏழைகள் மிகுந்த கிராமம். எங்கும் அழுக்கும் தூசியும் நிறைந்திருந்தது. மிகச்சிறிய வீட்டில் குழந்தைகளுடன் தங்கினார் இவாவின் அம்மா. அருகில் இருந்தவர்களுக்கு துணி தைத்துக்கொடுத்து, கொஞ்சம் சம்பாதித்தார். சட்டபூர்வ அங்கீகாரம் கிடைக்காததால் இவாவின் குடும்பம் அவமானங் களைச் சந்திக்க நேர்ந்தது.

இவாவுக்குப் படிக்கும்போதே நடிக்கும் ஆர்வம் வந்தது. பள்ளி நாடகங்களில் நடிக்க ஆரம்பித்தார். சில ஆண்டுகளில் சகோதரர்கள் வேலைக்குச் செல்ல ஆரம்பித்தனர். அம்மா சமையல் வேலைக்குச் சென்றார். இதனால் குடும்பம் ஓரளவு வறுமையிலிருந்து மீண்டது. 15வயதில் புனோஸ் ஏரிஸ் நகருக்குச் சென்றார் இவா. புத்திசாலியாகவும் அழகாகவும் இருந்த அவருக்கு வானொலியில் பணி புரியும் வாய்ப்பு கிடைத்தது.

விரைவில் திரைப்பட நடிகையாகவும் மாறினார். பொருளாதார நிலை சீரடைந்தது.

1944ஆம் ஆண்டு மிகப்பெரிய பூகம்பம் நிகழ்ந்தது. அதில் 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இறந்துபோனார்கள். பூகம்ப மீட்பு நடவடிக்கைகளுக்காக நிதி திரட்டப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் தொழிலாளர் துறைச்செயலாளரும் அரசியல்வாதியுமான யான் பெரோன் கலந்துகொண்டார். இதே நிகழ்ச்சியில் நடிகையாக இவாவும் கலந்துகொண்டார். இருவருக்கும் இடையில் நட்பு மலர்ந்தது. விரைவில் காதலர்களானார்கள். இருவரும் சேர்ந்து வாழத்தொடங்கினர். பெரோனுக்கு 48 வயது... இவாவுக்கு 24. பெரோன் தொழிலாளர் நல அமைச்சராக இருந்தார். ஏற்கெனவே ஏழை எளிய மக்களின்மீது அன்பும் அக்கறையும் கொண்டிருந்த இவாவுக்கு அரசியலில் ஆர்வம் வந்தது. உடனே தொழிற்சங்கங்களை ஆரம்பித்தார்.

அவற்றுக்குத் தலைவராகவும் செயற்பட்டார். இருவரும் தொழிலாளர் நலனுக்காக கடுமையாக உழைத்தனர். அப்போது இவர்களின் மேல் இராணுவமும் செல்வந்தர்களும் மிகவும் கோபம் கொண்டிருந்தனர். விரைவில் அரசாங்கத்தைத் தூண்டி, பெரோனைக் கைது செய்தனர். மூன்றரை இலட்சம் தொழிலாளர்களை இணைத்தார் இவா. அவர்கள் அனைவரும் பெரோனுக்கு விடுதலை கேட்டு போராட்டம் நடத்தினர். 6 நாட்களுக்குப் பிறகு விடுதலையானார் பெரோன். இதன்மூலம் இவாவின் மீதான பெரோனின் அன்பு அதிகமானது. சட்டபூர்வமான குழந்தையாக இல்லாமல் இவா பட்ட கஷ்டங்கள் அவருக்குத் தெரியவந்தது. உடனே, இவாவைச் சட்டபூர்வமாகத் திருமணம் செய்துகொண்டார்.

## உருளைக்கிழங்கு பொடி சேவு

**தேவையான பொருட்கள்:**

வேகவைத்து மசித்த உருளைக்கிழங்கு - 4 பெரியது,
கடலை மா - 2 கப்,
பச்சரிசி மா - 1/4 கப்,
பெருங்காயம் - 2 சிட்டிகை,
கரம் மசாலா - 1/2 கரண்டி,
மஞ்சள் தூள் - 1/2 கரண்டி,
மிளகாய் தூள் அல்லது மிளகு தூள் - 1 கரண்டி,
உப்பு - தேவையான அளவு,
எண்ணெய் - தேவையான அளவு.

செய்முறை:

எண்ணெயைத் தவிர மேலே சொன்ன எல்லாவற்றையும் சிறிது தண்ணீர் தெளித்து மசித்த கிழங்குடன் முறுக்கு மா பதத்துக்கு கெட்டியாகப் பிசைந்துகொள்ளவும். கடாயில் எண்ணெயைக் காயவைத்து, ஓமப்பொடி அச்சில் கலவையைக் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு சூடான எண்ணெயில் பிழியவும். நன்கு பொரிந்து மேலே வந்ததும் திருப்பிப்போட்டு எடுத்து ஆறவிட்டு ஒரு டப்பாவில் போட்டுவைக்கவும்.

சமையல் குறிப்பு

## சமையல் டிப்ஸ்...

* பெண்கள் சமையல் செய்யும்போது சூடான எண்ணெய் பட்டுவிட்டால் அந்த இடத்தில் உருளைக்கிழங்கைச் சிறிது அரைத்துப் பூசுங்கள். கொப்பளம் ஏற்படாது.

* தேவைக்கு அதிகமாக இஞ்சி இருந்தால் அதை மண்ணில் புதைத்து வைத்து தண்ணீர் விட்டு வையுங்கள். தேவைப்படும்போது எடுத்து உபயோகிக்கலாம். இஞ்சி காய்ந்து போகாது.

* பாகற்காய் சீக்கிரம் பழுத்துவிடும். இதைத் தவிர்க்க அதை இரண்டிரண்டாக நறுக்கி வைத்துவிடுங்கள்.

* உருளைக் கிழங்கை உப்புக் கரைத்த நீரில் பதினைந்து நிமிடங்கள் ஊற வைத்துவிட்டுப் பிறகு அடுப்பில் வைத்தால் சீக்கிரம் அது வெந்துவிடும்.

* முதல்நாள் மாலையில் வாங்கிய பூ மறுநாள் காலை வரையில் வதங்காமல் இருக்கவேண்டுமா? பூவை ஈரத் துணியில் சுற்றி வைக்காதீர்கள். ஒரு பாத்திரத்தை நன்றாகக் கழுவிவிட்டு அந்தப் பாத்திரத்திற்குள் பூவை வைத்து மூடிவையுங்கள். பூ வாடாமல் வதங்காமல் வைத்த மாதிரியே இருக்கும்.

## இடுப்பு வலி நீங்க வெந்தயம்

* மாதவிடாய் காலங்களில் பெண்களுக்கு வயிற்று வலியும் இடுப்பு வலியும் ஏற்படுவது இயற்கை. இந்த வலிகளைப் போக்க வெந்தயத்துடன் நூறு கிராம் அளவுக்கு வெந்தயத்தை நன்றாக பொடியாக்கி, அதில் இருநூறு கிராம் சீனியை கலந்து சாப்பிட வயிற்றுவலி, இடுப்பு வலி நீங்கும்.

* வெள்ளைப் பூண்டுடன் கருப்பட்டியை கலந்து சாப்பிட இடுப்புவலி பெருமளவு குறைந்துவிடும். * நீங்கள் உயரமான குதி செருப்புக்களை அணியும் பழக்கமுள்ளவரெனில், அதன்மூலம்கூட உங்களுக்கு இடுப்பு வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. அதிக உயரமுள்ள குதிக்கால் உடைய செருப்புகளை அணிவதை தவிர்க்கவேண்டும்.

உயரமான குதி செருப்பு அணிந்து நீண்டநேரம் நடந்து செல்வதால் உடல் எடை முழுவதும் பாதத்தை நோக்கி அழுத்தப்படுவதால் முதுகு வலி, மூட்டு வலி, இடுப்பு வலி ஏற்படும். மிளகை பொன் வறுவலாக வறுத்து அதில் எள் எண்ணையை கலந்து சாப்பிட இடுப்பு வலி குறையும். தளுதாளி இலையுடன் பூண்டு, எள் எண்ணெய் (நல்லெண்ணெய்) சேர்த்து துவையல் செய்து சாப்பிட இடுப்புவலி குணமாகும்.



# சத்திரசிகிச்சை செய்த பெண்கள் கடைப்பிடிக்க வேண்டியவை

சுகப்பிரசவமான பெண்கள் குழந்தை பெற்ற 3 நாட்களில் எல்லாம் வீட்டிற்கு சென்றுவிடுவார்கள். அதற்கு பிறகும் அவர்கள் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கமாட்டார்கள். ஆனால் சத்திர சிகிச்சை நடந்த பெண்களின் நிலையோ தலைகீழ், சத்திர சிகிச்சை முறைப்படி நடந்த பிரசவத்தின் தாக்கங்கள் ஒவ்வொரு பெண்ணை பொறுத்து மாறுபடும்.

உங்களுக்கு சத்திர சிகிச்சை மூலம் குழந்தை பிறந்திருந்தால், நீங்கள் செய்யக்கூடிய மற்றும் செய்யக்கூடாத முக்கியமான விஷயங்களை கீழே விளக்கியுள்ளோம்.

உங்களுக்கு சரியான வலி நீக்கிகள் கொடுக்கப்படவில்லை என்றால், சத்திர சிகிச்சை மூலம் நடந்த பிரசவம் வலியை உண்டாக்கும். ஒருவேளை, உங்களுக்கு அது கொடுக்கப்படவில்லை எனில், கேட்டு வாங்கிக்கொள்ளுங்கள். எபிட்யூரல் நடந்த பிறகு, எப்படி நடமாட்டத்தை தொடங்குவது என்பதை பற்றி தெரிந்துகொள்ள நேர்ஸின் உதவியை நாடிடுங்கள்.

மேலும், இருமல், தும்மல் போன்றவைகள் வரும்போது, அதிக வலி ஏற்படாமல் இருக்க, அறுவை சிகிச்சை நடந்த இடத்தில் கைகளை எப்படி வைக்கவேண்டும் என்பதை பற்றியும் கற்றுக்கொடுப்பார்கள். நடைகொடுப்பது சிரமமாகத்தான் இருக்கும். மெதுவாக உந்தி நடந்தாலும்கூட, முயற்சிசெய்து நடையை தொடருங்கள்.

எவ்வளவு அதிகமாக நடக்கிறீர்களோ, அதற்கேற்ப உங்களின் இரத்த ஓட்டமும் சுலபமாக இருக்கும். அதனால் அறுவை சிகிச்சை நடந்த பகுதிகளில் இரத்தம் உறைவது தடுக்கப்படும். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரத்தில் தாய்ப்பால் கொடுக்க தொடங்குங்கள்.

இதனால் உங்கள் கர்ப்பப்பை சுருங்குவதற்கு உதவியாக இருக்கும். சிசேரியன் முறைப்படி பிரசவித்தவர்கள், குழந்தைக்கு பால் கொடுக்க, ஓரமாக படுத்தபடி கொடுக்கவேண்டும். முக்கியமாக, பால் கொடுப்பது முதல் முறை என்றால் அறுவை சிகிச்சை நடந்துள்ளதால், நீங்கள் அணியும் ஆடைகள், உங்கள் உடலில் புண் இருக்கும் பகுதிகளில் அழுத்தாமல் இருக்கவேண்டும். அதற்கு சரியான ஆடைகளை அணிந்திருக்கவேண்டும்.

சத்திர சிகிச்சை முடிந்தபிறகு, உங்கள் வயிற்றை சுற்றி சிசேரியன் பெல்ட் ஒன்றை சில மாதங்களுக்கு அணிவித்துக் கொள்ளுங்கள். நீங்கள் அசைவு கொடுப்பதால் உங்கள் தழும்பு திடீரென கிழியாமல் தடுக்க இந்த பெல்ட் பாதுகாப்பை அளிக்கும்.

அதேபோல், அறுவை சிகிச்சைக்குப் பின், உங்கள் வயிற்றில் தொய்வு ஏற்படாமல் இருக்கவும் இது உதவி செய்கிறது. குணமடைய 6 வாரங்களாவது ஆகும். இந்த காலகட்டத்தில் கடினமான எந்த பொருளையும் தூக்காதவாறு பார்த்துக்கொள்ளுங்கள். அதேபோல் கடினமான வீட்டு வேலைகளையும் செய்யக்கூடாது. இது தையல் போட்ட இடத்தில் அதிக அழுத்தத்தை ஏற்படுத்தும்.

குழந்தையை தூக்கினால்கூட தையல் பிரியும் அபாயம் ஏற்படும். உங்கள் தோற்றம் மாறுபட்டு இருப்பது இயல்புதான் ஆனால் மீண்டும் பழைய தோற்றத்தை உடற்பயிற்சியின்மூலம் பெற்றுவிடலாம். ஆனால் அதற்காக உடனே ஜிம்மிற்கு கிளம்பிவிடாதீர்கள். முதலில் எளிய உடற்பயிற்சிகளில் இருந்து ஆரம்பியுங்கள்.

சத்திரசிகிச்சை முடிந்த உடனேயே உடலுறவில் ஈடுபட துடிக்காதீர்கள். உங்கள் மருத்துவரை கலந்தாலோசித்துவிட்டு, மனரீதியாகவும், உடல்ரீதியாகவும் அதற்கு நீங்கள் தயாரான பின்பே, உடலுறவில் ஈடுபடுங்கள். உங்கள் கணவனிடம் அதனை பற்றி நன்றாகப் பேசிவிடுங்கள்.

அறுவை சிகிச்சை முடிந்த சில நாட்களுக்கு பிசுபிசுவென இருக்கும் திடமான உணவுகளையும், கார்பனேட்டட் உணவுகளையும் தவிர்க்கவும். இதனால் உங்கள் உறுப்புகள் இன்னமும் மென்மையாக, ஆறிக்கொண்டிருக்கும்.

## 250/= வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :-422**

**கேள்வி: ஆர்ஜென்ரீனாவில் பெண்களுக்காக அரசியல் கட்சியை உருவாக்கியவர்?**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 16.06. 2014**

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 422
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 420 இற்கான விடை :- தைரியம், துணிச்சல், எச்சரிக்கை உணர்வு.
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :- த.விதுர்சிகா, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

422

பெயர் : ....................
முகவரி : ....................
....................
தே.அ. அட்டை இல : ....................
விடை : ....................
....................
கையொப்பம் : ....................

அமெரிக்கா, அந்நாடுகளின் பொதுத்துறைகளையும் இயற்கை வளங்களையும் பன்னாட்டு தொழிற்கழகங்களுக்குத் திறந்துவிட பல்வேறு வகைகளில் நிர்ப்பந்தித்துக் கொண்டிருந்தது. இந்தியாவின் பொருளாதார தரவரிசையை எஸ்.ரூபி குறைத்ததையும் மன்மோகன் சிங்கை கையாலாகாதவர் (under acheiver) என்று டைம் பத்திரிகையில் முகப்புக் கட்டுரை வெளி வந்ததையும் இந்த இடத்தில் நினைவுபடுத்திப் பார்த்துக்கொள்ளலாம். இரண்டாயிரங்களின் இறுதியில் அரபு வசந்தத்திற்கான தயாரிப்புகளில் அமெரிக்கா தீவிரமாக இருந்தது.

அதே காலப்பகுதியில் ஆபிரிக்கக் கண்டத்தை முற்றுமுழுதாக எந்தப் போட்டியுமின்றி கபளீகரம் செய்யும் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. போகோ ஹராம் அமெரிக்காவின் கைகளில் இருந்த துருப்புச் சீட்டுகளில் ஒன்று.

முகம்மது யூசூபின் தலைமையில் இருந்த வரை, போகோ ஹராமின் கட்டுப்பாட்டு பிராந்தியம் என்பது ஒரு சில மாவட்டங்களுக்குள் சுருங்கியிருந்தது. அபூபக்கர் ஷெகா தலைமைப் பொறுப்பை ஏற்ற கடந்த ஐந்தாண்டுகளுக்குள் நைஜீரியாவின் சரிபாதி பகுதிகளில் செல்வாக்கு செலுத்தும் அளவுக்கு வளர்ந்துள்ள போகோ ஹராமின் வளர்ச்சி திகைப்பூட்டக்கூடியது. போகோ ஹராமின் நிதி வலைப்பின்னலைத் தொடர்ந்து சென்றால், அது இங்கிலாந்தில் உள்ள அல் முண்டாடா என்கிற அறக்கட்டளைக்கும் அமெரிக்காவின் மத்திய கிழக்கு அடியாள் சவூதி அரேபியாவினுள்ளும் அழைத்துச் செல்கிறது.

லிபியாவில் கடாபியை எதிர்த்துப் போராடிய கூட்டணியில் பங்கு பெற்றிருந்த இசுலாமிய மக்ரீபிற்கான அல்-குவைதா (Al-qaeda in Islamic Magreb / Magreb stands for North western African continent) என்கிற அமைப்பு அமெரிக்க உளவுப்படையான சி.ஐ.ஏ.விடமிருந்து சவூதி வழியாக நேரடியாக ஆயுதங்களைப் பெற்றது. பின்னர் லிபியாவில் தனது அமெரிக்க 'ஆடவருடிக்' 'கடமையை' முடித்துக்கொள்ளும் [illegible]டி அமைப்பு, தனது கவனத்தை அல்ஜீரியாவை நோக்கித் திருப்புகிறது.

அமெரிக்கா பிச்சையாக அளித்த ஆயுதங்களுடனும், அமெரிக்கா வகுத்துக்கொடுத்த திட்டத்துடனும் அல்ஜீரியாவில் ஷரியா சட்டத்தை அமுல்படுத்தவும், அமெரிக்க 'ஜிகாத்'தை வழி நடத்தும் இசுலாமிய மக்ரீபிற்கான அல்-குவைதா அமைப்புத்தான் போகோ ஹராமின் ஆயுதப் புரவலர். அல்ஜசீரா தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்துள்ள அவ்வமைப்பின் தலைவர் அபூ மௌஸப் அப்தல் வாதௌத் என்பவர், நைஜீரியாவில் உள்ள கிருத்துவ சிறுபான்மையினரை எதிர்த்துப்போராட போகோ ஹராம் அமைப்பிற்கு தாம் ஆயுதங்களை வழங்கி வருவதாக வெளிப்படையாகவே குறிப்பிடுகிறார். 2011-ம் ஆண்டுவரை போகோ ஹராம் அமைப்பை சர்வதேச தீவிரவாதிகள் பட்டியலில் சேர்க்க அமெரிக்க அரசுத் துறை மறுத்துவந்தது. போதுமான வளர்ச்சியை போகோ ஹராம் அடைய வழங்கப்பட்ட இடைவெளி அது.

ஏனெனில், ஆப்கானிய முஜாஹின்கள், அல்-குவைதா, பின்லேடன் போலவே போகோ ஹராம் என்பதும் அமெரிக்கா பெற்றெடுத்த கள்ளக்குழந்தைதான். நைஜீரியா, நைஜர், மாலி ஆகிய நாடுகளில் போகோ ஹராம் செயற்பட்டு வருகிறது. இதேபோன்ற இசுலாமிய கைக்கூலி அமைப்புகளை வேறு பல ஆபிரிக்க நாடுகளிலும் உருவாக்கி விட்டுள்ளது அமெரிக்கா.

சோமாலியா மற்றும் கென்யாவில் அல்-ஷபாப்.

அல்ஜீரியா மற்றும் மாலியில் இசுலாமிய மக்ரீபிற்கான அல்-குவைதா.

எகிப்தில் இசுலாமிய சகோதரத்துவ கூட்டணி.

லிபியாவில் இசுலாமிய போராளிகள் கூட்டணி.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவை அனைத்தும் அல்-குவைதா என்கிற குடை அமைப்பின் பல்வேறு கிளைகள். (Franchise) இசுலாமிய சர்வதேசியம் இயங்கும் முறையும் அமெரிக்காவின் மெக்டொனால்ட் சங்கிலித்தொடர் துரித உணவகம் செயற்படும் முறையும் ஏறக்குறைய ஒன்றுதான்.

## இசுலாமிய சர்வதேசியமும் மெக்டொனால்டு மயமாதலும்

உலகெங்கும் கிளைகளைப் பரப்பி இருக்கும் மெக்டொனால்டு துரித உணவகத்தின் பல்வேறு தின்பண்டங்கள் அந்தந்த கிளைகளில் தயாரிக்கப்படுபவை அல்ல. அங்கே விற்கப்படும் குப்பை உணவுகளின் கச்சாப் பொருட்களான உறைய வைக்கப்பட்ட கோழி இறைச்சி, ஏற்கனவே வெட்டி உறைய வைக்கப்பட்ட உருளைக்கிழங்கு போன்ற சமாச்சாரங்கள் மையப்படுத்தப்பட்ட தொழிற்சாலைகளில் உற்பத்திசெய்யப்பட்டு அதன் கிளைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டு விடும். கிளைகளை பொறுப்பேற்று நடத்துபவர்கள் பனிப்பெட்டியில் இருந்து கச்சாப் பொருளை எடுத்து அவ்வப்போது பொரித்து அந்தந்த நாட்டின் உள்ளூர் சுவை பாரம்பரியத்திற்கு ஏற்ப மசாலாக்களை தடவிவிற்பார்கள்.

'ஜிகாத்' மெக்டொனால்டுமயமாகி இருக்கிறது. (Mcdonaldization) ஒரு 'ஜிகாத்'தை தொடங்கி நடத்துவதற்கு போதுமான அளவிற்கு சலாபிசம் வஹாபியம் போன்ற சித்தாந்த பயிற்சிகளை சவூதி மதகுருமார்களை வைத்து அமெரிக்காவே அளித்துவிடுகிறது. மற்றபடி எந்த நாட்டில் 'ஜிகாது' நடக்க உள்ளதோ அந்த நாட்டின் உள்ளூர் விவகாரங்களுக்கு ஏற்ப முழக்கங்களையும் வழங்கிவிடுகிறார்கள். 'ஜிகாது'க்கு பொருத்தமான முழக்கங்களையும் (அது சிலவேளைகளில் அமெரிக்க எதிர்ப்புக் கோஷங்களாகக்கூட இருக்கிறது) கையில் தயாராக கொடுத்துவிடுகிறார்கள்.

போகோ ஹராம் போன்ற ஜிஹாதிகளின் கடமை எளிமையானது. கா.'.பிர் அமெரிக்காவுக்கும், இசுலாமிய சவூதிக்கும் ஏற்பட்ட கள்ளத்தொடர்பில் பிறந்த அமெரிக்க 'ஜிஹாதின்' கச்சாப் பொருளின் மேல் உள்ளூர் மசாலாவை (உதாரணம் விஸ்வரூபம் எதிர்ப்பு, இசுலாமியர்களுக்கு இடஒதுக்கீடு போன்றவை) தடவி 'யாவாரத்தை' சிறப்பாக நடத்தவேண்டியது தான்.

அமெரிக்காவுக்கு ஆபிரிக்காவின் மேல் இவ்வளவு அக்கறை ஏன்? ஏன் சொந்த முறையில் போகோ ஹராம் போன்ற 'ஜிகாதி'களை வளர்க்கவேண்டும்?

## ஆபிரிக்காவின் வளம்

ஆபிரிக்க கண்டம் அள்ளித் தீராத இயற்கை வளங்களைச் சுமந்து கொண்டிருக்கும் பெரும் நிலப்பரப்பு. சுமார் மூன்று நூற்றாண்டுகளுக்கும் மேலாக ஐரோப்பிய காலனியவாதிகள் நடத்திய மாபெரும் சூறையாடல்களுக்கு ஈடுகொடுத்து இன்னமும் தன்னுள் ஏராளமான கனிம வளங்களைக் கொண்டிருக்கிறது. நைஜீரியா உள்ளிட்ட வடக்கு மற்றும் வடமேற்கு ஆபிரிக்க நாடுகளில் சமீப காலத்தில் ஏராளமான எண்ணெய் வளம் கண்டறியப்பட்டுள்ளது.

ஆபிரிக்க நாடுகள் அரசியல்ரீதியில் சுயேச்சையான முடிவுகளை எடுக்கக்கூடிய சுதந்திர நாடுகள் அல்ல. பெரும்பாலும் தமது முந்தைய காலனிய காலத்து எஜமானர்களான ஐரோப்பிய நாடுகளை மறைமுகமாகவோ, அமெரிக்காவை நேரடியாகவோ அண்டிப்பிழைக்கும் ஒட்டுண்ணித் தரகுவர்க்கங்களே ஆபிரிக்க நாடுகளை ஆட்சி செய்துவருகின்றன. எனினும், நைஜீரியா போன்ற ஓரிரு ஆபிரிக்க நாடுகள் அமெரிக்காவுக்கு திறந்துவைத்த அதே வாயிற் கதவை சீனாவுக்கும் திறந்து விட்டிருக்கின்றன.

நைஜீரியாவுக்கு இராணுவ தளவாடங்களை ஏற்றுமதி செய்துவரும் சீனா, அதன் தொலைத்தொடர்புத் துறையில் ஏராளமான முதலீடுகளைச் செய்துவருகிறது. சமீபத்தில் சுமார் 2,300 கோடி டொலர்கள் மதிப்பில் மூன்று எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளை அமைக்க ஒப்பந்தம் செய்துள்ளது. மேலும், எண்ணெய் துரப்பணம் மற்றும் புதிய எண்ணெய் வயல்களைக் கவளங்களைக் கண்டறிவதற்கும் ஒப்பந்தங்களை ஏற்படுத்தி உள்ளது.

தனது பொருளாதார சிக்கலில் இருந்து மீளத்துடிக்கும் அமெரிக்காவின் சுரண்டல் வெறியும் அடங்காத எண்ணெய்ப்பசியும் சிறு அளவுக்கு பெயரளவிலான போட்டியைக்கூட விரும்புவதில்லை. அந்தவகையில் ஆபிரிக்க நாடுகளில் இருந்து சீனாவை விரட்டுவது, ஏற்கனவே ஆபிரிக்க நாடுகளில் கனிமவளக் கொள்ளையில் ஈடுபட்டிருக்கும் தனது ஐரோப்பிய கூட்டாளிகளின் செயற்பாடுகளை தனது தலைமையில் மறுஒழுங்கமைப்பது என்கிற நோக்கங்களோடு செயற்பட்டு வருகிறது.

## யு.எஸ். ஆபிரிக்கொம்
(USAFRICOM – United States African Command)

இரண்டாயிரங்களின் மத்திய காலப்பகுதி வரை அமெரிக்காவின் மத்திய கிழக்கு இராணுவ கட்டுப்பாட்டு கேந்திரம் மற்றும் ஐரோப்பியாவிற்கான அமெரிக்காவின் இராணுவ கட்டுப்பாட்டு கேந்திரத்தின் பொறுப்பில் ஆபிரிக்கா இருந்தது. 2008-இல் ஜோர்ஜ் புஷ்ஷின் இறுதி நாட்களில் ஆபிரிக்காவுக்கென தனிச்சிறப்பான இராணுவ கட்டுப்பாட்டுக் கேந்திரமாக யு.எஸ். ஆபிரிக்கொம் ஏற்படுத்தப்பட்டது.

யு.எஸ். ஆபிரிக்கொமின் இராணுவ தளம் சுயஸ் கால்வாயின் முகப்பில் அமைந்திருக்கும் வடகிழக்கு ஆபிரிக்க நாடான ஜிபௌட்டியில் அமைந்திருக்கிறது. இசுலாமிய தீவிரவாதத்திலிருந்தும் சோமாலிய கடற்கொள்ளையர்களிடமிருந்தும் வடகிழக்கு ஆபிரிக்க முனைக்கு விடுதலை அளிப்பது (Operation Enduring Freedom – Horn of Africa) என்கிற பெயரில் உள்ளே நுழையவும் கேம்ப் லெமான்னியர் என்ற தற்காலிக இராணுவ தளத்தை ஆபிரிக்கொமின் நிரந்தரமான இராணுவத்தளமாக அமைத்துக் கொள்ளவும் வழிசெய்து கொடுத்தது 'ஜிஹாதிகள்' தான் என்பது குறிப்பிடத்தக்கது.

சில நூறு இராணுவ வீரர்களோடு சோம்பிக் கிடந்த ஜிபௌட்டியின் லெமான்னியர் இராணுவ முகாம், இன்று 'இசுலாமிய ஜிஹாதின்' அச்சுறுத்தலைத் தொடர்ந்து பல்லாயிரம் வீரர்களைக்கொண்ட மாபெரும் இராணுவ செயல் கேந்திரமாக குறுகிய காலத்திலேயே வளர்ந்துள்ளதாக அமெரிக்காவின் 'ஆர்மி டைம்ஸ்' குறிப்பிடுகிறது.

அமெரிக்க வைஸ் அட்மிரல் ரோபர்ட் மில்லர், "ஆபிரிக்காவில் இருந்து உலகச் சந்தைக்கு இயற்கை வளங்கள் சுலபமாக சென்றுசேர்வதை உறுதி செய்வதுதான்" ஆபிரிக்கொமின் கடமை என்று வெளிப்படையாகவே அறிவிக்கிறார். அமெரிக்காவின் எண்ணெய் தேவையை உத்திரவாதப்படுத்தும் வகையில் தீவிரவாத எதிர்ப்புப் போரில் ஈடுபடுவதே ஆபிரிக்கொமின் நோக்கம் என்கிறார் அமெரிக்க இராணுவ ஜெனரல் வில்லியம் வார்ட்.

ஆக, எந்த நாட்டிற்குள்ளும் அமெரிக்கா நுழைவதற்குத் தேவையான அடிப்படை முகாந்திரங்களையும் அரசியல் தேவைகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும் கைக்கூலிகள் தான் ஜிஹாதிகள். "அமெரிக்காவை வெட்டுவேன், அமெரிக்கர்களைக் குத்துவேன" என்கிற பாணியில் போகோ ஹராமின் 'ஜிஹாதி தலைவர்கள்' வெளியிட்ட சவடால் வீடியோக்கள் எல்லாம் சி.ஐ.ஏ.வின் திரைக்கதை வசனத்தில் உருவானவைதாம். இதுபோன்ற வீடியோக்களையும் சில சில்லறைத்தனமான தாக்குதல் சம்பவங்களையும் சி.என்.என் போன்ற ஊடகங்களின்மூலம் ஊதிப் பெருக்கிக் காட்டுவதன்மூலம் உருவாவது தான் 'இசுலாமிய தீவிரவாத பூச்சாண்டி'.

இந்நிலையில் செவ்வாய்க்கிழமை (மே 20-ம் திகதி) இரவு போகோ ஹராம் தீவிரவாதிகள் என்ற சந்தேகிக்கப்படுபவர்கள் வடகிழக்கு நைஜீரியாவில் உள்ள மூன்று கிராமங்களை தாக்கி 48 பேரை கொன்று குவித்திருக்கும் செய்தி இப்போது மேற்கத்திய ஊடகங்களில் பரபரப்பாக விவாதிக்கப்பட்டு வருகிறது.

## நைஜீரியாவுக்கு அமெரிக்க உதவி

போகோ ஹராமின்மூலம் நைஜீரியாவுக்கான இசுலாமிய தீவிரவாத பூச்சாண்டியை உருவாக்கி முடித்துவிட்ட அமெரிக்கா, தனது தலையீட்டுக்கான பொதுக்கருத்தையும் உருவாக்கி முடித்துள்ளது. நைஜீரியாவின் அதிபர் குட்லக் ஜொனாதன் தொடக்கத்தில் அமெரிக்க தலையீட்டை ஏற்பதில் தாமதம் காட்டுகிறார், உடனடியாக ஜொனாதன் எப்பேர்பட்ட கையாலாகாதவர் என்பதையும் மாணவிகள் கடத்தப்பட்ட அதே சமயத்தில் அவர் கலந்துகொண்ட குடி விருந்தில் அடித்த சரக்கின் விலை என்ன என்பதையெல்லாம் விவரிக்கும் 'ஆய்வு' கட்டுரைகள் மேற்கத்திய ஊடகங்களில் பரபரப்பாக கசியத் தொடங்கின.

உடனே விழித்துக்கொண்ட ஜொனாதன், அமெரிக்காவின் உதவியைத் தாம் ஆவலோடு எதிர்பார்த்துக் கிடப்பதாக அறிவித்து முவாம்மர் கடாபியின் நிலை தனக்கு ஏற்படுவதைத் தற்காலிகமாக தவிர்த்துக் கொண்டார். அமெரிக்கா தற்போது மாணவிகளைத் தேடிவருகிறது. விரைவில் இசுலாமிய பூச்சாண்டியை ஒழித்து அமெரிக்காவின் நிரந்தர இராணுவத்தளம் ஒன்றின் நிழலில் 'ஜனநாயகத்தின்' மகாத்மியம் நைஜீரியாவில் நிலைநாட்டப்படக் கூடும். மாலி, சூடான், சோமாலியா, அல்ஜீரியா, சாட், நைஜர் உள்ளிட்ட பிற வடக்கு மற்றும் மத்திய ஆபிரிக்க நாடுகளில் 'ஜிகாத்' உக்கிரமாக நடந்து வருகிறது 'டாம்ஹாக் எறிகணைகள் 'ஜனநாயகத்தின்' நற்செய்தியை ஓசையோடு அறிவிக்கும் ஆசையோடு லெமான்னியர் முகாமில் காத்துக்கிடக்கின்றன.


ஆனால், அப்பாவி ஆபிரிக்கர்களோ 'ஜிகாத்'தையும் அதன் அப்பனான அமெரிக்காவையும் வீழ்த்தவல்ல வர்க்கப் போராட்டம் ஒன்றுக்காக நீண்டகாலமாக காத்துக் கிடக்கின்றனர்.









**தலிபான்களைப் போலவே, "பெண்கள் படிக்கக் கூடாது, வெளியிடங்களுக்குச் செல்லக்கூடாது, குரானைத் தவிர்த்து எதையும் கற்க கூடாது" போன்ற பல 'கூடாததுகளின்' பட்டியல் ஒன்றை வைத்திருக்கும் போகோ ஹராம், அதை அமுல்படுத்துவதற்குத் தோதாக ஷரியா சட்டத்தின் அடிப்படையிலான ஆட்சியை நைஜீரியாவில் அமைப்பது ஒன்றே தமது குறிக்கோள் என்று அறிவித்துக்கொண்டது.**

# உலக அரங்கில்
# யாழின் மைந்தன் வாகீசன்!



**விளையாட்டை விளையாட்டாக எடுத்தால் விளையாட்டும் நம்மை விளையாட்டாக எடுக்கும். அதே விளையாட்டை சிரத்தையுடன் விளையாடினால் நாமே வெற்றியாளர்கள். கடின உழைப்புக்கள் என்றும், எங்கும் தோற்றதாய் நான் அறியவில்லை. ஆக்கபூர்வமான சிந்தனைகள், நல்ல பாதைகள், தொடர்ச்சியான பயிற்சி, விடாமுயற்சி என்றைக்குமே நம்மை வெற்றியாளர்களாக்கும் என்பதை மனதில் கொள்ளவேண்டும்.**

**அன்று** பாடசாலைக்கு பிந்தி வந்திரா விட்டால் இன்று கூடைப்பந்தாட்டத்தில் இவ்வாறு வந்திருக்கவே முடியாது என்கிறார் இலங்கை கூடைப்பந்தாட்ட அணியில் இடம்பிடித்த நம்ம யாழ்ப்பாணத்து வாகீசன்.

ஒரு தமிழனாக தன்னாலும் முடியும் என இலங்கை கூடைப்பந்தாட்ட தேசிய அணியில் இடம்பிடித்து பல்வேறு போட்டி களில் சாதித்த சண்முகசுந்தரலிங்கம் வாகீசன் பற்றி பேசலாமே.

ஒரு அக்கா, ஒரு தம்பிக்கு நடுவிலே சண்முகசுந்தரலிங்கம் அமுதஜோதி தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தவர்தான் இந்த வாகீசன். 13 வயதில் ஆரம்பித்த கூடைப்பந்தாட்டம் இன்றும் தொடர்கிறது.

13 வயதிலே, யாழ் இந்துக் கல்லூரியில் தரம் 8 கற்றுக் கொண்டிருக்கும்போது பாடசாலைக்கு அடுத்த மதில் வீட்டில் இருந்தாலும் ஒரு நாள் பாடசாலைக்கு வரத் தாமதமாகிற்று. அப்போது உப அதிபராக இருந்த திரு எல்.ஓங்காரமூர்த்தி வழமையாய் வழங்குகின்ற எதுவித தண்டனைகளும் வழங்காது இன்று மாலை "பாஸ்கட் போல் பிறக்டிசுக்கு வரணும்", இதுதான் தண்டனை என்னும் கட்டளை இடுகின்றார்.

உபஅதிபரின் தண்டனைக்காய் அன்று விளையாட ஆரம்பித்து இன்று உலகமே பார்க்கும் ஒரு வீரனாக மாறியிருக்கின்றார் நம்ம வாகீசன்.

ஓங்காரமூர்த்தி சேரினாலும், சிவதாஸ் அண்ணாவினாலும் நன்கு வளர்க்கப்பட்ட வர்களில் வாகீசன் முதன்மையானவர்.

விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பதுபோல விளையாட ஆரம்பித்த ஆண்டே யாழ்.மத்திய கல்லூரியினால் நடாத்தப்படும் பொன் விபுலானந்தா தொடரில் வெற்றியீட்டவும் வாகீசனின் அணியினரால் முடிந்திருக்கின்றது.

தொடர்ச்சியாக கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம், தேசியம், கழக மட்டப் போட்டிகள் என நீண்டு இலங்கை யின் முதல்தர அணிகளான விமானப் படை அணி, கால்டன் அணியை பல வெற்றிகள் பெறவைத்து இலங்கை தேசிய அணியிலும் இன்று நம்ம வாகீசன்.

ஆரம்பத்திலே பொழுதுபோக்காக விளையாட ஆரம்பித்து பின்பு அதீத நாட்டம் கொண்டு கூடைப்பந்தாட்டத்தை நேசித்து விளையாடியமையாலேயே தன்னால் இந்த நிலைக்கு வர முடிந் திருப்பதாக அவர் சொல்கிறார். தொடர்ச்சி யான விடாமுயற்சியும், கடின பயிற்சியும் என்றைக்கும் தோற்றதில்லை என்னும் போது புன்முறுவல் தெரிகின்றது.

2010ம் ஆண்டு விமானப்படை அணிக்கு விளையாட ஆரம்பிக்கும்போது மொழி என்பது பாரிய பிரச்சினையாக இருந்தாலும் போகப்போக எல்லாவற்றிற்கும் பழக்கப் பட்டு விட்டதாகவும் இப்போது மொழி என்பது தன்னைப் பொறுத்தவரை பிரச்சினையே இல்லை என்றும் மனம் திறக்கின்றார் வாகீசன்.

வடக்கு, கிழக்கை தவிர ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் கூடைப் பந்தாட்டத்தை படித்து விளையாடுகின்றனர். ஆனால் நாம் உடல் வலுவினாலும், மனவுறுதியினாலேயுமே இவ்வளவு தூரம் சாதிக்க முடிந்திருக்கின்றது. இன்னும் கூடைப்பந்தாட்டத்தை நாம் கற்று விளையாடும் பட்சத்தில் நம்முடைய வீரர்கள் இன்னும் மேலெழக்கூடியதாக இருக்கும் என்கிறார் அவர்.

தற்போது, இருக்கின்ற தொடர்புகளை வைத்துக்கொண்டாவது யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டத்துறையின் உபகரணப் பற்றாக்குறைகள், மைதானங்கள், சர்வ தேசப் பயிற்றுனர்களின் பயிற்றுவிப்புக்கள் என்பவற்றை கொண்டு எமது விளையாட்டுத் தரத்தை இயலுமானவகையில் மேலே கொண்டுவர வேண்டுமென ஆதங்கப்படுகின்றார் வாகீசன்.

வடக்கின் கூடைப்பந்தாட்ட துறையில் எவ்வாறு பங்களிக்கப்போகின்றீர்கள்? என்றதற்கு, தெரிந்த விடயங்களை விளையாட




ஆரம்பித்திருப்பவர்களுக்கு சொல்லிக் கொடுக்கவேண்டும், எம்மவர்களின் மன நிலையில் மாற்றம் வரவேண்டும். முதல் முதலாக நான் தேசியமட்ட போட்டி ஒன்றில் விளையாடும்போது நான் அணிந்த சப்பாத்தின் விலை வெறும் 250 மட்டுமே. ஆனால் எம்முடன் விளையாடிய எதிரணியினர் எமது சப்பாத்துகளின் விலைகளின் மடங்குகள் விலையான சப்பாத்துகளை அணிந்திருந்தனர். அவற்றை கண்டு நாம் மனம்சோர வில்லை, அச்சப்படவுமில்லை. அதனால் சாதிக்கமுடிந்தது. எனவே அந்த மன நிலைக்கு நாம் மாறவேண்டும். அத்தோடு தனவந்தர்கள் கூடைப் பந்தாட்டத்தை வளர்க்க உபகரணப் பற்றாக்குறைகளை நீக்க தங்களது ஆதரவுகளைத் தரமுடியும் என்பது பெரியதொரு எதிர்பார்ப்பு.

என்னைப் பொறுத்தவரை படிப்பிற்கும் விளையாட்டிற்கும் எதுவித சம்பந்தமும் கிடையாது. விளையாடுவதால் படிப்பு பாதிக்கப்படும் என்பதற்கு நான் எதிரானவன். எனக்கு ஆசிரியர் கலாசாலை கிடைத்தது. பல்கலைக்கழகம் கிடைத்தது.

விளையாட்டை விளையாட்டாக எடுத்தால் விளையாட்டும் நம்மை விளையாட்டாக எடுக்கும். அதே விளையாட்டை சிரத்தையுடன் விளையாடினால் நாமே வெற்றியாளர்கள்.

கடின உழைப்புக்கள் என்றும், எங்கும் தோற்றதாய் நான் அறியவில்லை. ஆக்கபூர்வமான சிந்தனைகள், நல்ல பாதைகள், தொடர்ச்சியான பயிற்சி, விடாமுயற்சி என்றைக்குமே நம்மை வெற்றியாளர்களாக்கும் என்பதை மனதில் கொள்ளவேண்டும்.

அப்பா அம்மா, சிவதாஸ் அண்ணா, ரமணன் அண்ணா, சுவாமிநாதன் சேர் என்றைக்கும் என் வெற்றியின் காரண கர்த்தாக்கள். என்னுடன்கூட இருந்து விளையாடிய நண்பர்கள், பாடசாலை நண்பர்கள், எல்லோராலும் வெற்றி சாத்தியப்பட்டிருக்கின்றது, என நன்றியுடன் நினைவுபடுத்துகிறார் வாகீசன்.

# கோவில் இல்லாத ஊரில் குடியிருக்கக் கூடாது ஏன் தெரியுமா...?

**நீரில்லா** நெற்றிபாழ் கோயில் இல்லா ஊர் பாழ் என்பது முதுமொழி. அந்த காலத்தில், ஒரு ஊரை உருவாக்குவதற்கு முன், கோயிலை உருவாக்கினர்.

அதற்குமுன், நீரோட்டம் பார்த்து, மண்ணின் தன்மை அறிந்து, சாலை அமைத்து, அதன்பின்னரே கோயில் கட்டினர். இதனால்தான் கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கக்கூடாது என்பர்.

முற்காலத்தில் ஊரில் கோயில் கோபுரத்தைவிட உயரமாக எந்தக் கட்டடமும் இருக்கக்கூடாது என்று ஒரு எழுதாத சட்டம் இருந்தது. என்ன காரணம்?...

கோயில்களையும் உயரமான கோபுரங்களையும் அதன்மேல் இருக்கும் கலசங்களையும் பார்த்திருப்பீர்கள். அதன்பின் ஒளிந்திருக்கும் ஆன்மீக உண்மை தெரியவில்லை. ஆனால் அதன்பின் எவ்வளவு பெரிய அறிவியல் ஒளிந்திருக்கிறது என தெரிகிறது.

கோபுரத்தின் உச்சியில் தங்கம், வெள்ளி செம்பு (அ) ஐம்பொன்னால் செய்யப்பட்ட கலசங்கள் இருக்கும். இக் கலசங்களிலும் அதில் கொட்டப்படும் தானியங்களும், உலோகங்களும் மின் காந்த அலைகளை ஈர்க்கும் சக்தியை கலசங்களுக்குக் கொடுக்கின்றன.

நெல், உப்பு, கேழ்வரகு, தினை, வரகு, சோளம், மக்கா சோளம், சலமை, எள் ஆகியவற்றைக் கொட்டினார்கள்.

குறிப்பாக வரகு தானியத்தை அதிக மாகக் கொட்டினார்கள். காரணத்தைத் தேடிப்பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறது. வரகு மின்னலைத் தாங்கும் அதிக ஆற்றலைப் பெற்றிருப்பது என இப்போதைய அறிவியல் கூறுகிறது.

இவ்வளவுதானா? இல்லை, பன்னி ரெண்டு வருடங்களுக்கு ஒரு முறை குடமுழுக்கு விழா என்றபெயரில் கலசங்களில் இருக்கும் பழைய தானியங்கள் நீக்கப்பட்டு புதிய தானியங்கள் நிரப்பப்படுகிறது. அதை இன்றைக்கும் சம்பிரதாயமாகவே மட்டும் கடைப்பிடிக்கிறார்கள்.

காரணத்தைத் தேடினால், அந்த தானியங்களுக்குப் பன்னிரெண்டு வருடங் களுக்குத்தான் அந்த சக்தி இருக்கிறது. அதன்பின் அது செயலிழந்து விடுகிறது! இதை எப்படி அப்போது அறிந்திருந்தார்கள்? ஆச்சரியம்தான்.

அவ்வளவுதானா அதுவும் இல்லை. இன்றைக்குப் பெய்வதைப் போன்று மூன்று நாட்களா மழை பெய்தது அன்று? தொடர்ந்து மூன்று மாதங்கள் பெய்தது. ஒருவேளை தானியங்கள் அனைத்தும் நீரில் மூழ்கி அழிந்துபோனால், மீண்டும் எதை வைத்துப் பயிர்செய்வது? இவ்வளவு உயரமான கோபுரத்தை நீர் சூழ வாய்ப்பில்லை. இதையே மீண்டும் எடுத்து விதைக்கலாமே!

ஒரு இடத்தில் எது மிக உயரமான இடத்தில் அமைந்த இடி தாங்கியோ அதுதான் முதலில் ஏர்த் ஆகும். மேலும் அது எத்தனை பேரைக் காப்பாற்றும் என்பது அதன் உயரத்தைப் பொறுத்தது. அடிப்படையில் கலசங்கள் இடிதாங்கிகள்.

உதாரணமாக, கோபுரத்தின் உயரம் ஐம்பது மீற்றர் என்றால் நூறு மீற்றர் விட்டம் வரைக்கும் பரப்பில் எத்தனை பேர் இருந்தாலும் அவர்கள் இடி தாங்காமல் காக்கப்படுவார்கள். அதாவது சுமார் 75008 மீற்றர் பரப்பளவிலிருக்கும் மனிதர்கள் காப்பாற்றப்படுவார்கள்.

சில கோயில்களுக்கு நான்கு வாயில்கள் உள்ளன. அது நாலா புறமும் 75000 சதுர மீற்றர் பரப் பளவைக் காத்துநிற்கிறது. இது ஒரு தோராயமான கணக்குத்தான். இதை விட உயரமான கோபுரங்கள் இதைவிட அ திகமான பணிகளை சத்தமில்லாமல் செய்துவருகின்றன.

**நன்றி : இணையம்**

# இரத்த உற்பத்திக்கு சில வழிகள்



உடலில் உள்ள இரத்தம் சுத்தமில்லாமல் இருந்தால் உடல் அசதி, காய்ச்சல், வயிற்றுப் பொருமல், சுவாசக் கோளாறுகள் போன்றவை உண்டாகலாம். அதனால் உடலின் அடிப்படை சக்தியான இரத்தத்தை சுத்தமாக வைத்துக்கொள்வது அவசியமாகும். இயற்கை உணவுகள் மூலம் இரத்தத்தை சுத்தமாக வைத்துக்கொள்வது எப்படி? மற்றும் புதிய இரத்தத்தை எப்படி உடலுக்கு உற்பத்தி செய்யலாம் எனப் பார்ப்போம்.

❏ நாவல் பழத்தைத் அடிக்கடி சாப்பிட்டு வர இதயத்திற்கு மிகுந்த பலத்தைக் கொடுப்பத்துடன் உடலில் இரத்தம் அதிகமாக ஊறும்.

❏ பேரீச்சம்பழத்தை தேனில் மூன்று நாட்களுக்கு ஊறவைத்து பிறகு வேளைக்கு 2 அல்லது மூன்று வீதம் சாப்பிட்டுவந்தால் உடலில் இரத்தம் ஊறும்.

❏ தினசரி இரவு அரை தம்ளர் தண்ணீரில் உலர்ந்த 3 அத்திப்பழத்தை போட்டு, காலை வெறும் வயிற்றில் குடித்தால் இரத்தம் பெருகும்.

❏ பீட்ரூட் கிழங்கு சாப்பிட்டுவந்தால் புதிய இரத்தம் உற்பத்தியாகும்.

❏ செம்பருத்திப் பூவை நடுவில் இருக்கும் மகரந்தத்தை தவிர்த்து சுத்தி உள்ள இதழ்கள் மட்டும் வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர வெட்டை சூடு தீர்ந்து இரத்தம் விருத்தியாகும்.

❏ முருங்கைக் கீரையை துவரம் பருப்புடன் சமைத்து ஒரு கோழிமுட்டை உடைத்துவிட்டு கிளறி நெய்சேர்த்து 41 நாட்கள் சாப்பிட்டுவர இரத்தம் விருத்தியாகும்.

❏ இஞ்சிச்சாறுடன் தேன் கலந்து சாப்பிட்டால் இரத்தம் சுத்தப்படுத்தப்படுகிறது.

❏ தக்காளிப் பழம் சாப்பிட்டு வந்தால் இரத்தம் சுத்தமாகும். ஆனால், வாதநோய் உள்ளவர்கள் தவிர்த்தல் நல்லது.

❏ இலந்தைப் பழம் சாப்பிட்டால் இரத்தத்தை சுத்தம் செய்வது மட்டுமில்லாமல், சுறுசுறுப்பாக வைத்துக் கொள்ளும். பசியையும் தூண்டும் தன்மைகொண்டது.

❏ விளாம்பழம் சாப்பிட்டால் இரத்தத்தில் உள்ள கிருமிகள் அழிந்துபோகும்.

# பீட்ரூட் உண்டால் கிடைக்கும் பலன்கள்....



பல்வேறு சத்துகளையும் கொண்ட காய், பீட்ரூட். இது பல்வேறு மருத்துவ குணங்களைக் கொண்ட பெருமை பெற்றுத் திகழ்கிறது. பீட்ரூட்டின் சில மருத்துவப் பயன்களை இங்கே பார்க்கலாம்.

பீட்ரூட்டை பிழிந்து சாறு எடுத்து தேனுடன் கலந்து சாப்பிட்டுவந்தால் அல்சர் குணமாகும்.

பீட்ரூட் சாறுடன் வெள்ளரிச்சாறு கலந்து சாப்பிட்டுவர, சிறுநீரகங்களும், பித்தப்பையும் சுத்திகரிக்கப்படும்.

தீப்பட்ட இடத்தில் பீட்ரூட் சாறைத்தடவினால் தீப்புண், கொப்புளம் ஆகாமல் விரைவில் ஆறும்.

பீட்ரூட் கசாயம் மூல நோயைக் குணப்படுத்தும், பீட்ரூட் இரத்தச்சோகையைக் குணப்படுத்தும்.

பீட்ரூட்டை நறுக்கி பச்சையாக எலுமிச்சைச் சாற்றில் தோய்த்து உண்டுவர, இரத்தத்தில் சிவப்பணுக்குள் உற்பத்தியாகும்.

# வாயு தொல்லைக்கு பலாக்கொட்டை சாப்பிடுங்கள்

✿ சிலருக்கு வாயு தொல்லையால் வயிறு வீங்கி, கர்ப்பிணி போன்ற தோற்றம் இருந்தால், நான்கு அல்லது ஐந்து பலாக்கொட்டைகளை தணலில் சுட்டு சாப்பிட்டால் வாயுத் தொல்லை நீங்குவதுடன், வயிறும் சிக்கொன்றாகிவிடும்.

✿ உடல் சூட்டினால் சிலருக்கு வயிறு வீங்கிப் போகலாம். சிலருக்கு சூட்டினால் உடல் களைத்துப் போகலாம். இவர்கள் பலா இலையில் சாதத்தை சூடாகப் போட்டு சாப்பிட்டால், உடலின் சூடு தணிந்து பொலிவும் புத்துணர்வும் அதிகரிக்கும்.

✿ சிலருக்கு, மலச்சிக்கலால் முகத்தில் பருக்கள் ஏற்பட்டு, அரிப்பெடுக்கும். சீல் கோத்து வடுக்கள் தோன்றி, முகம் பார்க்கவே அசிங்கமாகிவிடும். இந்த சிக்கலைப் போக்கி சிங்கார அழகைக் கொடுக்கிறது பலா வேர்.

✿ பலா வேரைத் துண்டு களாக்கி தண்ணீரில் போட்டு ஒரு மணி நேரம் ஊறவை யுங்கள். பிறகு அதை வடிகட்டி ஒரு டம்ளர் குடியுங்கள். இது மலமிளக்கியாகச் செயற்பட்டு, பருக்களைப் போக்கிப் பொலிவைக் கொடுக்கும்.






# ஏன் நிறுத்தவேண்டும்?

- 25 சதவீத இறப்புகள் இருதய பாதிப்பினால் ஏற்படுகின்றன.
- 30 சதவீத இறப்புகள் புற்றுநோயால் ஏற்படுகின்றன.
- 85 சதவீத இறப்புகள் நுரையீரல் புற்றுநோயால் ஏற்படுகின்றன.
- அதிக முகச் சுருக்கங்கள் ஏற்படுகின்றன.
- உங்கள் பல் மஞ்சள் கறை படிந்து அருவருப்பாகின்றது.
- உங்களுக்கு பிடித்த உணவு சுவையற்றுப் போகின்றது.

மேற்கூறிய அனைத்து காரணங்களும் சிகரெட் பிடிப்பதால் ஏற்படுகிறது. எனவே சிகரெட் பிடிப்பதை நிறுத்தி விடுங்கள்.


தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு

தினமுரசு நாளிதழ்

ரூ.10/= மட்டுமே

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"

வடபுலத்தான் எழுதும் நாட்டு நடப்பு குறிப்புகளும் விமர்சனங்களும்

வடபுலத்தான் எழுதுவது...




# குரங்கு கையில் பூமாலை

இரா. வேணுகோபாலகிருஷ்ணன்

மாலை நேரம் வேலை முடிந்து வந்து வீட்டுக்குள் புகுந்த என்னை டேய் பெரியசாமி "நாசமாப் போயிட்டியேடா" என்ற என் அம்மாவின் வரவேற்பைப் பார்த்து ஒன்றும் புரியாமல் விழித்தேன். பின்னர், ஏம்மா இப்படிக் கத்தறே? "இப்ப என்ன நடந்து போச்சு" புதுசா நான் நாசமாப் போறதுக்கு" என்று கேட்டேன்.

நடக்கப் போகுதுடா "உங்க சின்ன மாமன் பொண்ணுக்குக் கல்யாணம் நடக்கப் போகுதுடா. நான் எத்தனை தடவை சொன்னேன்; போயிப் பொண்ணு கேக்கலாம்னு. நீ ஒத்துக்கலே. இப்பப்பாரு" காத்திருந்தவன் பொண்டாட்டிய நேத்து வந்தவன் கொண்டு போகப் போறான்.

ஏம்மா, உனக்குக் கொஞ்சமாவது அறிவிருக்கா? அந்தப் பொண்ணு எனக்காகக் காத்திருந்தாளா...?

அந்த மாமனோட அந்தஸ்தென்ன, நம்ம அந்தஸ்தென்ன? நம்ம ஒழுகிற ஓட்டு வீட்டையும், அவங்க பங்களாவையும் ஒப்பிட்டுப் பாத்தியா...?

அந்தப் பொண்ணோட அழகுக்கும், படிப்புக்கும் எனக்கும் ஏணி வெச்சாலும் எட்டுமா? என்ன தகுதியில நாம போய்ப் பொண்ணு கேக்கறது?

அந்தஸ்து என்னடா அந்தஸ்து? நமக்குச் சொந்தம் இல்லியா, முறை இல்லியா?

அவன் சம்பாதிச்சதெல்லாம் மகளுக்குத்தானே..! அந்த மகளைச் சொத்தோட உனக்குக் குடுத்தா நீயும் பணக்காரன்தானே?

சொந்தம், முறையெல்லாம் பணத்துக்கு முன்னால எடுபடாதும்மா. இந்த நொண்டிக்குப் பொண்ணு குடுக்கற அளவுக்கு அப்படியென்ன மாப்பிள்ளைப் பஞ்சம் அவங்களுக்கு வந்திட்டுது..? பொண்ணுக் கேக்கப் போகாத அளவுல நாம மானத்தைக் காப்பாத்திட்டோம். அதை ஞாபகம் வெச்சுக்கோ. சரி சரி இப்ப நீ இந்தப் பேச்சை விட்டுட்டு பசிக்கு ஏதாச்சும் செய் என்றேன். அம்மா ஏதோ முணுமுணுத்துக் கொண்டே அடுப்படிக்குச் சென்றாள்.

சந்திரன் மாமா என் அம்மாவுக்குச் சிற்றப்பா மகன். சிறு வயதிலிருந்தே பல தொழில்கள் செய்து கோடிக் கணக்கில் சொத்துச் சேர்த்தவர். அவரது ஒரே மகள் கௌதமி பேரழகி. நாகரிக மங்கை. பி.இ., எம்.பி.ஏ. பட்டதாரி. உறவைச் சொல்லி எனக்குப் பெண் கேட்க வேண்டுமென்று என் அம்மா என்னிடம் பலமுறை சொன்னதுண்டு. ஆனால் நான் அதை ஏற்கவில்லை.

என்னுடைய நிலைமையையும், அவர்களின் நிலைமையையும் நான் நன்கு அறிந்தே என் மறுப்பைத் தெரிவித்து வந்தேன்.

சொத்துக்கள் ஏதுமில்லாத, விதவைத்தாய்க்கு மகனான நான், ஒருபுறம் சாய்ந்தவாறு ஒரு காலை விந்தி விந்தி நடப்பவன். பத்தாவது வகுப்புக்கூடத் தேறாத படிப்பு. விகாரமான முகம். சொந்தமாகவோ, வாடகைக்கோ ஒரு கடையில்லாமல், உள்ளூர் மாரியம்மன் கோயில் பந்தலுக்குக்கீழே தையல் இயந்திரத்தை வைத்துக்கொண்டு ஏதோ ஒரு சிலர் தரும் துணிகளைத் தைப்பேன். கோவிலில் திருவிழா மற்றும் பண்டிகை நாட்களில் அதற்கும் இடமிருக்காது. அந்த நாட்கள் எனக்குக் கூலியில்லா விடுமுறை நாட்கள்தான்.

தைப்பதற்குத் துணிகள் என்னிடம் கொண்டு வருபவர்கள் அடித்தட்டு மக்கள்தான். அவற்றில் பழைய கிழிந்த துணிகளுக்கு ஒட்டுப் போடும் வேலைகளும் மிகுதியாக இருக்கும். ஏதோ வந்த வேலைகளைச் செய்து முடித்து அன்றைய சோற்றுக்கு ஆகும் காசைச் சம்பாதித்தால் இயந்திரத்தை வீட்டுக்கு நகர்த்திக் கொண்டு வருவேன்.

இப்படிப்பட்ட நிலையிலுள்ள எனக்கு ஏழைகளே பெண் கொடுக்க முன்வருவது நடக்காத செயல். இந்த நிலையில் நான் கோடீஸ்வரர் வீட்டில் பெண் கேட்க வேண்டுமென என் அம்மா எதிர்பார்ப்பது எவ்வளவு மடமை என்று எனக்குத் தெரிகிறது. ஆனால் என் அம்மாவுக்குத் தெரியவில்லை.

நல்ல வேளையாக என் மறுப்பை மீறி அம்மா பெண் கேட்கப் போகவில்லை. போயிருந்தால் அங்கே ஏற்பட்டிருக்கும் அவமானத்தைக் கற்பனை செய்து பார்த்தாலே கலக்கமாக இருந்தது.



எப்படியோ அம்மாதிரி நிலைமை ஏற்படவில்லை.

சுவரில் சாமி படத்திற்குப் பின்னால் செருகி வைக்கப்பட்டிருந்த திருமண அழைப்பிதழ் கண்ணில் பட்டது. எடுத்துப் பார்த்தேன். ஒரு அழைப்பிதழே எழுபது அல்லது எண்பது ரூபாய் இருக்கும் போலிருந்தது. மணமகனின் பெயருக்குக் கீழே சொப்ட்வேர் எஞ்சினியர், யூ.எஸ்.ஏ. என்று அச்சிடப் பட்டிருந்தது.

அடேயப்பா... அமெரிக்க மாப்பிள்ளை எங்கே, நான் எங்கே...! மாப்பிள்ளைக்கு எப்படியும் ஒருசில இலட்சங்களில்தான் சம்பளம் இருக்கும். இந்த நிலையில் அந்த மாமன் நம்மை எண்ணிப்பார்த்து அழைப்பிதழ் கொடுத்ததே பெரிய செயல். இன்னும் விறகடுப்பை ஊதியபடி இருக்கும் என் அம்மாவிற்கு இது எங்கே புரியப் போகிறது? சொந்தமாம், உறவாம்!

இந்தத் திருமண அழைப்பிதழ்கள் மூன்றின் விலைகூட எனக்கு ஒருநாள் வருமானமாக இல்லை. இன்றைய நிலையில் பணம், வசதிக்கு முன்னால் உறவு முறையெல்லாம் எடுபடுமா..?

பழைய பஞ்சாங்கமாக இருக்கும் அம்மாவிற்கு இதுகூட விளங்காமல் இருப்பதை அறியாமை என்பதா, அல்லது அறிந்தும் அதை ஏற்க மறுப்பதாகக் கொள்வதா?

பெரிய இடத்துத் திருமணம். அங்கே வருபவர்களுக்கெல்லாம் என் தோற்றத்தால் நான் காட்சிப் பொருளாக இருப்பேன். அதனால் நான் போக விரும்பவில்லை. ஆனால் என் அம்மாதான் வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றாள்.

பிரம்மாண்டமான திருமண மண்டபம். எங்கு பார்த்தாலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்களைப் பார்த்துப் பிரமித்த நான், என்னை நினைத்துப் பார்த்தேன். இந்தக் கல்யாணத்திற்கு நாம் வந்தது சரியா? என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன். மாமன் எங்களையும் மனதில் வைத்து அழைத்தது எப்படி என்றுதான் எனக்குப் புரியவில்லை.

அங்கிருந்த ஆடம்பர அலங்காரங்களையும், வந்திருந்தவர்களின் ஆடை அணிகலன்களையும் பார்த்தபோது நான் எனக்குள் கூனிக் குறுகித்தான் போனேன். ஆனால் என் அம்மாவுக்கு அப்படி எதுவும் உள்ளத்தில் தோன்றியதாகத் தெரியவில்லை.

தன்னை மதிக்கிறார்களோ, ஒதுக்குகிறார்களோ தன் உறவுக்காரப் பெண்களிடமெல்லாம் வலிய வலியப் போய்ப் பேசிக்கொண்டிருந்தாள்.

முகூர்த்த நேரம் ஒன்பது மணிக்கு மேல்தான். எனவே ஏழரை மணிமுதல் காலைச் சிற்றுண்டி பரிமாறப்பட்டது. உண்டு முடித்து உ[illegible] கார்ந்திருந்தபோது திடீரென ஒரு பரபரப்[illegible] புத்தம்புதுக் கார் ஒன்[illegible] வந்தது.

முக்கால் தலை வழுக்கையோடு நாற்பது வயது மதிக்கத்தக்க ஒருவர் கதவைத் திறந்து காரிலிருந்து இறங்கினார். ஸ்டைலாக எல்லோரையும் பார்த்துக் கையை அசைத்தவாறே மண்டபத்திற்குள் நுழைந்தார். யாரோ பெரிய பணக்கார வி.ஐ.பி. போலிருக்கிறது என்று எண்ணிக் கொண்டேன்.

அவர் ஒரு கும்பலோடு மணமகன் அறைக்குள் நுழைந்தார். சரி மாப்பிள்ளையின் உறவுக்காரர் போலிருக்கிறது என்று நினைத்தேன்.

முகூர்த்த நேரத்திற்கு முன்னதா[illegible] மணமகனை அழைத்து வந்து மணவறையில் அமரவைத்தார்கள். எங்கோ பார்த்த முகமாய்த் தெரிந்தது. யோசித்தபோது சற்று நேரத்திற்கு முன் பார்த்தவர்தான் மாப்பிள்ளையென்று தெரியவந்தது. மாப்பிள்ளை அலங்காரத்தில் மணமகனுக்குரிய தலைப்பாகை அணிந்திருந்ததால் அடையாளம் மாறியிருந்தது.

தடபுடலாகத் திருமணம் முடிந்தது. நாங்களும் வீட்டிற்கு வந்து சேர்ந்தோம். கிளியை வளர்த்துப் பூனை கையில் குடுத்திட்டாங்க என்றாள் என் அம்மா. ஏம்மா இப்படிச் சொல்ற...?

அவங்க பொண்ணு அமெரிக்காவில போய் நல்லா வாழணும்னு இந்த மாப்பிள்ளைக்குப் பொண்ணக் குடுத்திருக்காங்க. உனக்கென்ன தெரியும் அமெரிக்க மாப்பிள்ளை பற்றியும், அந்த நாட்டு ஆடம்பர வாழ்க்கையைப் பற்றியும்...!

என்ன... மாப்பிள்ளைக்குக் கொஞ்சம் வழுக்கை. அவ்வளவுதானே..! அதைப்பற்றிக் கட்டிக் கிட்டவளே கவலைப்படலை. நீ ஏன் கவலைப்படறே...? இதே மாதிரி நீ என்னை நினைச்சுப் பாத்தியா...? என்றேன். அம்மா ஒன்றும் பேசவில்லை.

தப்பித்தவறி என் அம்மா கற்பனை செய்ததுபோல் இதே பெண்ணை எனக்குக் கொடுத்திருந்தால் குரங்கு கையில் பூமாலை என்றுதானே மற்றவர்கள் பேசியிருப்பார்கள்! ■









**- கிழக்கான் -**

# உள்ளூர் விமானப் போக்குவரத்து வெற்றியளிக்குமா?

இலங்கையைப் பொறுத்தவரையில் சுற்றுலாப்பயணிகள் முக்கியமானதொரு வருமானத்துறையாக இருக்கின்றனர். இத்துறைசார்ந்து இவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதே அரசாங்கத்தின் முதல் இலக்காகவும் இருக்கிறது.

கிழக்கின் சுற்றுலா அபிவிருத்தியில் பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட வண்ணமிருக்கிறது. இதற்கப்பால் இலங்கையில் சுற்றுலாத் துறையை மேலும் வருமானம் ஈட்டும் துறையாக மாற்றுவதற்கு பிராந்தியங்கள், மற்றும் உள்ளூர் தொடர்புகளையும் அப்பிரதேசங்கள் மீதான ஆர்வத்தினையும் தூண்டும் வகையில் சிவில் விமானப் போக்குவரத்து மேம்படுத்தப்பட்டு வருகிறது.

சுற்றுலாத்துறையையும் உள்ளூர் உற்பத்தியாளர்களையும் இலக்காகக் கொண்டு இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுவதாக சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன தெரிவிக்கிறார்.

கடந்த வாரத்தில் மட்டக்களப்புக்கு வந்த அமைச்சர், இலங்கைக்கு வருகைதரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின்



எண்ணிக்கை 2013ல் 12 மில்லியனாக இருந்தது. இந்த எண்ணிக்கையை 2017ஆம் ஆண்டில் 17 மில்லியனாக அதிகரிக்கவேண்டும். இதற்கு சிவில் விமான சேவைகள் பெரிதும் பயன்படும் எனவும் தெரிவித்தார்.

உள்ளூர் விமான சேவைகளை விருத்தி செய்யும்வகையில் அமைக்கப்பட்டுவரும் மட்டக்களப்பு விமான நிலைய ஓடு பாதை, பிரயாணிகளுக்கான வசதி மண்டபம் உள்ளிட்ட அபிவிருத்தி வேலைகளை சிவில் விமானசேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரட்ன வெள்ளிக் கிழமை (30) முற்பகல் நேரில் பார்வையிட்டார்.

சிவில் விமானசேவைகள் அதிகார சபையின் தலைவர் ஜெனரல் ரொஹான்தலுவத்த, சிவில் விமான சேவைகள் பிரதம பணிப்பாளர் எச்.எம்.சி.நிமால் சிறி, கட்டுநாயக்காக விமானநிலைய 'பிரதித்தலைவர் கமல் ரத்வத்த, கிழக்கு மாகாண பணிப்பாளர் பொறியியலாளர் தர்மரெட்ணம், உட்பட அதன் அதிகாரிகள் மற்றும் விமானப்படை அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள், அதிகாரிகள் வருகை தந்திருந்தனர்.

மட்டக்களப்பில் 1350 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வரும் விமான நிலையத்தின் புனரமைப்பு பணிகள் நிறைவில், 4800 அடி நீலமும், 45 மீற்றர் அகலமும் உடையதாக மட்டக்களப்பு விமான நிலையத்தின் ஓடு பாதை அமையும். புனரமைப்பு வேலைகளை பார்வையிட்ட அமைச்சர் பிரியங்க ஜயரட்ன அதிகாரிகளுடன் இந்த விமான நிலையத்தின் புனரமைப்பு வேலைகள் பற்றியும் அதன் முன்னேற்றம் பற்றியும் கலந்துரையாடினார்.

மட்டக்களப்பு உள்ளூர் விமான நிலையத்தின் ஓடுபாதை விஸ்தரிக்கப்பட்டு புனரமைக்கப்பட்டு வருவதுடன் பிரயாணிகளுக்கு வசதியான மண்டபமும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இவ்வேலைகள் 2015ஆம் ஆண்டு இறுதிக்குள் நிறைவடையவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உல்லாசப் பயணிகளின் வருகையினை அதிகரிக்கும் நோக்கில் இந்த அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து விமான சேவைகள் பொறியியல்துறை இந்த விமான நிலைய புனரமைப்பு பணிகளை மேற்கொள்ளப்படுகிறது.

மட்டக்களப்பு விமான நிலைய புனரமைப்புக்கென 1350 மில்லியன் ரூபா ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளதுடன் புனரமைப்பு பணிகளை அதி மேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த 2013 செப்ரம்பரில் ஆரம்பித்து வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சுற்றுலாப் பயணிகளின் வருகை 2012ஐ விடவும் 2013-ல் 26.7 வீதம் அதிகரித்திருந்ததாகவும், அது 1,274,593ஆக இருந்தது. யுத்தம் நிறைவடைந்த 2009-ல் 448490ஆக வெளிநாட்டுச் சுற்றுல்ாப்பயணிகளின் வருகை இருந்தது என சுற்றுலாத்துறை அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

உள்ளூர் விமான சேவைகளை மேம்படுத்துவதன்மூலம் இலங்கையின் பொருளாதாரத்தினை மேலும் வலுவுள்ளதாக ஆக்கமுடியும்.

ஆகவே அது தொடர்பான அனைத்து வளங்களையும் ஏற்படுத்த வேண்டும் என்ற வகையில் நாட்டில் 8 இடங்களில் உள்ளூர் விமான நிலையங்கள் விஸ்தரிக்கப் படுகின்றன.

சர்வதேச விமான நிலையங்களுடன் இணைந்ததாக உள்ளூர் விமான சேவைகளையும் இணைத்த வலைப்பின்னல் ஒன்று உருவாக்கப்பட்டு அதன்மூலம் நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் சுற்றுலாப் பிரயாணிகள் இலகுவாகவும் விரைவாகவும் சென்று வருவதற்கான ஏற்பாடுகளை உருவாக்குவதே சிவில் விமானப் போக்குவரத்து மேம்படுத்தலின் முக்கிய நோக்கமாகும்.

அந்தவகையில் அம்பாறை, மட்டக்களப்பு, அநுராதபுரம், பலாலி, தம்புள்ளை, கண்டி, கட்டுகுறுந்த, காலி, அம்பாந்தோட்டை உள்ளிட்ட சிவில் விமான நிலையங்கள் விரிவாக்கம் செய்யப்படுகின்றன.

சிவில் விமானப் போக்குவரத்துடன் இணைந்ததாக இருக்கும் சுற்றுலாப் பிரயாணிகளுடைய வசதிகளை மேம்படுத்துவதன் ஊடாக வர்த்தகத் துறையும் மேம்படும் என்பதுடன், கிராமங்கள் இணைக்கப்படுவதன் ஊடாக கிராமிய பொருளாதாரம், கிராமிய உற்பத்தி, வேலைவாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு பொருளாதாரம் முன்னேற்றமடையும்.

இந்தவகையில்தான் சிவில் விமானப் போக்குவரத்து மேம்படுத்தல் செயற்பாடு நடைபெற்றுவருகிறது. இந்த பிராந்திய விமான நிலையங்கள் புனரமைப்பு விஸ்தரிப்புகள் 2016ஆம் ஆண்டில் பூரணமடைவதன்மூலம் சுற்றுலாத்துறையும் கிராமங்களும் தொடர்புபடுத்தப்பட்ட பொருளாதார மேம்பாடு ஏற்படும்.

> **சர்வதேச விமான நிலையங்களுடன் இணைந்ததாக உள்ளூர் விமான சேவைகளையும் இணைத்த வலைப்பின்னல் ஒன்று உருவாக்கப்பட்டு அதன்மூலம் நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் சுற்றுலாப் பிரயாணிகள் இலகுவாகவும் விரைவாகவும் சென்று வருவதற்கான ஏற்பாடுகளை உருவாக்குவதே சிவில் விமானப் போக்குவரத்து மேம்படுத்தலின் முக்கிய நோக்கமாகும்.**
>
> **சிவில் விமானப் போக்குவரத்துடன் இணைந்ததாக இருக்கும் சுற்றுலாப் பிரயாணிகளுடைய வசதிகளை மேம்படுத்துவதன் ஊடாக வர்த்தகத் துறையும் மேம்படும் என்பதுடன், கிராமங்கள் இணைக்கப் படுவதன் ஊடாக கிராமிய பொருளாதாரம், கிராமிய உற்பத்தி, வேலைவாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு பொருளாதாரம் முன்னேற்றமடையும்.**

சுற்றுலாத்துறையானது கிழக்கில் கடந்த காலத்தில் மிகவும் வீழ்ச்சி அடைந்து காணப்பட்டது. யுத்தம் முடிவடைந்த பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் கிழக்கின் உதயம் வேலைத் திட்டத்தின்மூலம் சுற்றுலாத்துறையை கிழக்கில் அபிவிருத்தி செய்தார்.

சுற்றுலாத்துறை இங்கு அபிவிருத்தி அடைந்து வருவது போன்று இங்குள்ள மக்களின் வாழ்கைத்தரமும் வளர்ச்சியடைய வேண்டும். பிரதேச மக்களின் பொருளாதாரம் வளர்ச்சியடைய சுற்றுலாத்துறையை சமூகங்களிடையே கொண்டு செல்லப் பட வேண்டும். என்பதும் அவருடைய எதிர்பார்ப்பாக இருக்கிறது.

அந்தவகையில் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு ஆகிய விமான நிலையங்கள் உள்ளூர் விமான சேவைகளுக்காக விஸ்தரிக்கப்பட்டு, புனரமைக்கப்பட்டு வருகின்றன.

யுத்த காலத்தில் வித்தியாசமாக இருந்தது. அதாவது, யுத்தம் நடைபெற்ற காலத்தில் அச்சம் காரணமாகவும், பாதுகாப்புப் பிரச்சினை காரணமாகவும் சுற்றுலா விடுதிகள், ஹோட்டல்கள் எதுவுமில்லா நிலையொன்று இருந்துவந்தது.

ஆனால் யுத்தம் நிறைவுபெற்ற பின்னர் பல சுற்றுலாப்பிரயாண ஹோட்டல்கள் பாசிக்குடா கடற்கரையில் அமைக்கப்பட்டன. தற்போது 14 சுற்றுலா ஹோட்டல்கள் அமைக்கப்பட்டுவருகின்றன.

யுத்தம் நிறைவுபெற்ற பின்னர் சுதந்திரமாக நாட்டின் இயற்கையை, வளத்தை, மகிழ்வை அனுபவிக்கும் நிலை தோன்றியிருக்கையில் தேவையற்ற பிரச்சினைகளை குறைத்துக் கொள்ளவே அனைத்து மக்களும் எதிர்பார்க்கின்றனர் என்பதே இதன் தார்ப்பரியமாகும். கிழக்கில் வளர்ச்சி பெற்றுவரும் சுற்றுலாத் துறையின் அபிவிருத்திக்கு அனைத்து தரப்பினரும் பங்காற்றவேண்டும் என்ற வகையில் இதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வேண்டும்.

சுற்றுலாத் துறையானது கிழக்கில் 2014-ல் அதிக வருமானத்தை ஈட்டித்தந்துள்ளது. இது எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கலாம் என்ற எதிர்பார்ப்பு சுற்றுலாத்துறைசார்ந்து செயற்படுபவர்களிடமும் அத்துறையைப் பயன்படுத்துபவர்களிடமும் இருக்கிறது. இந்த உள்ளூர் சிவில் விமான சேவையானது பாரம்பரியமிக்க பிரபல்யமான இடங்களைச் உல்லாசப் பயணிகள் குறுகிய காலத்தினுள் சென்று பார்வையிடும் சூழ்நிலைகளை ஏற்படுத்தும் என்று நம்பப்படுகிறது.

இதேநேரம், உள்ளூர் விமான சேவைகளை ஏற்படுத்துவதன்மூலம் குறிப்பிட்ட ஒரு சில பிரதேசங்கள் என்றில்லாமல் நாட்டின் எல்லாப் பிரதேசங்களையும் உல்லாசப் பயணிகளாக வருபவர்கள் சென்று பார்வையிடுவதுடன், அங்குள்ள இளைஞர்- யுவதிகளுக்கு மேலதிக வருமானங்களையும், தொழில்வாய்ப்புக்களையும் கொண்டு வரக்கூடியதாக இருக்கும் என்று சுற்றுலாத்துறை எதிர்பார்க்கிறது.

அந்தவகையில், கிழக்குமாகாணத்தில் உல்லாசப்பயணத் துறையின்மூலம் முற்றுமுழுதாக இப்பிரதேச மக்கள் தமது வாழ் வாதாரத்தினையும் அதிகரிக்கக் சூழல் உருவாகும்.

கிழக்கைப் பொறுத்தவரையில் மட்டக்களப்பில் வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஆலயங்கள், இடங்கள், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு உல்லாசப் பிரயாணிகளை மிகவும் கவர்ந்த பாசிக்குடா கடற்கரை, ஆறு, வாவி, வயல் பிரதேசங்கள், அம்பாறையில் அறுகம்பே உள்ளிட்ட பிரதேசங்கள், திருமலையின் கிண்ணியா. நீரூற்று, நிலாவெளி கடற்கரை, திருமலைத்துறைமுகம், திருக்கேணேஸ்வரம் உள்ளிட்ட வரலாற்று முக்கியத்துவம்மிக்க ஆலயங்கள் எனப்பல இடங்களைக் குறிப்பிடமுடியும்.

அந்தவகையில் கிழக்கு மாகாணத்தின் முக்கியத்துவம்மிக்க சுற்றுலாத்துறை அபிவிருத்தியில் சிவில் விமானப் போக்குவரத்தும் மேலும் உந்து சக்தியாக இருக்கப் போவதுடன், நாட்டின் சுற்றுலாத் துறையையும் சிவில் விமானப்போக்கு வரத்துத்துறையின் முன்னேற்றம் முக்கியத்துவம் பெற்றதாக விளங்குகிறது.





# கட்டாய காதல்

"பேரழகி பத்மினி
என்னிடம் வரவேண்டும்
தன்னையே தரவேண்டும்!"

டில்லிக் கோட்டையை
முற்றுகையிட்ட
அலாவுதீன்
ஆணையிட்டான்!

டில்லி மன்னரின்
இளம் மனைவி பத்மினி!
டில்லி மன்னர்
அலாவுதீன் படைகளால்
கைது செய்யப்பட்டார்!

"சித்தூர் கோட்டை
சிதறாமல் இருக்க
வேண்டுமானால் சித்தூர்
ராணி பத்மினி வெளியே
வரவேண்டும்!"

அலாவுதீன் வெற்றிப்
போதையில் வீங்கிக்
கத்தினான்! பத்மினி பார்
புகழும் பேரழகி!

படைத்தவன் வஞ்சகம்
செய்யாமல் வடித்தெடுத்த
தந்தச் சிலை! நேரில்
சந்தித்ததில்லை
சித்திரத்தில்
கண்டிருக்கிறான்!

"சித்திரத்தில் கூட
இதழ்களில் எப்படி
தேனூறுகிறது?" என்று
மயங்கியிருக்கிறான்!

"பூரித்த கனியிரண்டை
காணக் கண்களிரண்டு
போதவில்லையே என்று
வருந்தியிருக்கிறான்!

"சுவை தரும் கனியிரண்டை
கொய்வது எந்நாளோ?"
என்று ஏங்கியிருக்கிறான்!

"மாதுளம் பூ நிற மேனியில்
மன்மத ராகம் மீட்டுவது
எந்நாளோ" காமம்
தலைக்கேற ஜாமம் முழுக்க
விழித்திருக்கிறான்!

"கோட்டையை பிடித்து
கோமளவல்லியை -பஞ்சு
மூட்டையாக கொண்டு
வருகிறேன்!" என்றுவிட்டு
புறப்பட்டான்!"

பறந்த குதிரைகளின் குளம்படி
எழுப்பிய புழுதியிலும்
மறைந்து போகவில்லை
அவள் முகம்!

குமுத மலர் வாயில்
குடிக்க வேண்டும் அமுதம்
கழுகு மரத் தோளில்
வழுக்கிவிழ வேண்டும்
சங்கு நிகர் கழுத்தில்
கொஞ்சி மகிழவேண்டும்!

பொங்கு கடல் போல
குமுறியது காமம்!
தாங்குதடையின்றி
தாவியது மனம்!

டில்லி மன்னரின் கோட்டை
வீழ்ந்ததும் மகிழ்ச்சியில்லை!
டில்லி மன்னர் கைதானதும்
களிப்பில்லை! பத்மினி
எங்கே? பதுமை எங்கே?
அலாவுதீன் விழிகள்
அவளைத்தான் தேடின!

"வெற்றிக் கனி சுவைத்து
அலுத்து விட்டது
அவளே கனி சுவைக்க
ஆசையாயிருக்கிறது!"

மடல் ஒன்று அவன் கரம்
சேர்ந்தது! "சுல்தானுக்கு
வணக்கம்!

பத்மினி எழுதுவது.
உம்மை மணக்க எனக்கு
சம்மதம்! உமது ராணியாக
மாறப்போவதால் ஒரு
விண்ணப்பம்.

என் தோழிகளுடன் எம்
உடைமைகளை ஏற்றிக்
கொண்டு பல்லக்கில்
வருகிறோம்! வழியில்
யாரும் குறுக்கிடாதிருக்க
வேண்டும்.

மடல் படித்தவன்
வானத்தில் பறந்தான்!
கைக்குள் வருகிறது
கட்டழகுப் பெட்டகம்!

ஆராய்ந்தும் பார்க்கலாம்
உராய்ந்தும் பார்க்கலாம்
சுவை பல அறியலாம்
சுளை என அள்ளலாம்!
கனவு முகடுகளை
அலாவுதீன் உரசினான்!

பல்லக்குகள் [illegible]ந்தன
இன்[illegible]
விண்ண[illegible]ந்தது.

"என் கணவர் பீம்சிங்கை
ஒரு தடவை காணவேண்டும்
அலாவுதீன் மறுக்கவில்லை
அனுமதி கொடுத்தான்!

பிரியாவிடை போலிருக்கிறது.
பெற்றுக் கொள்ளட்டும்
என்று நினைத்தான்!

தன் காதருகே வளைகரம்
சிணுங்கும் ஓசைக்காக
காத்திருந்தான்!
கேட்டது சத்தம்
வளைக்கரச் சத்தமல்ல
வாட்கள் உராயும் சத்தம்!

பல்லக்கில் வந்தது
பேரழகியல்ல பேராபத்து!
"சூழ்ச்சியால் என்னை
சுருக்கிவிட்டாளே!"
கொதித்தான் அலாவுதீன்.

கைதான மன்னன்
பீம்சிங்கும் தப்பினான்!
அடங்காத கோபத்தோடு
ஆணையிட்டான் சுல்தான்!

"சித்தூர் கோட்டை
சிதறுண்டு போகட்டும்
எதிரிகள் தலை எதுவும்
கழுத்தில் இருக்கக்
கூடாது"
கடும் போர் கொடும் போர்
கோட்டைக்குள் புகுந்தான்
அலாவுதீன்!
அவன் அங்கு கண்டது
தித்திக்கும் அழகியல்ல
எத்திக்கும் பரவும் தீயை!
அந்தப்புரத்தில் தீ மூட்டி
கொண்டு சுதந்திர அழகி
நீறாகிப்போனாள்!

எந்த மேனியை சுல்தான்
தீண்ட வந்தானோ அந்த
மேனியை தீ தின்று முடித்தது.

"ஐயோ! பத்மினி!"
அலாவுதீன் தன்
வாழ்க்கையில்
முதல் முறையாக
உடைந்தழுதான்!

போரிலே வென்றேன்
பெண்ணே உன்னிடத்தில்
தோற்றுப் போனேன்!
மார்பில் அடித்து
புலம்பினான்.

நான் என்ன வீரன்?
நான் என்ன விவேகன்?
கண்ட இடமெங்கும்
மனதை மேயவிட்டு
கட்டறுத்த மாடாய்
அலையவிட்டு தொட்டழிக்க
நினைத்தேன் கட்டாய
காதல் கொண்டு!
மந்திரத்தால் மாங்காய்
விழாது! கட்டாயத்தால்
காதல் வராது!

அலாவுதீன் கைப்பற்றிய
கோட்டையை கைவிட்டு
சென்றான். "அவள்
நினைவாக இதனை
விட்டுச் செல்கிறேன்!"
கண்ணீரோடு
விலகினான்.

**"சென்ற இடத்தில் செலவிடா தீ தொரீஇ**
**நன்றின்பால் உய்ப்ப தறிவு"** அதிகாரம்: 43 – குறள்:422




**இந்திய தலைமையால் இலங்கை குழப்பமடைய வேண்டியதில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளதே..?**

**எம்.குணாளன், வவுனியா.**

குற்றமுள்ள உள்ளம்தான் குறுகுறுக்கும் என்பார்கள். குற்றமில்லாவிட்டால் எந்த நாட்டில் யார்? ஆட்சிக்கு வந்தாலும் இலங்கை ஏன் குழப்பமடைய வேண்டும்.

**உலகளவில் எதிர்பார்க்கப்பட்ட மோடி ஆட்சி இந்தியாவை முன்னேற்றமடைய வழிவகுக்குமா?**

**எவ்.சமீர், புத்தளம்.**

அப்படி ஒரு நம்பிக்கையின் பேரில்தான் இந்திய மக்கள் மோடிக்கு வாக்களித்திருக்கின்றார்கள். அவரும் இந்தியாவின் முன்னேற்றம்தான் மக்கள் எனக்கு மக்கள் வழாங்கியிருக்கும் கடமை என்று கூறியிருக்கின்றார். அதை சாதித்தும் காட்டுவார் என்பதற்கு தேவையான சமிக்ஞைகள் தெரிகின்றன. அது நமக்கு வீணான கவலை எதற்கு?

**சிந்தியா! அத்துமீறி இலங்கை எல்லைக்குள் வந்து தமிழக மீனவர்களே பிரச்சினைகளை வீம்புக்கு இழுக்கிறார்களே?**

**ஜே.அஸ்வினி, கைதடி.**

அது இந்திய மத்திய அரசுக்கும் தெரிந்துள்ளது. மோடி தலைமையிலான அரசு இவ்விவகாரத்துக்கு தேவையான முடிவொன்றை எடுப்பார்கள் என்று இலங்கை அரசு நம்புகின்றது. மோடியுடனான சந்திப்பில் இவ்விவகாரம் தொடர்பில் ஜெயலலிதா எடுத்துக்கூறிய போது, அதை மோடி தேசிய பிரச்சினையாக முன்னுரிமைப்படுத்துவதாக கூறியுள்ளார். பொறுத்திருப்போம்.

**29ஆவது மாநிலமாக தனித் தெலுங்கானா உருவாகி விட்டதே சிந்தியா!?**

**அ.யதுர்ஷன், மன்னார்.**

அதை ஏற்றுக்கொண்ட இந்தியா, இலங்கையில் மட்டும் மொழி வாரியான தனி மாகாண அலகு உருவாக ஆதரிக்கப்போவதில்லை என்று தொடர்ச்சியாகக் கூறி வருகின்றதே என்ற ஆதங்கத்தையே உங்கள் கேள்வியில் புரிந்து கொள்ளமுடிகின்றது. அதற்குரிய முறையில் நாம் போராடவும் இல்லை. நமது நியாயங்களை நாம் நாட்டுக்கு உள்ளேயும், வெளியேயும் எடுத்துச் செல்லவில்லையே. நாம் கொலைகளை எண்ணிக்கொண்டே பூரித்துக் கிடக்கப் பழகிவிட்டோமே.

**பெண்களின் வாழ்க்கையோடு விளையாடும் நைஜீரிய தீவிரவாத அமைப்பை என்ன செய்யமுடியும்?**

**எவ்.ஹமீத், மட்டக்களப்பு.**

அந்த நாட்டில் உள்ள போஹம் ஹரம் என்ற அமைப்புத்தான் இந்த அருவருக்கத்தக்க செயலைச் செய்து மானிட சமூகத்தையே தலைகுனியச் செய்துள்ளது. அந்நாட்டு மக்கள் இவ்வமைப்புக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து தாக்கிய சம்பவங்களும் அங்கு இடம்பெற்றுள்ளது. உலக சண்டித்தனம் பேசும் அமெரிக்கா போன்ற நாடுகள் இவ்விடயத்தில் ஏன் தீர்வொன்றை இதுவரை காணவில்லை என்பதுதான் புதிராக உள்ளது.

**விவாகரத்தால் பிள்ளைகளின் வாழ்க்கை கேள்விக்குறியாகிறதே சிந்தியா!**

**வ.தாமீரன், வல்வெட்டித்துறை.**

கணவனும், மனைவியுமாக இருந்து பிரச்சினைகளைப் பார்க்காமல் பெற்றோராக இருந்து சிந்திக்க வேண்டும். பிள்ளைகளை அநாதரவாக விடும் இவர்களுக்கு விவாகரத்து ஒருபோதும் பிரச்சினைகளிலிருந்து விடுதலையாக அமையாது.

**சிந்தியா! மலையகத்தின் அரசியல்வாதிகளால் மக்களுக்கு ஒரு பயனும் சென்றடைவதில்லையே. இது யார்விட்ட தவறு?**

**த.சாந்தன், கிளிநொச்சி.**

எல்லோரையும் அவ்வாறு கூறிவிட முடியாது. மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் போன்றவர்கள் கவனிக்கத்தக்க சில பணிகளைச் செய்வதை காணக்கூடியதாகவுள்ளது. அதைப் பார்க்கும்போது பொதுவாகவே அரசியல் தளமானது துடிப்புமிக்க இளைய தலைமுறையினரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. அதுவே புதிய மாற்றங்களை ஏற்படுத்தும்.

**சிந்தியா! வறுமையோடு வசதியாக இருக்கிறேன் என்கிறாரே எனது நண்பி?**

**க.ஷர்மிலி, மாத்தறை.**

பொருளாதாரம் நெருக்கடியை கொடுத்தாலும், மனம் நிறைவான வாழ்க்கை ஒன்று உள்ளது என்பது உண்மையே. அது மிக அரிதாக சிலருக்கே வாய்க்கும். உங்கள் நண்பிக்கு அது வாய்த்திருக்கின்றது.

**சிந்தியா? கிண்ணம் வெல்லும் என எதிர்பார்க்கப்பட்ட பஞ்சாப் அணி மண்ணைக் கவ்விவிட்டதே?**

**என்.கானன், சாவகச்சேரி.**

ஆம். 200 என்ற வெற்றி இலக்கை நிர்ணயித்தபோதும் களத்தடுப்பில் காணப்பட்ட பலவீனம், பந்து வீச்சாளர்கள் பயன்படுத்தப்பட்ட முறையில் பஞ்சாப் அணியின் தலைவர் விட்ட தவறுகள் மீண்டும் ஒரு முறை கொல்கொத்தாவின் பக்கம் கிண்ணத்தைக் கொண்டு சென்றுள்ளது.

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## வடக்கின் நிழல்....

அமைச்சரும், முதலமைச்சரும் அடிக்கடி இருவருமாக பேசிக்கொள்கின்றார்கள். அவர்களிடையேயான பேச்சுக்களைப் பார்க்கும்போது, இருவரும் அநாவசிய விவாதங்களை விடுத்து நியாயமான முடிவை உடனடியாகவே எடுக்கக் கூடிய புரிந்துணர்வை வளர்த்துவருவதுபோல் உள்ளது.

ஆனால் ஈ.பி.டி.பியின் உறுப்பினர்களும், கூட்டமைப்பின் உறுப்பினர்களும் ஒருவரை ஒருவர் விட்டுக்கொடுக்காமல் விவாதங்களைச் செய்கின்றனர். அந்த விவாதங்கள் ஒற்றை வார்த்தைகள், இரட்டை வார்த்தைகள் என முற்றிப்போவதும் நடந்தது.

வார்த்தைகள் முற்றிப் போகும்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தவும், முதல[illegible]சர் கூட்டமைப்பினரை கட்டுப்படுத்தவும் தமக்கே[illegible] அணுகுமுறையைக் கையாள்கின்றனர். பின்ல[illegible]வறொரு சர்ச்சையில் விவாதங்கள் தொடர்கின்[illegible].

உதாரணமாக மேற்படி ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் தொடர்பில் யாழிலிருந்து வெளியாகும் பத்திரிகைகள் எவற்றிலும் அந்தக் கூட்டங்களில் தீர்மானிக்கப்பட்ட மக்கள் நலன்சார்ந்த திட்டங்கள் எவை என்பதையோ, நடந்துமுடிந்த அல்லது நடந்துகொண்டிருக்கும் திட்டங்கள் எவை என்பதையும் தேங்கி கிடக்கும் நலத்திட்டங்கள் தொடர்பிலும் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் என்ன முடிவுகள் காணப்பட்டன என்பது தொடர்பிலும் விரிவாக அறிக்கையிடல்களை செய்யவில்லை.

ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கேலிக்கூத்தாக நடந்தது. அமைச்சர் அப்படி நையாண்டிவிட்டார், முதலமைச்சர் ஆமையைப்போல் தலையை உள்ளே இழுத்துக்கொண்டு இருந்தார், அந்த பாராளுமன்ற உறுப்பினர் தறுதலை என்றார், இந்த மாகாண சபை உறுப்பினர் தறுதலை என்றார், வாழைக்குலை அமைச்சர் நிதி கேட்டார், சிவாஜி சீறிப்பாய்ந்தார்.

அனந்தி அறிக்கையோடு வந்து அதை வாசிக்காமலே ஏமாற்றத்தோடு போனார், என்றுதான் அறிக்கையிட்டார்கள். ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கேலிக்கூத்தாக நடந்திருந்தால், விடயத்துக்கு புறம்பாக போயிருந்தால் அதை இந்த ஊடகவியலாளர்கள் ஏன் சுட்டிக்காட்டி கேள்விகளைத் தொடுக்கக்கூடாது. அதற்கு காரணம் அதையே இவர்கள் விரும்புகின்றார்கள்.

ஒருவேளை யாழ்ப்பாணத்து வாசக வட்டம் அப்படித்தான் வடிவமைக்கப்பட்டுவிட்டதா? அல்லது இவர்கள் யாழ்ப்பாண மக்களை இவ்[illegible] வடிவமைக்க முயற்சிக்கின்றார்களா? [illegible]துதான் புரியாத கேள்வியாக உள்ளது.

# காதிலை பூ கந்தசாமி

"நான் சொல்வதெல்லாம் பொய் பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை."

**வணக்கமுங்கோ. மோடி பதவியேற்று ஒரு வாரமும் ஆகிட்டுதுங்கோ. ஆனால், இன்னும் அவரைப் பற்றிய பரபரப்புக்குப் பஞ்சம் இல்லையுங்கோ. மோடியை பிரதமராக்கிப் போட்டால் தமிழர்களின் கடமை முடிந்துவிடும் எண்டும் ஈழத்தமிழர்களுக்கு தமிழீழம் கிடைத்துவிடும் எண்டும் தமிழ்நாட்டில சொல்லப்பட்டதுங்கோ.**

அது மட்டுமில்லையுங்கோ, ஈழத் தமிழர்கள் இறுதிப்போரில பலியாகிப் போனதுக்கு காரணமான காங்கிரஸ் ஆட்சியையும், அவருக்கு ஒத்தூதிய கலைஞர் ஆட்சியையும் தமிழக மக்கள் படுதோல்வியடையச் செய்யவேணும் எண்டும் பரப்புரைகள் செய்யப்பட்டதுங்கோ.

தேர்தல் முடிவுகளைப் பார்க்கேக்க தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் கூறியபடியே எல்லாம் நடந்து முடிந்திருக்கின்றதுங்கோ.

மத்தியில காங்கிரஸ் படுதோல்வி அடைஞ்சுட்டுது. தமிழகத்தில கலைஞருக்கு ஒரு சீட்டுக்கூட கிடைக்கவில்லை. ஆனால் அடுத்ததாக என்ன நடக்கும் எண்டு சொல்லிச்சினமோ அதுகள் தானுங்கோ நடக்கவில்லை.

மத்திய ஆட்சிப் பொறுப்புக்கு வந்துள்ள மோடி இலங்கை ஜனாதிபதியை அழைத்ததை எதிர்த்த வைகோவை தூக்கி உள்ளே போட்டுவிட்டார். இந்தச் சம்பவம் வைகோவுக்கு மட்டுமில்லையுங்கோ, வைகோ மாதிரி தமிழகத்தில இருந்துகொண்டு எதிர்ப்பு காட்டிறவைக்கும் பேய் அறைஞ்சமாதிரி ஆகிட்டுதுங்கோ.

தமிழ்நாட்டுக்குள்ள என்ன எதிர்ப்புக் கூத்தாடினாலும் பரவாயில்லை. யாரை தீக்குளிப்பு நடத்தினாலும் பரவாயில்லை. அதைத்தாண்டி ஏதாவது செய்ய முற்பட்டால் விளைவு மோசமாகிடும் எண்டதை உணரத்தொடங்கி இருக்கினமுங்கோ.

தமிழ் நாட்டு ஊடகங்களும் இப்பதான் புத்திமதி சொல்லினமுங்கோ. மோடி என்ன செய்தால் நல்லதெண்டதை பக்குவமாக சொல்லிப்போட்டு, அவரின் போக்குகளை அவதானிக்காமல் அல்லது அவர் தனது காய்களை நகர்த்த கால அவகாசம் கொடுக்காமல் எதிர்க்கிறது முட்டாள்தனம். அது வெற்றியைத் தராது எண்டெல்லாம் சொல்லினமுங்கோ.

கடைசியில இலங்கை ஜனாதிபதி இந்தியாவுக்குச் சென்றார். மோடியோடு தனிப்பட்ட பேச்சுக்களை நடத்தினார். மோடியும் இலங்கை குறித்த முக்கியமான விடயங்களை குறிப்பிட்டுப் பேசியுள்ளார். இலங்கையின் அழைப்பை ஏற்று இலங்கைக்கு வரவும் சம்மதம் தெரிவித்துள்ளார்.

ஆனால், மறுபக்கத்தில் தமிழ் நாட்டுக்கும் மோடிக்கும் பாலமாக இருப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட வைகோ இப்போது மோடியின் கோபத்துக்கு ஆளாகியிருக்கின்றார். அவசரக்காரனுக்கு புத்திமட்டு எண்டுவினமே. அது வைகோ வைத்தான் போல.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை 37 பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்ற ஜெயலலிதாவும், ஒரு ஆசனத்தையும் பெறாத கருணாநிதியும் தற்போது ஒரே நிலையிலைதானுங்கோ இருக்கினம்.

இதே கலைஞருக்கு இந்த 37 பாராளுமன்ற ஆசனங்கள் கிடைத்திருந்தால், அவரின் ஆதரவு மத்தியில் அரசு அமைக்க தேவை இல்லாட்டிலும் பரவாயில்லை எண்டிட்டு மோடியோடு டீலைப்போட்டிருப்பார்.

குறைந்தது மூண்டு மத்திய அமைச்சர்களையும், ரெண்டு இணை அமைச்சர்களையாவது தமிழகத்துக்குப் பெற்றுக் கொண்டிருப்பார். அத்தகைய சாணக்கியம் கலைஞருக்கு உண்டு. அவர் மோடியோடு முட்டமாட்டார், தமிழ்நாட்டில இருந்து கொண்டு வீம்பு பண்ணமாட்டார்.

அரசியலில் நிரந்தர எதிரியும் இல்லை, நிரந்தர நண்பனும் இல்லை எண்ட சூத்திரத்தை மிகவும் இலாவகமாப் பயன்படுத்தியிருப்பார். ஒரு காலத்தில பதினைந்து மத்திய அமைச்சர்கள் இருந்த தமிழகத்திற்கு தற்போது சம்பிரதாயத்துக்காக கொடுத்த ஒரேயொரு இணை அமைச்சர் அதுவும் தமிழகத்தை ஆட்சிசெய்யும் ஜெயலலிதாவுக்கு இல்லை.

37 எம்.பி.க்கள் இருந்தும் இல்லாதது போல் ஜெயலலிதா இருப்பதை பார்த்து கலைஞர் கவலைப்படுவார். கலைஞர் ஆட்சியில் ஊழல், குடும்ப ஆதிக்கம் எண்டதெல்லாம் உண்மைதானுங்கோ. ஆனால் மத்தியையும், மாநிலத்தையும் அரசியலில் கையாளத் தெரிஞ்ச மனிசன்.

அதிகாரத்தை எத்தகைய கதைகளைச் சொல்லியும் பெறலாமுங்கோ, அதை மக்களுக்கும் தான் வாழும் மண்ணுக்கு பலனுள்ளதாகவும், அர்த்தமுள்ளதாகவும் பிரயோகிக்காட்டில் அதனால் நன்மை என்னங்கோ.

37பேர் பார்ளிமெண்டுக்கு போவினம், வருவினம் அதாலை தமிழ் நாட்டு மக்களுக்கு என்ன பயன். ஒண்டுமில்லையே. நன்பர் ஒருவர் சொன்னார். கலைஞர் புதிய கட்டடங்களைக் கட்டுவார், ஜெயலலிதா ஆட்சிக்கு வந்ததும் கலைஞர் கட்டின கட்டடங்களை பிழைகூறி வேறு தேவைக்கு மாற்றி மீள்திறப்புச் செய்வார். அதைத்தவிர புதிதாக எதையும் செய்ய முயற்சிக்கமாட்டார் என்று.

மத்திய அரசோடு தனிப்பட்ட கட்சி சார்பு அரசியல் இணக்கப்பாடு காண முடியாவிட்டாலும், மாநிலத்தின் அல்லது மாகாணத்தின் வளர்ச்சி, அபிவிருத்தி, பொருளாதார மேம்பாடு இன்னும் பல மக்கள் நலன் சார்ந்த விடயங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு சாணக்கியமாக பொதுநலன் சார்பு இணக்கமொன்றை ஏற்படுத்திக்கொள்வது அவசியம். இல்லாவிட்டால் அதிகாரங்கள் இருந்தும் இல்லாததுபோல்தான் இருக்கும். அதுவும் மத்தியில் தொங்குநிலை இல்லாமல் ஸ்தீரணமான அரசு அமையுமானால் இத்தகைய தந்திரோபாயங்கள் மிகவும் முக்கியமாகும்.

தமிழ் நாட்டைப் பற்றிச்சொல்வது புரியாதவர்கள், இங்கே மத்திய அரசும், உந்தக் கூத்தாடிகளின் அதிகாரங்களும் எப்படி உள்ளது என்பதை ஒப்பிட்டுப் பாருங்கோவன்.

"யாவும் கலப்படமற்ற கற்பனை"



# சத்ரபதி சிவாஜி

சிவாஜியின் வாழ்க்கை முழுவதும் போர்க்களத்திலேயே கழிந்தது என்றே கூறலாம். ஆரம்பத்தில், பீஜப்பூர் அரசிடமிருந்து கோண்டாக் கோட்டையைக் கைப்பற்றி அதற்கு சிம்ஹகட் என்று பெயர் மாற்றம் செய்ததையும், பிறகு தன் தந்தையின் உயிர்காக்க அக்கோட்டையை மீண்டும் பீஜப்பூர் சுல்தானுக்கே விட்டுக் கொடுத்தது பற்றியும் முன்பே கூறியிருக்கிறோம்.

பீஜப்பூர் சுல்தானிடமிருந்து, கோண்டனாக் கோட்டை மொகாலயச் சக்கரவர்த்தி ஔரங்கசீப்பின் கைக்குப் போயிற்று. கோட்டை, ராஜபுத்திரப் படையின் பாதுகாப்பில் இருந்தது. சிம்ஹகட்டை (கோண்டனா) மீட்கத் திட்டமிட்டார் சிவாஜி. திறமைமிக்க தன் மாவலி சேனாதி தானாஜி மால் சரேயிடம் அப்பொறுப்பை ஒப்படைத்தார். தானாஜி, தேர்ந்தெடுத்த முந்நூறு வீரர்களுடன் சென்றவர், இரவில் நூலேணி மூலம் மலைமீது ஏறி, கோட்டைக்கு வெளியே நின்ற காவலர்களைக் கொன்றுவிட்டு. இரகசிய வழியாகக் கோட்டைக்குள் புகுந்துவிட்டார்.

ராஜபுத்திர வீரர்கள் எதிர்த்தபோது 'ஹர ஹர மகாதேவ்' என்று கோஷமெழுப்பி அவர்கள் மீது பாய்ந்தனர் மாவலி வீரர்கள். கடும் போர் நிகழ்ந்தது. இராஜபுத்திர சேனாதிபதி உதயமான் தானாஜிடம், என்னோடு போரிட்டு வென்றபின் கோட்டையை உனதாக்கிக் கொள்ளலாம் என்று சவால்விட்டான். இருவரும் வாளை உருவிக்கொண்டு மோதினார்கள். ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் இல்லை. ஆகவே தனிப்போரில் இருவருமே மாண்டனர்.

தொடரும்...

# இந்தவாரம் உங்கள் பலன்

05.06.2014 தொடக்கம் 11.06.2014 வரை)

## மேடம்

வேலையில்லாத படித்த இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் வந்துசேரும். கணவன் – மனைவி உறவுகளில் கவனமுடன் இருத்தலோடு, முன்கோபம் தவிர்த்தல் நல்லது. உற்றார், உறவினர்களால் மனச்சஞ்சலம் வந்துசேரும். பூர்வீகச் சொத்துக்கள் போன்ற நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு நல்லதொரு தீர்ப்புகள் வந்துசேரும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் கவனமுடன் பேசிப்பழகவும். பிள்ளைகளால் பொருள்வரவு உண்டாகுவதுடன் அவர்களாலேயே காணாமற் பொருட்செலவுகளும் வந்துசேரும். யாத்திரையின்போது சம்பந்தம் இல்லாத புதிய நபர்களால் சிற்சில ஆதாயங்கள் அடையக்கூடும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## துலாம்

இரும்பு, இயந்திரம், இரசாயனம் போன்ற துறையைச் சார்ந்தவர்கள். பலசரக்கு, எண்ணெய், பழைய இரும்பு பொருட்கள் ஆகிய வியாபாரம் செய்வோர்கள், இன்சினியரிங் துறையை சார்ந்தவர்கள் ஆகியோர்கள் நற்பலன் அடைவார்கள். புதிய நண்பர்கள் சேர்கையால் எதிர்பாராத தனலாபம் அடைய வாய்ப்பு உள்ளது. வீடு மாற்றம் செய்வதற்கான முயற்சிகளில் சற்று காலதாமதம் ஏற்படலாம். எதிர்பாராமல் மஹான்களின் நல்லாசிகள் கிடைத்து அதனால் மனத்திருப்தி அடையலாம். புதிய நண்பர்கள் சேர்க்கையை தவிர்த்தல் நல்லது. உடம்பில் எலும்பு, நரம்பு சம்பந்தம் ஆகிய பிணிகள் வந்துபோகும். திருமணம் போன்ற சுபகாரியங்கள் சம்பந்தமாக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். தந்தை – மகன் உறவுகள் நன்றாக இருக்கும்.

## இடபம்

உடம்பில் காய்ச்சல், உஷ்ணம் ஆகிய உபாதைகள் வந்துபோகும். கூட்டுத்தொழில் முயற்சிகளில் மிகுந்த கவனமுடன் செயற்படுவது நல்லது, தீர்த்த யாத்திரைகள் சென்றுவர எண்ணுவீர்கள். நீண்டதூரப் பயணங்களின்போது பெரிய மனிதர்கள் சந்திப்பு ஏற்பட்டு அவர்களால் சில காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். இதுவரை இருந்துவந்த பொருளாதார நெருக்கடிகள் மாறி மனச்சந்தோசம் அடைவீர்கள். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமண காரியம் கைகூடும். தூரத்து உறவினர்களின் வரவால் எதிர்பாராத பொருட்செலவுகள் உண்டாகும். பழைய கடன்களை அடைத்துப் புதிய கடன் வாங்குவீர்கள். காதல் விசயங்களில் மிகுந்த மனச்சந்தோசம் ஏற்படும்.

## விருச்சிகம்

உடல்நிலையில் அலர்ஜி மற்றும் தொற்றுநோய் போன்ற உபாதைகள் வரக்கூடும் என்பதால் உண்ணும் உணவில் கவனம் தேவை. பொருளாதார நெருக்கடியில் மனைவி அல்லது மனைவி வழிச்சொந்த பந்தங்களால் மாற்றம் உண்டாகி மனநிறைவை அடைவீர்கள். காணாமற்போன பொருட்கள் சம்பந்தமில்லாத நபர்களால் வீடு வந்துசேரும். வீடுகளில் மிகுந்த கவனமுடன் இருத்தல் நல்லது. தாயின் உடல்நிலையில் இருந்து வந்த பாதிப்புகள் நீங்கி மருந்துவச் செலவுகள் குறையும். மனத்தைரியமுடன் எந்த காரியத்தையும் சிரத்தையுடன் செய்துமுடிப்பீர்கள். புதிய வீடு, நிலம் வாங்க எதிர்பார்த்திருந்த கடன்கேட்ட பணம் கை வந்துசேரும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## மிதுனம்

விட்டுப்போன பழைய உறவுகள் மீண்டும் தொடரவாய்ப்பு உள்ளது. வேலை இல்லாத படித்த இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் சம்பந்தமாக பிரயாணங்களை மேற்கொள்வீர்கள். நண்பர்களால் புதிய தொழில் முயற்சிகள் மற்றும் புதிய கடன் வாங்குவதுபோன்ற முயற்சிகளில் வெற்றிபெறுவீர்கள். காதல் சம்பந்தமான விசயங்களுக்காக வீண் பொருட்செலவுகள் ஏற்படலாம். மற்றவர்களுக்காக ஜாமீன் போடுவதைத் தவிர்க்கவும். தந்தை – மகன் உறவில் இருந்துவந்த பிரச்சினைகள் தீரும். விவசாயிகளுக்கு இலாபம் உண்டாகும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## தனுசு

வெளிநாடுகளில் இருந்து நல்ல செய்திகளைக் கேட்பீர்கள். பொதுப்பணிகளில் ஈடுபடுவோர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லதாகும். நண்பர்களின் உதவியால் புதிய தொழில் துவங்கப்போட்ட திட்டங்கள் தடையின்றி நிறைவேறும். குடும்பத்தில் காரணமற்ற மனக்கசப்புகள் வந்துபோகும். வங்கிகளின் உதவியால் எதிர்பார்த்திருந்த கடன்தொகைகள் தாமதமின்றி உடன் கிடைக்க வாய்ப்பு உள்ளது. வராத பணம் மற்றும் பொருட்கள் திரும்பக் கை வந்துசேரும். குழந்தைகளுக்காக திடீர் மருத்துவச்செலவுகள் ஏற்படும். விபரீதமான எண்ணங்களை விட்டுச் செயற்பாட்டில் கவனம் செலுத்துங்கள்.

## கடகம்

வடக்குத் திசையில் இருந்து சில நற்செய்திகள் வந்துசேரும். அரசியல்வாதிகள் மிகவும் எச்சரிக்கையுடன் பணி ஆற்றுதல் சிறந்ததாகும். குழந்தைகளால் பெயர், புகழ் ஏற்படலாம். உற்றார், உறவினர்களால் மனநிம்மதி இன்மையும், காரணமற்ற பொருட்செலவுகளும் உண்டாகும். அரசியல்வாதிகளால் சில எதிர்பார்க்காத ஆதாயங்கள் அடைவீர்கள். விட்டுப்போன பழைய வழக்குகள் மீண்டும் தொடர்ந்து அவற்றில் வெற்றிபெறுவீர்கள். பொருளாதாரம் சுமாராகக் காணப்படும். வராத கடன்கொடுத்து இருந்த பணம் திரும்பக் கை வந்துசேரும் காலமாகும். நபர்களை சந்திப்பதில் காலதாமதம் ஏற்படலாம்.

## மகரம்

விட்டுப்போன பழைய பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கும். மற்றவர்களின் விசயங்களில் அநாவசியமாகத் தலையிட்டு வீண்சிக்கலில் மாட்டிக்கொண்டு அவதிப் படாதீர்கள். கலைத்துறையினர்கள் மற்றும் அரசியல்வாதிகளிடம் ஏமாற்றம் அடையாமல் இருங்கள். அரசியல்வாதிகளிடம் இருந்து எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். கணவன், மனைவி உறவுகளில் பிரச்சினைகள் வந்து நீங்கும். உற்றார், உறவினர்களின் வரவால் மனமகிழ்ச்சியும் நிம்மதியும் வந்துசேரும். உத்தியோகத் துறையினர்கள் மேலதிகாரிகளிடம் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளவும். புதிய நண்பர்கள் சேர்க்கையால் கூட்டுத்தொழில் முயற்சிகளில் எதிர்பாராத இலாபம் அடையலாம்.

## சிங்கம்

செல்வ செல்வாக்கு, புகழ்கூடும். இதுநாள் வரையில் இருந்துவந்த பொருளாதார நெருக்கடிகள் மாறி தேவையான பொருள்வரவு உண்டாகும். குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்துவருவதற்கான வாய்ப்பு உள்ளது. வீடு மற்றும் வாகனங்களைப் பழுது பார்ப்பதன்மூலம் பொருட்செலவுகள் ஏற்படலாம். பெரிய மனிதர்கள் சந்திப்பால் சிலகாரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். விருந்தினர் வரவால் மனமகிழ்ச்சியும் பொருள் வரவும் உண்டாக வாய்ப்புகள் உள்ளது. ஆலயத் திருப்பணிகளில் பங்குகொண்டு மனமகிழ்ச்சி அடைய வாய்ப்பு உள்ளது. புதிய வீடு, நிலம் வாகனங்களை வாங்கக்கூடிய காலமாகும்.

## கும்பம்

உணவு உண்ணுதல் மற்றும் நித்திரை போன்றவற்றில் காலதாமதம் ஏற்படலாம். ஒரு சிலருக்குப் புதிய வீடு மாற்றம் உண்டாகும். காணாமற்போனபொருட்கள் காவல் துறையினர்களால் திரும்பக் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது. தொலைதூரப் பயணங்களில் மிகுந்த கவனமுடன் சென்றுவருதல் நல்லது. தாய் வழிச் சொந்தபந்தங்களால் ஆதரவுகள் வந்துசேரும். நாட்பட்ட சொத்து விசயமான அரசு வழக்குகளில் சாதகமான நல்ல தீர்ப்புகளை எதிர்பார்க்கலாம். நெருப்பு தொழில், காவல்துறை, இராணுவம்போன்ற துறை சார்ந்தவர்கள் ஆகியோர்கள் இலாபம் அடைவீர்கள். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## கன்னி

காதல் சம்பந்தமான விசயங்களில் மிக கவனம் தேவை. அடிமை ஆட்களால் பொருட்செலவுகளும் மனநிம்மதிக் குறைவும் ஏற்படலாம். தேவை இல்லாமல் பழைய பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்க வாய்ப்பு உள்ளது. குலதெய்வ வழிபாடு செய்து வருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். சம்பந்தம் இல்லாத நபர்களால் காணாமற்போன பொருட்கள் திரும்ப வீடு வந்துசேரும். புதிய தொழில்களை ஆரம்பம் செய்ய எண்ணுவீர்கள். உறவினர்களின் வருகையால் பொருள்வரவு உண்டாகும். காதல் சம்பந்தமான விசயங்களில் நல்ல செய்திகள் கிடைக்கும். வெளிநாடு சென்றுவருதல் சம்பந்தமான முயற்சிகளில் நல்ல செய்திகள் வந்துசேரும்.

## மீனம்

காதல் சம்பந்தமான விசயங்களில் நல்ல தகவல்கள் வந்துசேரும். மிகுந்த பிரயாசையின் மேல் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைச் சமாளித்து கொள்வீர்கள். பிள்ளைகளின் சுபகாரிய நிகழ்ச்சிகளுக்கான முயற்சிகளில் நல்ல செய்திகளைக் கேட்பீர்கள். வங்கிகளில் இருந்து எதிர்பார்த்து இருந்த பணம் கிடைக்கும். தென்திசையில் இருந்து எதிர்பாராத நல்ல செய்திகள் வந்துசேரும். பிள்ளைகளால் தனவரவும், மனநிம்மதியும் உண்டாகும். ஒரு சிலருக்கு வீடு மாற்றங்கள் ஏற்படலாம். கண்களில் கவனம் தேவை. வீடுகளைப் புதுப்பித்துக் கட்டப்போட்ட திட்டங்களில் காலதாமதம் ஏற்படும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)


# தேசிய சேமிப்பு வங்கி மூலம்

## மனதில் உருவான கனவு இல்லத்தை நனவாக்கிக்கொள்ள




PUBLIC LIBRARY
JAFFNA.

# வீட்டுக் கடன்!

- உங்களுக்கென ஒரு வீட்டை அமைத்துக்கொள்ள அல்லது கொள்வனவு செய்ய
- வீடு ஒன்றை அமைத்துக்கொள்வதற்கான காணியை வாங்க
- வீடமைப்பு நிர்மாணப் பணிகளை நிறைவு செய்ய, புனர்நிர்மாணம் அல்லது பகுதியை இணைத்துக்கொள்ள
- வீட்டை நவீனமயப்படுத்தல் மற்றும் வீட்டுத் தோட்டங்களை அழகுபடுத்தல்
- வீடமைப்பு சம்பந்தமாக ஏனைய நிதி நிறுவனங்களிலிருந்து பெற்ற கடனை மீளச் செலுத்துதல் உட்பட உங்களது அனைத்து வீட்டுத் தேவைகளுக்கும்

மிகக்குறைந்த வட்டியுடன் வீட்டுக்கடன்

- மறைமுகக் கட்டணங்கள் எதுவுமில்லை
- உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்து பெறவேண்டிய ஆவணங்கள் உட்பட தேவையான காகிதாதிகளுக்கான துரித சேவை
- காணிகளுக்கு பிணையாக தனிநபர் கடன் வசதி

வருமானம் தொடர்பான விபரங்களுடன்

**அருகிலுள்ள NSB கிளைக்கு இன்றே விரையுங்கள்!**

கடமை புரியும் 24 மணித்தியாலங்களில் Express வீட்டுக்கடனை உங்களுக்குப் பெற்றுத்தருதல்.

தலைமை அலுவலக கடன் பிரிவு மற்றும் கண்டி, ஜா-எல, மொறட்டுவ, கிருலப்பனை, யக்கல, பதுளை, இரத்தினபுரி, மாத்தறை. குருநாகல் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய கிளைகளில்

நிபந்தனைகள் அடங்கும்

NSB

துரித அழைப்பு 0112379379

Fitch Rating: AAA (lka)




இப்பத்திரிகை 373, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புகன் அச்சகத்தில் டி-டி என்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ஜூன் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

**AXSHAYA CONSTRUCTION JAFFNA**

கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், பழைய வீடு களைத் திருத்துதல், குளியலறை கட்டுதல்
Plumbing, Electrical, Painting
அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும் குறித்த காலத்திலும் செய்து கொடுக்கப்படும்.
தொடர்புக்கு: 0776679564
(C/3690)

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 22 வியாழக்கிழமை (05.06.2014) பக்கங்கள் IV ஓசை – 247

## ஆஸி.செல்ல முயன்றவேளை வடபகுதி இளைஞர்கள் கைது

மொரட்டுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லுனாவ பிரதேச விடுதியொன்றிலிருந்து வட மாகாணத்தைச் சேர்ந்த 13 இளைஞர்களை பொலிஸார் நேற்று முன்தினம் இரவு கைது செய்துள்ளனர்.


குறித்த பிரதேசத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸாராலேயே மேற்படி 13 பேரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள், நெடுங்கேணி, முள்ளியவளை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபரொருவர், மேற்படி இளை

IV ஆம் பக்கம் பார்க்க

## தவறான அரசியல் வழி நடத்தலே நாடு இரத்தத்தில் மூழ்கக் காரணம்



### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஒருகால கட்டத்தில் இந்நாடு தவறான அரசியல் வழிநடத்தல்களினாலேயே இரத்தத்தில் மூழ்கடிக்கப்பட்டதாகவும், அக்கொடிய யுத்தத்திற்கு ஜனாதிபதி முற்றுப்புள்ளி வைத்துள்ளார் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற உலக இரத்ததான தினம் - 2014

IV ஆம் பக்கம் பார்க்க

# வாக்கு வங்கியைத் தக்கவைக்கும் சுயநல அரசியலில் கூட்டமைப்பு



### குற்றஞ்சாட்டுகிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

தமது சுயநல அரசியலைச் செய்வதற்காக தமிழர்களின் வாக்குகளைத் தக்கவைக்கும் தந்திரத்தினை மேற்கொண்டு வருகிறது கூட்டமைப்பு என ஜே.வி.பி. குற்றம் சாட்டியுள்ளது. இது தொடர்பாக கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளதாவது,

யுத்தக் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணையொன்றினைக் கோருவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடகமாகும். ஏனெனில் சர்வதேச விசாரணையொன்று இடம்பெறுவதனால் நாட்டின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படப் போவதில்லை.

மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரம் வழங்கப்படாது என்ற அரசாங்கத்தின் கருத்துத் தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர்

IV ஆம் பக்கம் பார்க்க

## தபால் ரயில்-டிப்பர் முறிகண்டியில் மோதல்

### இருவர் காயம்

(கிளிநொச்சி)

கொழும்பிலிருந்து பளை நோக்கிப் பயணித்த இரவு நேர தபால் ரயிலில் டிப்பர் வாகனமொன்று மோதி விபத்துக்குள்ளானதில் அவ்வாகனத்தில் பயணித்த இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 10.00 மணியளவில் கிளிநொச்சி கொக்காவிலுக்கும் முறிகண்டிக்கும் இடைப்பட்ட பகுதியிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

காயமடைந்தவர்கள் கிளிநொச்சி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 13 குறித்த அரசின் நிலை இந்தியாவிற்கு விளக்கம்

### கூறுகிறார் அமைச்சர் பீரிஸ்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் புதுடில்லியில் நடைபெற்ற சந்திப்பின் போது 13 ஆவது திருத்தச் சட்டம் குறித்த இலங்கையின் நிலைப்பாட்டை தெளிவாக விளக்கியதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது என இலங்கை பிரதிநிதிகளுக்கு தலைமை தாங்கிய ஜனாதிபதி கூறியதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல்.பீரிஸ் நேற்றைய தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கும் இந்தியப் பிரதமருக்குமிடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது 13 ஆவது திருத்தத்தை அமுல் செய்ய வேண்டுமென்றும் அதற்கு அப்பால் சென்று அதிகாரப் பரவலாக்கலுடன் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்க வேண்டுமென்றும் இந்தியப் பிரதமர் வலியுறுத்தினார். இதன்போது இலங்கை

IV ஆம் பக்கம் பார்க்க

## இராணுவ ஜெனரலாக பொன்சேகா இல்லை

### அரசு அறிவிப்பு

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை இராணுவ ஜெனரலாக ஒருபோதும் அங்கீகரிக்க முடியாது என அரசாங்கம் நேற்று அறிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அமைச்சர் தினேஷ் குணவர்தன,

பொன்சேகாவுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு அவர் குற்றவாளியாக இணங்காணப்பட்டதால், அவர் இராணுவப் பட்டத்தை இழந்தார் எனக் கூறியுள்ளார்.

படைகளின் தலைமை கட்டளை அதிகாரியான சரத் பொன்சேகாவிற்கு எதிராக இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பில் ஜனாதிபதி 2010 ஆம் ஆண்டு கையெழுத்திட்டார்.

இதனையடுத்து அவரது ஜெனரல் பட்டம், இராணுவத்தில் பெறப்பட்ட பதக்கங்கள் மற்றும் ஓய்வூதியம் என்பன பறிக்கப்பட வேண்டும் என உத்

IV ஆம் பக்கம் பார்க்க

## தீர்வுத்திட்டம் தயாரிப்பதற்கு மக்களின் கருத்துக் கேட்கும் கூட்டமைப்பு



இனப்பிரச்சினை தொடர்பில் தென்னாபிரிக்க மத்தியஸ்தத்துடன் இலங்கை அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் பேச்சு இடம்பெறுவதற்கான சாத்தியம் உள்ளது. அதன்போது தீர்வுத்திட்டம் ஒன்றைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு கூட்டமைப்பு முடிவு செய்துள்ளதாகவும், இந்தத் தீர்வுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்து மக்களின் கருத்தறிய திட்டமிட்டுள்ளதாகவும், எனவே இந்த மாத இறுதிக்குள், பொது மக்கள், பொது அமைப்புக்கள், புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் தத்தமது கருத்துக்களைக் கூட்டமைப்பினரிடம் சமர்ப்பிக்க முடியும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முற்பகல், நீர்வேலியில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளை அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் இந்த அறிவிப்பை விடுத்தார். அங்கு அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், இலங்கையில் நீண்டகாலமாகத்

IV ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதியின் நீதிமன்ற தலையீடே சர்வதேச அழுத்தத்திற்கு காரணம்

### என்கிறார் ரணில்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நீதிமன்ற விவகாரங்களில் தலையீடு செய்வதனாலேயே சர்வதேச ரீதியாக அழுத்தங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். ஜனாதிபதி நீதிமன்ற விவகாரங்களில் தலையீடு செய்வதனால் சர்வதேச சமூகம் இலங்கையின் மனித உரிமை விவகாரங்கள் மற்றும் ஏனைய உரிமைப் பிரச்சினைகள் குறித்து குரல் எழுப்பி வருவதாக ஐ.தே.க.வின் நாடாளுமன்றக்

IV ஆம் பக்கம் பார்க்க

# 9 இளைஞர்கள் கைது

சந்தேகத்தின் பேரில் 9 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

கொட்டடி மற்றும் நாவாந்துறைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்களே நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இளைஞர்கள் அடையாள அட்டை இன்றி தமது வதிவிடத்தை உறுதிப்படுத்த முடியாத நிலையில் இருந்த போதே கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இளைஞர்களை நீதிமன்றில் ஆஜரப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (25)

# சட்டவிரோத மணல் ஏற்றிய 4 டிப்பர் சாரதிகள் கைது

சட்ட விரோத மணல் ஏற்றிச் சென்ற 4 டிப்பர் வாகனச் சாரதிகளைக் கைது செய்துள்ளதாக சுன்னாகம் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர். கிளிநொச்சியில் இருந்து காங்கேசன் துறை நோக்கி மணலினை வழித்தடம் மாற்றிக் கொண்டு சென்ற வேளையில் மருதனார் மடம் பகுதியில் வைத்து நேற்றுக் காலை கைது செயயப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி, மிருசுவில், வவுனியா போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த டிப்பர் வாகனச் சாரதிகளே கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட 4 டிப்பர் வாகன சாரதிகளையும் மணல் மற்றும் டிப்பர் வாகனத்தினையும் இன்று நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். (25)

# "கண்ணீர் பூக்கள்" நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி ஆசிரியை திருமதி நஸ்பியா அஜித் எழுதிய 'கண்ணீர் பூக்கள்' சமூக நாவல் வெளியீட்டு விழா நாளை மாலை 4 மணிக்கு யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி மஹமுத் மண்டபத்தில் அதிபர் எம்.எஸ்.ஏ.எம்.முபாரக் தலைமையில் நடைபெறும்.


இவ்விழாவிற்கு இனிய விருந்தினர்களாக யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம், கோப்பாய் ஆசிரிய கலாசாலை முதல்வர் வே.கா.கணபதிப்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள்.

யாழ்.முஸ்லிம் தமிழ் உறவு பரம்பரை வாழ்வு வெளியேற்றத்தினால் ஏற்பட்ட உளத்தாக்கம், பெண்களின் கண்ணீர்க் கதை, போன்ற உண்மைச்சம்பவங்களின் சில துளிகளாக இந் நாவல் வெளியிடப்படுகின்றது.

யாழ்.உலமா சபைத்தலைவர் ஏ.எம்.அனிஸ் ஆசியுரை வழங்க கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திருமதி எம். ஜெயக்குமாரி நூல் அறிமுகவுரையை நிகழ்த்துவார்.

நூலின் முதற்பிரதியை கலாபூசணம் மீ.லாபிர் பெற்றுக் கொள்வார். யாழ்.ஒஸ்மானியக் கல்லூரியின் மாணவர்களின் இஸ்லாமியக் கலை நிகழ்வுகளும இடம்பெறவுள்ளன. (105)

# குருதிக்கொடையாளர்கள் யாழில் கௌரவிப்பு




(யாழ்ப்பாணம்)

11 ஆவது சர்வதே இரத்ததான தினம் நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் கொண்டாடப்பட்டதுடன், குருதிக் கொடையாளர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

குருதி மாற்றுச் சேவையின் வைத்திய கலாநிதி தம்மிகா செனவரட்ண தலைமையில் இந் நிகழ்வு நடைபெற்றது. இதன் போது யாழ்ப்பாணம், தெல்லிப்பளை, பருத்தித்துறை, கிளிநொச்சி போன்ற பகுதிகளைச் சேர்ந்த 1411 பொது மக்களும், முப்படையைச் சேர்ந்த 280 வீரர்களும் குருதிக் கொடையாளிகளாக இனங்காணப்பட்டு சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி உட்பட யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா மற்றும் ஆளுநரின் செயலாளர் எல். இளங்கோவன், யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதியர்கள், குருதிக் கொடையாளர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். இதன் போது கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (25)

# மரநடுகை நிகழ்வு

உலக சுற்றுச் சூழல் தினத்தினை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையானது மருதங்கேணி, சாவகச்சேரி, தெல்லிப்பளை, ஆகிய பிரிவுகளில் உள்ள உடுத்துறை மகாவித்தியாலயம், கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, அழியாவளை சி.ரி. எம். வித்தியாலயம் மற்றும் பனாலை சிறி கனகசபை வித்தியாலயம் ஆகிய 5 பாடசாலைகளில் மர நடுகையினை செயற்படுத்தவுள்ளதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத்தலைவர் கு.பாலகிருஸ்ணன் அறிவித்துள்ளார்.

# நாவற்குழி, கைதடி பாலங்கள் புனரமைப்பு; முதற்கட்ட பணிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி - கைதடி பாலங்கள் புனரமைப்பு பணிகளுக்கான பூர்வாங்க பணிகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன.

ஏ - 9 வீதியில் யாழ்.மாவட்டத்திலுள்ள இவ்விரு பிரதான பாலங்களும் இரும்புப் பாலமாக உள்ள இவை நிரந்தரமான கொங்கிறிற் பாலங்களாக புனரமைப்பு செய்யப்படவுள்ளன. இதற்காக நிலப் பரிசோதனைகள் கடந்த வாரம் முதல் பொறியியலாளர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மிக விரைவில் இப்பாலப்புனரமைப்பு பணிகள் இடம்பெறும் எனவும், இதற்கான மாற்றுப் பாலம் ஒன்று அமைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

# ஸ்கந்தபுரத்தில் இன்று நடமாடும் சேவை

சட்ட உதவி ஆணைக்குழுவின் கிளிநொச்சி செயலகத்தால் சட்ட உதவிச்சேவைகளினால் தொலைந்துபோன ஆவணங்களைப் பெறுவதற்கான நடமாடும் சேவை ஸ்கந்தபுரம் பிரதேசத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான நடமாடும் சேவை இன்று காலை 9.30 மணி தொடக்கம் 1.30 மணி வரை ஸ்கந்தபுரம் சந்தைக் கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், இறப்புச் சான்றிதழ், காணி தொடர்பான பிரச்சினைகள், திருமணச் சான்றிதழ்கள் மற்றும் இலவச சட்ட உதவிகளைப் பெறமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (69)


அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

**நியத்த ஜய**

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் - 261

திகதி - 2014.06.03

வர்ணம் - மஞ்சள்

வெற்றி இலக்கங்கள் | ஆங்கில எழுத்து

08 32 35 55 D

பரிசுத் தொகை ரூபா. 20,529,700/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 08 | 400,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 182 | 182,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 330 | 330,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 8031 | 481,860/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4219 | 168,760/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 105558 | 2,111,160/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 15407 | 308,140/- |
| நான்கு இலக்கங்கள மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 20,529,700/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 4,981,920/- |

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 20,736,240/-

2014.06.06ம் திகதி வெள்ளிக்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது நீல வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.

தொ.பே: 011 2333546/47

web : www.dlb.lk

(C/3698)


# ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

எல்.பி.பினான்ஸ் நிறுவனத்தில் அடகு வைத்து மீட்கப்படாத தங்க நகைகள் பகிரங்க ஏலத்தில் விற்பனை மேற்கொள்ளப்படவுள்ளன.

வவுனியா, கிளிநொச்சி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம், மானிப்பாய், சுன்னாகம், நெல்லியடி, ஆகிய இடங்களில் உள்ள நிறுவனத்தின் கிளைகள் அடுத்த மாதம் 5 ஆம், 11 ஆம், 18 ஆம், 25 ஆம் திகதிகளில் ஏல விற்பனை நடைபெறுவிருப்பதாக அடகுச்செயற்பாடுகள் பகுதி அறிவித்துள்ளது. (105)


**சிறுவிளம்பரம்**

**டயானா பிளாஸ்ரிக்**

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3376)


# இருவிழாக்கள்

(யாழ்ப்பாணம்)

நம்நாட்டுக் கலைஞரான விமல்ராஜின் பூம்புகார் குறும்பட அறிமுக விழாவும், இசைப்பிரியனின் பனைமரக்காற்று பாடல் வெளியீட்டு விழாவும் எதிர்வரும் சனிக்கிழமை மாலை 6 மணிக்கு யாழ்.பூம்புகார் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நல்லூரான் கலைத்தாய் மன்ற உப தலைவர் சாயியன் தலைமையில் நடைபெறவுள்ளது.

# விழிப்புணர்வுச் செயலமர்வு

(கிளிநொச்சி)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் சமூக அபிவிருத்தி பிரிவினால் முன்னெடுக்கப்படும் சர்வதேச புகைத்தல் மற்றும் மது எதிர்ப்பு தினமும் கொடி வாரமும் தற்போது அனுஸ்டிக்கப்பட்டு வருகிறது.

ஸ்கந்தபுரம் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி வங்கியினால் விழிப்புணர்வு செயலமர்வு நடத்தப்படவுள்ளது.

இச்செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை 10 மணியளவில் ஸ்கந்தபுரம் முருகன் ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது.

இதில் வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான், அக்கராயன், ஸ்கந்தபுரம், கண்ணகைபுரம், கோணாவில், புதுமுறிப்பு, ஊற்றப்புலம், உருத்திரபுரம் வடக்கு, உருத்திரபுரம் மேற்கு, சிவநகர் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த பொதுமக்கள் இச்செயலமர்வில் கலந்து கொண்டு பயன்பெறமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (69)

# காதலித்து கர்ப்பமாக்கிய பெண்ணை திருமணம் செய்ய மறுத்தவருக்கு மறியல்

பெண்ணொருவரைக் காதலித்து கர்ப்பமாக்கிவிட்டு அவரைத் திருமணம் செய்ய மறுத்த வரணி வாசியொருவரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதவான் ஸ்ரீநிதி நந்தசேகரம் நேற்று உத்தரவிட்டார்.

இது பற்றித் தெரியவருவதாவது,

வடமராட்சியினைச் சேர்ந்த குறித்த பெண்ணுக்கும் ஏற்கனவே திருமணமாகி ஒரு குழந்தையிருப்பதுடன், அவரது கணவன் அவரை விட்டுப்பிரிந்து சென்றுவிட்டார்.

இந்நிலையில் பருத்தித்துறை, முல்லைத்தீவு பஸ் சாரதியான மேற்படி வரணி வாசியுடன் பஸ்ஸில் சென்று வருகையில் காதல் வயப்பட்டுள்ளனர். இதன பின்னர் வரணி வாசி மூலம் குறித்த பெண் கர்ப்பம் தரித்த நிலையில், தன்னைத் திருமணம் செய்யும்படி குறித்த பெண் வரணி வாசியிடம் கேட்டிருக்கின்றார்.

இருந்தும் அதற்கு அவர் மறுக்கவே குறித்த பெண் கொடிகாமம் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

பொலிஸார் குறித்த விடயத்தினை நீதிமன்றத்தின் கவனத்திற்கு கடந்த மாதம் 21ஆம் திகதி கொண்டு வந்தபோது, குறித்த நபர் கர்ப்பிணியான அந்தப் பெண்ணைத் தனது மனைவியாக ஏற்றுக்கொள்வதாக நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதனையடுத்து, குறித்த பெண்ணிடம் உமது முதல் குழந்தையினை என்ன செய்யப் போகின்றீர்கள் என நீதவான் கேட்டபோது, அதனைத் தனது தாயாரிடம் (குழந்தையின் அம்மம்மா) கொடுத்துவிட்டு இவருடன் செல்வதாகக் குறித்த பெண் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து அடுத்த தவணையன்று (நேற்று) திருமணம் செய்துகொண்ட திருமணச் சான்றிதழுடன் வருமாறு வரணி வாசிக்கு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில் சந்தேகநபரான வரணிவாசி 4 நாட்களுக்குப் பின்னர் குறித்த பெண்ணை வீட்டைவிட்டுத் துரத்தியுள்ளார்.

இந்நிலையில், நீதிமன்றத்தில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, மேற்படி விடயத்தினை குறித்த பெண், நீதவானிடம் தெரிவித்தார்.

அதன்போது, சந்தேகநபர் தனக்கும் இந்தப் பெண்ணின் கர்ப்பத்திற்கும் சம்பந்தமில்லையெனவும், அப்பெண்ணை ஏற்க முடியாது எனவும் தெரிவித்தார்.

இதனையடுத்து நீதவான் குறித்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறும், கர்ப்பம் தொடர்பாக மரபணு (டி.என்.ஏ) பரிசோதனை செய்து நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் கொடிகாமம் பொலிஸாரிற்கு உத்தரவிட்டார்.

# முல்லைத்தீவு நாயாறு கடற்பரப்பில் ஒளிபாய்ச்சி மீன் பிடித்தவர்களுக்கு தண்டம்

முல்லைத்தீவு நாயாறு கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறையான ஒளிபாய்ச்சி மீன்பிடியில் ஈடுபட்ட 18 மீனவர்களில் 8 பேருக்கு தலா 5 ஆயிரம் ரூபா தண்டமும், 10 பேருக்கு தலா 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலும் செல்ல முல்லைத்தீவு நீதிமன்ற நீதவான் மாணிக்கவாசகர் கணேசராசா நேற்று உத்தரவிட்டார்.

அத்துடன், 8 பேருடைய வள்ளங்கள் மற்றும் வலைகளை (சுருக்கு வலைகள்) அரசுடமையாக்கும்படியும், மிகுதி 10 பேரின் வள்ளங்கள் மற்றும் வலைகளை 3 இலட்சம் ரூபா காசுப் பிணையிலும் விடுவித்தார்.

நாயாறு பகுதியில் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறையான ஒளிபாய்ச்சி, வெளி மாவட்டங்களைச் சேர்ந்த 4 வள்ளங்களில் வந்த 18 மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர் என நேற்று அதிகாலை தகவலறிந்த முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வளத்துறையினர், கடற்படையினரின் உதவியுடன் கடலுக்குச் சென்று குறித்த மீனவர்களைக் கைது செய்ததுடன், அவர்களின் வள்ளங்கள், வலைகளையும் பறிமுதல் செய்தனர்.

தொடர்ந்து மேற்படி 18 மீனவர்களையும் நேற்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்திய போது, அவர்களில் 8 பேர் தங்கள் குற்றங்களை ஒப்புக் கொண்டனர். இதனையடுத்து அவர்களை தலா 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன், அவர்களின் வள்ளங்கள் மற்றும் வலைகளை அரசுடமையாக்கும்படி உத்தரவிட்டார்.

மேலும், மற்றைய 10 மீனவர்களும் தாங்கள் சுற்றவாளிகள் எனத் தெரிவித்ததினையடுத்து அவர்களை தலா 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலும், அவர்களின் உடமைகளை 3 இலட்சம் ரூபா காசுப்பிணையிலும் விடுவிக்க நீதவான் உத்தரவிட்டார்.

# அதிகாரிகள் இடமாற்றம்

கிளிநொச்சி மாவட்ட அதிகாரியாக கடமையாற்றிய இ. பரராஜசேகரம் யாழ்.மாவட்ட அதிகாரியாகவும், முல்லைத்தீவு மாவட்ட அதிகாரியாக கடமையாற்றிய எஸ்.பஞ்சலிங்கம் கிளிநொச்சி மாவட்ட அதிகாரியாகவும் நேற்று முதல் நியமிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் ஜே.ஜே.பெலிசியன் தெரிவித்துள்ளார்.

முதலாம் வகுப்பு அதிகாரிகளான இவர்கள் சேவை மூப்பு, திறமை அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட அதிகாரியாக கடமையாற்றிய திருமதி நவமணி ஜெயராஜா ஓய்வு பெற்றதனைத் தொடர்ந்தே இந்த இடமாற்றங்கள் நடைமுறைக்கு இடப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு பொருத்தமான மாவட்ட அலுவலர் மிக விரைவில் நியமிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (90)

# விண்ணப்பம் கோரல்

இலங்கை நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்தொகுதியில் காணப்படும் பதவி வெற்றிடங்களுக்கு நல்ல தேகாரோக்கியமும், சிறந்த நன்னடத்தையும் உடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

உதவிக் களஞ்சியக் காப்பாளர் (தொழில்நுட்பம்), பொருட்கள் ஏற்றும் உதவியாளர் ஆகிய பதவிகளுக்கு 18 தொடக்கம் 35 வயதுக்குட்பட்டவர்கள் க.பொ.த. (சா/த) பரீட்சையில் திறமைச்சித்தியுடன் சித்தியடைந்தவர்கள், தொழில்சார் அனுபவமுடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் பாராளுமன்ற செயலாளர் நாயகம், இலங்கை பாராளுமன்றம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, கோட்டே என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு www.Parliament.lk என்னும் இணையத்தளத்தில் பார்வையிடலாம். (105)

இலங்கை சட்டக்கல்லூரி 2015 ஆம் கல்வியாண்டுக்கு அனுமதிப்பதற்காக தகுதியான மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரிகள் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சட்டக் கல்விப் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட 3 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றவராகவும், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில மொழியிலும், தமிழ், சிங்கள மொழியிலும் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளன்று 17 வயதுக்கு குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் 2014 செப்ரெம்பர் மாதம் கொழும்பில் மாத்திரம் நடைபெறும் நுழைவுப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் கல்விச் சான்றிதழ்களின் போட்டோப் பிரதிகளுடன் அதிபர், இலங்கை சட்டக் கல்லூரி, இல.244, புதுக்கடைத் தெரு, கொழும்பு-12 என்ற முகவரிக்கு 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 திகதிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். (10)

# நிறை குறைவான பாண் உற்பத்தி வெதுப்பகங்களுக்கு சீல்

## யாழ்.நீதவான் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பாணின் நிறையினைக் குறைவாகத் தயாரிக்கும் வெதுப்பகங்கள் மீது சீல் வைக்கப்படுமென யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி பொ.சிவகுமார் தெரிவித்துள்ளார்.

உரும்பிராய்ப் பகுதியில் உள்ள வெதுப்பகம் ஒன்று அண்மையில் பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையினால் பிடிக்கப்பட்டது.

குறித்த வெதுப்பகத்தினால் தயாரிக்கப்பட்ட பாண் 350 கிராம் நிறையுடையதாகக் காணப்பட்டது.

அந்த வகையில், குறித்த வெதுப்பகத்திற்கு எதிராக யாழ். நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அதன்போது, குறித்த வெதுப்பக உரிமையாளருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப் பணம் அறவிடப்பட்டதுடன், எதிர்காலத்தில் நிறை குறைவான பாண் தயாரித்தால் வெதுப்பகத்திற்கு 'சீல்' வைக்கப்படுமென வெதுப்பக உரிமையாளருக்கு எச்சரிக்கை விடுத்ததாகவும் பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் யாழ். மாவட்ட அதிகாரி தனசேகரம் வசந்த சேகரன் தெரிவித்தார். (25)

# திராட்சை செய்கையில் ஈடுபடும் 10 விவசாயிகளுக்கு கடனுதவி

(யாழ்ப்பாணம்)

திராட்சைப் பழச் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளில் 10 பேருக்கு 5 இலட்சம் ரூபா கடனுதவி வழங்கப்படவுள்ளதாக மாகாண அமைச்சின் யாழ்.மாவட்ட விவசாய கிளை முகாமையாளர் திருமதி கைலேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலகங்களின் கீழ் திராட்சைப் பழச் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள் 10 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கொமர்ஷல் பாமர்ஸ் என்ற அடிப்படையில் 2013 ஆம் ஆண்டு 10 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட 10 விவசாயிகளும் 5 இலட்சம் கடனுதவியின் அரைப் பகுதியினை (இரண்டரை இலட்சம் ரூபா) யாழ்.மாவட்டச் செயலகத்தில் உள்ள இலங்கை வங்கியில் எதிர்வரும் யூலை மாதத்திற்குள் வைப்புச் செய்தால் இரண்டரை இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் வழங்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். (25)

# சட்டத்திற்கு முரணான விற்பனை; 44 வர்த்தகர்கள் மீது நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர்களைப் பாதிக்கும் வகையில் சட்டத்திற்கு முரணாக பொருட்களை விற்பனை செய்த 44 கடை உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பாவனையாளர் அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவித்தனர்.

கடந்த மே மாதத்தில் 44 கடை உரிமையாளர்கள் கைது செய்யப்பட்டதுடன், 50 வர்த்தகர்கள் மீது 2 இலட்சத்து 32 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

பொருட்களின் நிறை, காலாவதியான திகதி மற்றும் சுகாதாரமற்ற முறை போன்ற பல்வேறு காரணங்களின் நிமித்தம் இவ்வாறான வர்த்தகர்கள் தொடர்பில் மக்கள் தெரிவித்த புகார்களை அடுத்து பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ, 25)

# பேருந்து நடத்துநர் துப்பாக்கிச் சூட்டில் பலி

(கொழும்பு)

பேருந்து நடத்துநர் ஒருவர் தங்கல்ல பேருந்து தரிப்பிடத்தில் வைத்து சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

தங்கல்ல பகுதியைச் சேர்ந்த பிரஹாத் என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத துப்பாக்கிதாரிகள் இருவரே நடத்துநர் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்துவிட்டு அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளனர்.

நேற்று முற்பகல் 11.50 மணியளவில் இடம்பெற்ற இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தங்கல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

# ஓரினச்சேர்க்கைக்கு உட்படுத்தியவருக்கு சிறை

மனநிலை பாதிக்கப்பட்ட ஆண் ஒருவரை ஓரினச்சேர்க்கைக்கு உட்படுத்திய யாழ். கொடிகாமம் பாலாவிப் பகுதியினைச் சேர்ந்த நபரொருவருக்கு ஒரு வருட கால சிறைத் தண்டனை விதித்து சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவான் ஸ்ரீநிதி நந்தசேகரம் நேற்று உத்தரவிட்டார்.

மேற்படி நபர் கடந்த 2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம், அதேயிடத்தினைச் சேர்ந்த மனநிலை பாதிக்கப்பட்ட ஒருவரை பாலாவி பகுதியிலுள்ள பற்றைக்குள் வைத்து ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுத்தியிருந்தார்.

தொடர்ந்து மேற்படி நபரைக் கைது செய்த கொடிகாமம் பொலிஸார், குறித்த நபருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, விசாரணை இடம் பெற்று வந்தது.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று நீதிமன்றத்தினால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, குறித்த நபர் தனது குற்றத்தினை ஒப்புக் கொண்டதனையடுத்து நீதவான் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

# மனைப்பொருளியல் கண்காட்சி யாழ்.பல்கலையில் இன்றும்

யாழ்.பல்கலைக்கழக மனைப்பொருளியல் பிரிவால் நடாத்தப்படும் மனைப் பொருளியல் கண்காட்சி நேற்று காலை 10.30 மணிக்கு ஆரம்பமானது.

பல்கலைக்கழக புதிய கலைக் கட்டடத்தில் நடைபெறும் இந்தக் கண்காட்சியினை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் மற்றும் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன் ஆகியோர் கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தனர்.



கண்காட்சியில் மனை நிர்வாகம், மனித விருத்தி, ஆடை நிர்மாணம், உணவும் போசனையும் எனும் நான்கு பிரதான பிரிவுகளை உள்ளடக்கியுள்ளதுடன் உணவுக் கூடம் (food court) எனும் பகுதியில் யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய உணவு வகைகள், உடனடி பழப் பான வகைகள், வெதுப்பக உற்பத்திகள் என்பவற்றுடன் விருந்தோம்பல் முகாமைத்துவம், ஹொட்டேல் தொழில்துறை தொடர்பில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவை தொடர்பில் விளக்கங்களும் வழங்கப்படுகின்றன.

மேலும், நவீன தையல் முறைமைகள், சமையல் உபகரணங்களின் பயன்பாடுகள் தொடர்பான விசேட காட்சிப்படுத்தல்களும், செயன்முறைப் பயிற்சிகளும் சிங்கர் நிறுவனம், கிறீன்கிறாஸ் ஹொட்டேல், கார்கில்ஸ் நிறுவனம் ஆகியவற்றின் துறைசார்ந்த நிபுணர்களால் இந்தக் கண்காட்சியில் வழங்கப்படுவதுடன்; மனைப்பொருளியலுடன் தொடர்பான விருந்தோம்பல் முகாமைத்துவம், ஹொட்டேல் தொழில்துறை தொடர்பான விசேட காட்சிப்படுத்தல்களும், விளக்கவுரைகளும் வழங்கப்படுகின்றன.

அதேவேளை, உணவு காட்சிக்கூடத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பாரம்பரிய உணவு வகைகள் சிலவற்றை பார்வையாளர்கள் ஆர்வத்துடன் வாங்கி ருசித்தனர்.

மனைப்பொருளியலை ஒரு பாடமாகக் கற்கும் யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்கள் மட்டுமன்றி வவுனியா, கிளிநொச்சி, கல்முனை மாவட்ட பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கண்காட்சியினைப் பார்வையிட்டனர். மாலை 4மணி வரை நடைபெற்ற இக் கண்காட்சி இன்றைய தினமும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தொடரை வென்றது இலங்கை




இங்கிலாந்து மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையிலான ஐந்தாவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 6 விக்கட்டுக்களால் வெற்றியீட்டி, தொடரைக் கைப்பற்றியுள்ளது.

பேர்மின்ஹாமில நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் 50 ஓவர்களில் 220 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலளித்தாடிய இலங்கை அணி 48.2 ஓவர்களில் 222 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் லஹிரு திரிமன்னே ஆட்டமிழக்காமல் 60 ஓட்டங்களையும், மஹேல ஜயவர்தன 53 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பில் ஜேம்ஸ் ட்ரெட்வெல் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 48.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 219 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. அலஸ்டெயார் குக் 56, இயன் பெல் 37 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றனர்.

இலங்கை அணி சார்பில் பந்துவீச்சில் லசித் மாலிங்க 3 அஜந்த மெண்டிஸ் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இதன்பிரகாரம் 5 போட்டிகளைக் கொண்ட இந்த தொடரை 3-2 என்ற கணக்கில் இலங்கை அணி கைப்பற்றியது. ஆட்டநாயகனாக திரிமன்னே, தொடர் நாயகனாக மலிங்க ஆகியோர் தெரிவாகினர்.

இதேவேளை இந்த வெற்றியின் மூலம் இலங்கை அணி தரப்படுத்தல்களில் இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளது. இரண்டாமிடத்தில் இருந்த இந்திய அணி மூன்றாமிடத்திற்கு பின் தள்ளப்பட்டுள்ள அதேவேளை இங்கிலாந்து அணி நான்கமிடத்தை தொடர்ந்தும் தக்க வைத்துள்ளது.

### ஆஸி.செல்ல...

ஞர்களை அவுஸ்ரேலியாவுக்கு அனுப்புவதாகக் கூறி தலா 10 ஆயிரம் ரூபா வீதம் பெற்றுக்கொண்டுள்ளார். அவ் இளைஞர்களை மொரட்டுவையிலிருந்து படகு மூலம் அவுஸ்ரேலியாவுக்கு அனுப்புவதாக அவர் உறுதியளித்த நிலையிலேயே தாங்கள் இப்பகுதிக்கு வந்து குறித்த விடுதியில் தங்கியிருந்ததாக கைது செய்யப்பட்ட இளைஞர்கள், பொலிஸாரிடம் கூறியுள்ளனர். இவர்களிடம் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற் கொண்டு வருவதாக பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

### தவறான...

நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்றைய உலக இரத்தான நிகழ்வில் கலந்துகொள்வதில் மகிழ்ச்சியடையும் அதேவேளை, இதனை ஏற்பாடு செய்த ஏற்பாட்டாளர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தானத்தில் சிறந்த தானமாக இரத்ததானம் கருதப்படுகின்றது. ஒரு காலகட்டத்தில் தவறான அரசியல் வழிநடத்தல்கள் காரணமாக இந்நாடு இரத்தத்தில் மூழ்கடிக்கப்பட்டிருந்தது.

அவ்வாறு இந்நாட்டில் இடம்பெற்று வந்த கொடிய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முற்றுப்புள்ளி வைத்தார்.

சர்வதேச நாடுகள் உலக இரத்ததான நிகழ்வை இலங்கையில் கடைப்பிடிக்க அங்கீகாரம் வழங்கியுள்ளமை சிறப்பம்சமாகும். எனவே, ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்ப எமது மக்கள் இவ்வாறானதொரு குருதிக் கொடையை வழங்குவதற்கு முன்வர வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

### வாக்கு...

மேலும் குறிப்பிடுகையில், மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரங்களை கொடுப்பது தமிழ் மக்களுக்கான தீர்வாக அமையப் போவதில்லை. தமிழ் மக்களை பாதுகாக்க வேண்டுமாயின் சுயாதீன விசாரணையினை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது வடக்கில் சுதந்திரமானதும் தமக்கான உரிமைகளை பெற்றுக் கொள்ளும் தீர்வு ஒன்றினை மட்டுமே. யுத்த கால கட்டத்தில் விடுதலைப் புலிகள் செய்தவையும் பின்னர் இராணுவ அடக்குமுறைகளும் தமிழ் மக்களை பெரிதும் பாதித்து விட்டதென்பதே உண்மை. அதனை நிவர்த்தி செய்து சமூகங்களை ஒன்றிணைக்கும் வேலைத்திட்டமே இன்று அவசியமாக உள்ளது. அதை விடுத்து மாகாண சபைகளுக்கான அதிகாரங்களையும் பொலிஸ் அதிகாரங்களையும் கேட்பது தற்போது அவசியமற்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

### இராணுவ...

தரவிடப்பட்டது. இராணுவ நீதிமன்றத்தில் அளித்த தீர்ப்பின் அடிப்படையில் சிறையில் அடைக்கப்பட்ட பொன்சேகா ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் இரண்டு ஆண்டுகளின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். எனினும் அவரது சிவில் உரிமைகளை புதுப்பிக்க முடியாது போனது.

அதேவேளை பொன்சேகாவுடன் நெருக்கமான தொடர்புகளை கொண்டிருந்த இராணுவத்தினர் அல்லது பொலிஸார் இலக்கு வைக்கப்படவில்லை எனவும் தினேஷ் குணவர்தன வலியுறுத்தியுள்ளார்.

### 13 குறித்த...

அரசாங்கம் வழங்கிய பதில் என்னவென்பதை இச்சபையில் அரசு வெளியிட வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று சபையில் கேள்வியெழுப்பினார்.

அத்துடன் இந்தியப் பிரதமரின் வலியுறுத்தலை அரசாங்கம் நிறைவேற்றுமா என்பது தொடர்பிலும் பதிலளிக்க வேண்டுமென்றும் எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்ததற்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

அனைத்து பிரச்சினைகள் பற்றியும் இதன் போது கலந்துரையாடப்பட்ட போதிலும் 13 ஆவது திருத்தம் பற்றி ஆழமாக கலந்துரையாடப்படவில்லை.

இலங்கைப் பிரதிநிதிகள் பார்வைகள் மற்றும் நிலைப்பாடுகள் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்தினர். பிரச்சினைக்கு தீர்வுகாண இலங்கையில் ஒருமித்த உடன்பாடு முக்கியமானது என வலியுறுத்தப்பட்டது.

மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை பகிர்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை நாங்கள் இந்தியாவிடம் மிகத் தெளிவாகத் தெரிவித்தோம்.

இலங்கை அரசாங்கம் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தாது அதில் சில திருத்தங்களைச் செய்ய வேண்டும். மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் குறித்து நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்துரையாடப்பட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை தொடர்ந்தும் புறக்கணிக்காது அதில் கலந்து கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

### ஜனாதிபதியின்...

குழுக் கூட்டத்தில் பங்கேற்ற போது அவர் தெரிவித்துள்ளார். நீதிமன்றக் கட்டமைப்பு சுயாதீனமான முறையில் இயங்குவதற்கு அரசாங்கம் அனுமதியளித்திருந்தால், யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்துமாறு சர்வதேச சமூகம் கோரியிருக்காது இலங்கை யில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச சமூகத்திடம் முறைப்பாடு செய்வோரை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, துரோகிககளாக அடையாளப்படுத்தி வருகிறார்.

எனினும், முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச ஆட்சிக் காலத்தில் பல தடவைகள் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜெனிவா சென்று ஆட்சியாளர்களுக்கு எதிராக முறைப்பாடு செய்திருந்தார் என்பதனை நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

ஆனால் பிரேமதாச ஆட்சிக் காலத்தில் நீதிமன்றக் கட்டமைப்பு சுயாதீனமான இயங்கிய காரணத்தினால் சர்வதேச சமூகம் இலங்கை விவகாரங்களில் தலையீடு செய்யவில்லை. உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை பரிந்துரைகளை உரிய முறையில் அமுல்படுத்துவதன் மூலமே சர்வதேச சுயாதீன விசாரணைகளை தடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### தீர்வுத்திட்டம்...

தொடரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பல்வேறு முயற்சிகளை நாம் முன்னெடுத்தோம். அவை காலத்துக்குக் காலம் இலங்கை அரசுத் தரப்பால் நிராகரிக்கப்பட்டும், தவறாக அர்த்தப்படுத்தப்பட்டும் பார்க்கப்பட்டதால் இழுபறியாகவே அவை முடிவடைந்தன. தற்போது தென்னாபிரிக்க அரசின் மத்தியஸ்தத்துடன் இலங்கை அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான பேச்சுக்கள் நடைபெறுவதற்கான ஏதுக்கள் தோன்றியுள்ளன.

இதன்போது எல்லாத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட - தமிழ்மக்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணக்கூடியதாக - தீர்வுத் திட்டம் ஒன்றைத் தயாரித்து முன்வைக்க நாம் திட்டமிட்டுள்ளோம். கடந்த 2011 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுத் திட்டம் தொடர்பில் விமர்சனங்கள் எழுந்தன. அவற்றைத் தவிர்க்கும் வகையில் நாம் இப்போது தயாரிக்கவுள்ள தீர்வுத் திட்டத்தில் அனைத்துத் தரப்பினரதும் கருத்துக்களை உள்ள வாங்கத் திட்டமிட்டுள்ளோம்.

எனவே, பொதுமக்கள், பொது அமைப்புக்கள் வெளிநாடுகளிலுள்ள புலம்பெயர் அமைப்புக்கள் தமது கருத்துக்களை இந்த மாத இறுதிக்குள் எம்மிடம் சமர்ப்பிக்க வேண்டுகிறோம்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அச்சுவேலிக்கிளையிலும், மார்ட்டின் வீதியிலுள்ள தலைமையகத்திலும் அபிப்பிராயங்களைச் சமர்ப்பிக்க முடியும். புலம்பெயர் அமைப்புக்கள் tnapropo sal@gmail.com என்ற மின்னஞ்சல் ஊடாகக் கருத்துக்களை அனுப்பி வைக்க முடியும் என்றார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூன் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.